www.padippakam.com



புலம் பெயர்ச்சூழலின்
அகத்தனிமைக்கு பலியாகிவிடாது
படைப்பாக்கிச் செல்லும்
சுமதி ரூபனுடைய இரண்டாவது
சிறுகதைத் தொகுப்பு இது.

எந்த முன்முடிவுகளும்,
பாசாங்குகளுமின்றி
வாழ்வின் மீதும்,
இருப்புசார் சூழலின் மீதும்
கேள்விகளை எழுப்பிச் செல்லும்
இச்சிறுகதைகள்
மனதைத் தொடும்
நுண் அலகுகளால்
நெய்யப்பட்டிருக்கிறது.

கையடக்கக்கூடிய அளவிற்கு
இசங்களும், கோட்பாடுகளும்
இல்லையென்றாலும்
இப்படைப்புகளூடாக எழுப்பப்படும்
கேள்விகள் அனைத்தும்
பெண்நிலை நகர்வை
கொண்டிருப்பவை.
சுயம் சார்ந்து இயங்குபவை
தன் இயல்பில்
சுதந்திரம் கொள்பவை.

கருப்புப் பிரதிகள்

# உறையும் பனிப் பெண்கள்



சுமதி ரூபன்

படிப்பகம்

www.padippakam.com

# உறையும் பனிப் பெண்கள்

சி று க தை க ள்

படிப்பகம்

www.padippakam.com


உறையும் பனிப் பெண்கள்

சுமதி ரூபன்

முதற் பதிப்பு : செப்டம்பர் 2010

வெளியீடு : **கருப்புப் பிரதிகள்**

பி74, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை,
சென்னை - 600 005. பேச : 94442 72500

மின்னஞ்சல் : karuppu2004@rediffmail.com


© சுமதி ரூபன்


அட்டை வடிவமைப்பு : கருணா, கனடா

நூல் : விஜயன், கிரியேட்டிவ் ஸ்டுடியோ

அச்சாக்கம் : ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை-600 005.

விலை ரூ. 60/-

**Urayum Pani Pengal (Sort Story Collection)**

**Sumathi Rooban**

First Published : September 2010

by **Karuppu Pirathigal**
B74, Pappu Masthan Darga, Lloyds Road,
Chennai, Tamil Nadu, India PIN - 600 005
email : karuppu2004@rediffmail.com Cell : 94442 72500


© Sumathi Rooban


Cover Design: Karuna, Canada

Layout : Vijayan, Creative Studio

Printed by : Jothy Enterprises, Chennai-600 005.

Price : Rs. 60/-


# உறையும் பனிப் பெண்கள்

சி று க தை க ள்

## சுமதி ரூபன்

கருப்புப் பிரதிகள்

படிப்பகம்

www.padippakam.com

## கருப்புப் பிரதிகள்

புலம் பெயர்ச்சூழலின் அகத்தனிமைக்கு பலியாகிவிடாது படைப்பாக்கிச் செல்லும் சுமதி ரூபனுடைய இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இது.

எந்த முன்முடிவுகளும், பாசங்குகளுமின்றி வாழ்வின் மீதும், இருப்புசார் சூழலின் மீதும் கேள்விகளை எழுப்பிச் செல்லும் இச்சிறுகதைகள் மனதைத் தொடும் நுண் அலகுகளால் நெய்யப்பட்டிருக்கிறது.

கையடக்கக்கூடிய அளவிற்கு இசங்களும், கோட்பாடுகளும் இல்லையென்றாலும் இப்படைப்புகளூடாக எழுப்பப்படும் கேள்விகள் அனைத்தும் பெண்நிலை நகர்வை கொண்டிருப்பவை. சுயம் சார்ந்து இயங்குபவை தன் இயல்பில் சுதந்திரம் கொள்பவை.

புலம்பெயர்ந்த பெண்களின் எழுத்துக்களில் சுமதி ரூபனிடம் தனித்துவமும் துணிச்சலும் அழகுற மிளிர்கிறது எக்ஸில், உயிர் நிழல் இதழ்களில் ஒரு வாசகனாய் படித்துக் கொண்டிருந்த அவருடைய எழுத்துக்களை தொகுப்புப்பாக்கி பதிப்பிக்கும் வாய்ப்பை நல்கிய சுமதிக்கும் அதை முன்நின்று சாத்தியமாக்கிய நண்பர் ஷோபாசக்திக்கும் நன்றிகள். நூலின் முகப்பை நேர்த்தியாக வடிவமைத்த கருணா, கனடா உள்வடிவமைப்பை ஒழுங்குபடுத்திய நண்பர் விஜயன் பதிப்பக உறுதுணைகள் அமுதா, சுகன், மதிவண்ணன், விஜய் ஆனந்த் (பெங்களூரு) உள்ளிட்ட நண்பர்களுக்கும் நன்றிகள்.

தோழமையுடன்

**நீலகண்டன்**

## உள்ளே...


அமானுஷ்ய சாட்சியங்கள் • 9
இருள்களால் ஆனகதவு.. • 17
ரெக்ஸ் எண்டொரு நாய்க்குட்டி • 24
பெண்கள்: நான் கணிக்கின்றேன் • 30
சூட் வாங்கப் போறன்.. • 36
நஷ்ட ஈடு • 42
வெளிச்சம் • 49
ஒரு நீண்ட நேர இறப்பு • 55
எனக்கும் ஒரு வரம் கொடு.. • 59
40+ • 65
மூளி • 76
உறையும்பனிப்பெண் • 83


படிப்பகம்

www.padippakam.com

# அமானுஷ்ய சாட்சியங்கள்

ஏதோ ஒரு வெளியில் விடுபட்டவளாய் கைகளை அகல விரித்துப் பறந்து கொண்டிருக்கிறேன். இது சுதந்திரத்தின் குறியீடு அல்ல. இருக்கைக்கும் இறத்தலுக்குமான போராட்டம். வானுக்கும் மண்ணுக்குமான இடைவெளி. ஆரம்பத்திற்கும் முடிவுக்குமான தத்தளிப்பு சிந்தனைகள் மாறி மாறி மோதி என்னைக் குழப்பத்திற்குள் தள்ளி விட... வெறுமனே பறந்த வண்ணம் நான்...

என்ர பெயர் நளாயினி. எல்லாரும் என்னை நளா நளா எண்டு கூப்பிடுவீனம். வயது 18. உயரம் 5'-6.5". கனேடிய உடுப்பு சைஸ் 8க்குள்ள என்ர உடம்பு கச்சிதமாகப் புகுந்து கொள்ளும். நீண்ட தலைமயிரை தூக்கி துணி ரப்பரால இறுக்கித் தொங்க விட்டிருப்பன். புதுசா ஏதாவது அலங்காரம் செய்ய ஆசை இருக்கு கூட கொஞ்சம் தயக்கமும் இருக்கு. கனடா வந்து மூன்று மாதங்கள். முழுநேரப் படிப்பு. பகுதி நேர வேலை எண்டு நேரத்தை ஓடிப் பிடிச்சுக் கொண்டிருக்கிறன். என்னக் காசு கட்டிக் கனடாவிற்கு கூப்பிட்ட அண்ணாக்கும் அக்காவுக்கும் காசைக் கெதியாத் திருப்பிக் குடுத்து விடவேணும் எண்ட வெறி எனக்குள்ள. (அவர்கள் கேட்காவிட்டாலும்)

அக்கான்ர ஒப்பாரி கேட்டு முடிய அண்ணர் எனக்கு போன் அடிச்சு தன்மையா நிதானமா



படிப்பகம்

www.padippakam.com

"என்ன நளா இது.. ஏன் இப்பிடியெல்லாம் செய்யிறா.. அக்கா உனக்காக எவ்வளவு எல்லாம் செய்திருக்கிறா" நான் குறுக்கிட்டன்

"அப்ப நான் என்ன செய்ய? உன்னோட வந்து இருக்கட்டே".

"என்னடி விளக்கமில்லாமல் கதைக்கிறாய் என்ர வீட்டில எங்க இடமிருக்கு நானே என்ன செய்யிறதெண்டு தெரியாமல்.."

நான் திரும்பவும் குறுக்கிட்டன்.

"அப்ப என்ன அண்ணா செய்யிறது? வேலை செய்யிறன் தானே தனியப் போய் எங்கையாவது இருக்கட்.."

"என்னடி எங்கள எல்லாம் அவமானப்படுத்தவெண்டே அங்கையிருந்து இஞ்ச வெளிக்கிட்டு வந்திருக்கிறா நீ வரமுதல் எவ்வளவு நிம்மதியா, சந்தோஷமா நானும் அக்காவும் இருந்தனாங்கள் தெரியுமே? இப்ப நீ வந்தாப் பிறகு எப்ப பாத்தாலும் பிரச்சனை. எங்கள நிம்மதியா இருக்க விட மாட்டியே" குரல் உயர்ந்தது.

"நானென்னண்ண பொய்யே சொல்லுறன்"

குரலின் கடினம் கரைய கனிவு கலந்து "இல்லை நளா.. நான் அப்பிடிச் சொல்லேலை ஆம்பிளைகள் கொஞ்சம் அப்பிடி இப்பிடித்தான் இருப்பினம்.. இஞ்சத்தையான் ஆக்கள மாதிரி உடுப்புகளைக் கண்டபடி போடாத, கொஞ்ச நாளைக்குப் பல்லக் கடிச்சுக் கொண்டு கண்டும் காணாத மாதிரி இரு அம்மாவும், அப்பாவும் கெதியா வந்திடுவீனம் பிறகு எல்லாம் ஓ.கேயாயிடும். அதுக்கிடேலை சின்ன விஷயத்தைப் பெரிசாக்கி எங்கட குடும்ப மானத்தைக் கப்பலேத்திப் போடாத"

"சரி அண்ண அப்பிடியெண்டா ஒண்டு செய்வமே?"

"சொல்லம்மா.."

"இல்லையண்ணா உனக்கும் பதின்மூண்டு வயசில பொம்பிளப்பிள்ளை பெஞ்சாதி எல்லாம் இருக்கீனம் தானே அவேலில ஒராள கொஞ்ச நாளைக்கு அத்தானோட கொண்டு வந்து விடன் நான் நிம்மதியா இருப்பன்"

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

எனக்கான சிறை என்னால் வடிவமைக்கப் பட்டது. பல வகை ஆணிகள் பூட்டுக்களால் அறைக்கதவு இறுகிக் கொண்டது. வெளியில் சாப்பிட்டு அறைக்குள் ரீ குடித்து எனக்கான தொலைபேசி எனக்கான தொலைக்காட்சி என்று என்னை நானே அடைத்துக் கொண்டேன்.



அக்கா பிள்ளைகள் கதவைத் தட்டும் "சித்தி சித்தி" எண்டு குரல் கேக்கும். கொடூரமாக எனைக் கொச்சைப் படுத்திச் செல்லும் அக்காளின் குரல். "சரக் சரக்" கெண்ட சப்பாத்துச் சத்தத்துடன் ஆண்மை வீரியத்தைத் தூக்கி நிற்கும் "பெர்பியூம்" வாசனையுடன் நிதானமாய் வேலைக்குச் சென்று திரும்பும் அத்தான் உருவமாய். தன் கணவனின் ஆண்மையில் திருப்தியும் பெருமையும் காணும் அக்காள்.

சம்பளக் காசு வந்தவுடன வாடகைக்கும் சாப்பாட்டுக்கும் எண்டு கொஞ்சத்தை அக்காட்டக் குடுத்தாள் நளா

"உன்னைக் கொண்டு உழைப்பிச்சுக் காசு சேக்கத்தானே இஞ்ச கூப்பிட்டனாங்கள் இஞ்ச எங்க சாப்பிடுறா எண்டு சாப்பாட்டுக் காசு தாறாய். உங்களுக்கெல்லாம் கொழுப்படி"

"எனக்குச் சும்மா ஒரு வீட்டில இருக்க விருப்பமில்லை"

"ஓ உங்களுக்கு கனடா வந்தவுடனயே பிளான் பிடிபட்டிட்டுது ஆ.. காலமடி"

வாடகைக்காசை மேசையில வைச்சிட்டு நளா போனாள். அது தொடப்படாமல் மேசையில் பல நாட்களாகக் கிடந்தது.

விரிந்து கிடந்த கனேடியக் கரிய வானத்தில் இலைகளைத் தொலைத்த குச்சி மரங்கள் பல்நிற பல்புகளாய்ப் பூத்து வழி காட்ட அத்தான் அவசரமில்லாது காரை ஓட்டினார். நளாவின் கைகளைத் தனக்குள் புதைத்து "அம்மா அப்பா எப்பிடியெடி இருக்கீனம் அவையளும் வந்திட்டாப் பிரச்சனை தீந்திடும்" அக்கா வார்த்தைகளால் குறுக்கிட கண்களை வெளியே அலையவிட்ட நளாவின் கனவில் பரந்து கிடந்தது எதிர்காலம். குளிரும் உடலின் சிறிய உதறல் மகிழ்ச்சி தர அக்கா பிள்ளைகளை இழுத்து மடியில் போட்டாள்.

"நல்லாப் படிக்க வசதியிருக்காம் முடிஞ்சா கொஞ்ச நேரத்துக்கு ஏதாவது வேலையும் செய்தியெண்டா உன்ர செலவுக்கு உதவும் நாங்களும் கெதியா வந்திடுவம்" அம்மாவின் குரல் அடிக்கடி ஒலித்தது.

அண்ணா தூர இருக்கிறார். நளாவின் அனைத்து வேலைகளையும் சிரித்த முகத்தோடு தன் பக்கம் எடுத்துக் கொண்டார் அத்தான். காரில் முன்னால் இருத்தி 'இமிகிரேஷன்' பள்ளிக்கூட 'அட்மிஷன்' இத்யாதி இத்யாதி. குளிர் காற்றடிக்க காரின் யன்னல் சாத்திய முழங்கை நளாவின் மார்போடு தேய்த்துச் சென்றது. நளா உடலை ஒடுக்கிக் கொண்டாள்.

இரவு கட்டிலில் புரண்டு "ச்சீ அத்தான் அப்பிடிப் பட்டவரில்லை" சமாதானமாய் நித்திரை கொண்டாள். அக்கா வேலையால் வருமுன்னே நளாவும் அத்தானும் சமையல் முடித்து வைத்தார்கள். கைகள் இடறுப்படும்



படிப்பகம்

www.padippakam.com

போது "சொறி" என்றவாறு பார்வையைத் தாழ்த்திக் கொண்ட போது நளாவிற்கு நிம்மதியாக இருந்தது. குளிக்கும் போதும் உடை மாற்றும் போதும் கதவோரத்தில் நிழல் ஆடியது. வேலையால் அடிக்கடி வெள்ளண வீட்டுக்கு வரத்தொடங்கிய அத்தானின் பார்வைகள் நிறம் மாறிப் போயிருந்தன. நளா வேலை எடுத்துக் கொண்டாள். பாடசாலை வேலை என்று அக்காவிற்கு முன்னால் சென்று பின்னால் வீட்டிற்கு வரப் பழகிக் கொண்டாள். எல்லாமும் சமாதானமாயிற்று.

பஸ்சிற்கு நிண்டவளை கடந்து சென்ற கார் சிறிது தூரம் போய்ச் சுற்றி வந்து அழைத்தது. மறுக்கும் துணிவின்றி மீண்டும் சமாதானமாகி ஏறிக்கொண்டாள். படிப்பு வேலை பற்றி யதார்த்தமாக மிக யதார்த்தமாக வார்த்தைகளை வீசிய படியே பார்வையை தூர ஊடுருவ விட்ட அத்தான் மேல் நளாவிற்கு நம்பிக்கையும் மதிப்பும் 'ஸ்டியரிங்கை" மாற்றும் போது நளாவின் துடையை விரல்கள் உரஞ்சிச் செல்லும் வரை இருந்தது. கால்களை இழுத்துக் கொண்டாள். பேச்சுக்கள் தடைபட்டன. மௌனம் ஊடுருவியது.

வேலைத்தளத்தில் இறக்கி விடும் போது பார்வையில் நிஷ்டூரம்.

இருமி இருமிக் களைத்துப் போன அக்காள் மகளை தன்னோடு அணைத்துக் கதை சொல்லிப் படுக்க வைக்க முனைந்து கொண்டிருந்த நளாவின் அறைக்குள் திடீரென புகுந்த அத்தான், மகளின் தலை தடவி "எப்பிடி இருக்கடா" என்றவாறு நளாவின் ஒற்றை மார்பை இறுக்கிப் பிடித்துப் பிசைந்து விலகிச் செல்ல திடுக்கிட்டு உடல் உதற விறைத்துப் போனாள்.

"என்னடி சொல்லுறாய்? என்னடி சொல்லுறாய்? பிள்ளை மாதிரி நினைச்சு எல்லாம் ஓடியோடிச் செய்யிற எங்கட வாழ்க்கையைக் கெடுக்க வந்த பாவியடி நீ. நீ இப்பிடிச் சொன்னனீ எண்டு தெரிஞ்சா மனுசன் துடிதுடிச்சுப் போயிடும். "காட்அட்டாக்" வந்து செத்துப் போயிடும்"

பனி படர்ந்த வெளியில் பஸ்சிற்காகக் காத்திருந்த போது வந்து நின்ற காரைத் துச்சம் செய்து விறைத்து நின்றாள் நளா. கார் மறைந்து போனது.

ஒருநாள்

பல்கனி கம்பியில் சாய்ந்த படியே சாம்பல் பூத்த இரவில் "செல்" போனில் சிரித்தபடி நின்றவனை யாரும் பார்க்காத கணம் ஒன்றில் வேகம் கொண்டு தள்ளி விட்டு வீறிட்டுக் கதறி சாய்ந்து விழும் அவன் உருவம் உடைந்து சிதைய மட்டும் பார்த்துக் கொண்டு நின்றாள் நளா

இன்னுமொரு நாள்



"பாஸ்ரா" அவியப் போடத் துள்ளிக் குதித்துக் கொதிக்கும் தண்ணீரைப் பாத்திரத்துடன் தூக்கி சுவரோரம் சாய்ந்த படி அவளையே வெறித்து நிற்கும் அவன் முகம் நோக்கி வீசி ஊத்தினாள் நளா

இன்னும் இன்னும் ஒருநாள்

போத்திலை உடைச்சுத் துகள்களாக்கி சாப்பாட்டுக்குள் கலந்து கொடுத்தாள் நளா..

நாட்கள் நகர்ந்தன இன்னும் இன்னும் பல நாட்கள் கனவுகளில் அவள் தொடர்ந்தாள்..

தொலைக்காட்சியில் வேண்டாததற்கெல்லாம் வெற்றுடம்போடு வந்து போனார்கள் அழகிகள்.

அண்ணியின் முகம் தூக்கிய முகச்சுளிப்பில் மொத்தத்தையும் தெரிந்து கொண்டாள். அண்ணா பார்வையைத் தவிர்த்துக் கொண்டான்.

அம்மா அப்பா வரும் நாளை கணக்கிட்டுக் கணக்கிட்டு நாள்காட்டியில் கட்டம் போட்டாள்.

சோதனைக்காகப் படித்தவற்றை இரைமீட்டு இரைமீட்டு மனதில் நிம்மதியுடன் நித்திரையாகிப் போனவள் கனவில் இப்போதெல்லாம் வெறுமை.

இருப்பிற்கும் இறத்தலுக்குமான இடைவெளியின் ஊஞ்சலாடும் இரவுகளின், எண்ணிக்கையைத் தள்ளி விடியும் பொழுது பெருமூச்சாகக் கழியும்.

ஆழ்ந்த நித்திரையில் அவள். மூச்சு சீராக வடிந்து கொண்டிருந்தது. புற அசைவுகள் இம்சிக்காத சமவெளியில் நீச்சலாய்.. ஒலிகள் செவிப்பறையைத் தாக்காத நிசப்தம். தொடைகள் குளிர புழுப்போல் எதுவோ ஊர்ந்து ஊர்ந்து.. வீரிய மூச்சு காதோரம் சூடேற்ற.. பலம் கொண்டு இரு கைகளாலும் தள்ளி உடையை இழுத்து விட்டு.. "அக்கா அக்கா" என்று குரலெடுத்துக் கத்தியவளின் தொண்டை கட்டிப் போயிருந்தது. கதவுகள் அகலத்திறந்து மூடியன.

நடுச்சாமம் சுடு நீரில் அழுதழுது முழுகினாள். நித்திரையற்று இரவைக் கழித்து வெளிச்சம் காணுமுன் உடுத்து கதவை இறுக்கப் பூட்டி வெளியேறினாள். சோதனைப் பேப்பரில் கேள்விகள் நித்திரையற்ற அவள் கண்களுக்குப் புழுவைப்போல் நெழிந்தன. தன் உடலை அருவருப்போடு பார்த்துக் கொண்டாள். கண்களுக்குத் தண்ணீர் தெளித்து முடிந்தவரை பதிலளித்து வெளியே வந்து குளிர்ந்து போன சீமெந்து இருக்கையில் இருந்து சத்தமில்லாது வாய் விட்டழுதாள். இது என்ன விதி? அவளுக்குப் புரியவில்லை.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்;



படிப்பகம்

www.padippakam.com

எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

உறைந்த குளிருக்குள் வாயால் புகை போக்கி போல் மூச்சு விட்டபடி வேகமாகக் கடந்து செல்லும் ஆண்களின் உடல்களில் "அந்த" பகுதியில் அவள் கண்கள் நிலைத்து நின்றது. எல்லா ஆண்களுக்குமே காம வேட்டைக்கு அலைவது போல் துருத்திக்கொண்டு நின்றது "அந்த" இடம்.

வீட்டிற்கு வந்த போது இருட்டிவிட்டிருந்தது. அக்காள் கண்டும் காணாது சமையலில் இருந்தாள். பிள்ளைகள் ரீவியில் மூழ்கிப் போய் இருந்தார்கள். எல்லோரும் தமக்கான வாழ்கையில் லயித்திருந்தார்கள். பூட்டைத் திறந்து அறைக்குள் வந்தாள். உறவுகள் இல்லாத உலகொன்றில் தனித்து விடப்பட்டவள் போல் தவிப்பு. கண்கள் சொருகிச் சொருகி வந்தன. கட்டிலில் சரிந்து கண்களை மூடினாள். அத்தானின் ஆண் வீரியம் கலந்த "பெஃர்பியூம்: வாசனை மூக்கைத் தாக்கியது. திடுக்கிட்டெழுந்தாள். அறையை ஒருமுறை சுற்றிப் பார்த்தாள். பொருட்கள் அசையாது அப்படியே இருந்தன. எழும்பி போய் பூட்டைப் பார்த்தாள். இறுக்கமாக இருந்தது. நேற்று அவள் தோய்த்து "ஹீற்றறில்" காயப்போட்ட அவள் "அண்டவெயார்" "பிரா" இரண்டையும் காணவில்லை. திடுக்கிட்டவளாய் உடுப்பு வைக்கும் லாச்சியைத் திறந்து பார்த்தாள். உள்ளே "அதுகள்" அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்தன. நிம்மதிப்பெருமூச்சோடு விரலால் தனது உடைகளை அழைந்தவள் கையோடு ஒட்டிக்கொண்டு வந்தது ஆண்களின் "அண்டவெயார்" ஒன்று

"இல்லை நளா நான் சொல்லுறதைக் கேள்"

"ஐயோ கடவுளே இவளுக்கேன் புத்தி இப்பிடிப் போகுது"

அண்ணாவுக்கு நன்றிக் கடன். தன்னைக் கனடாவுக்கு கூப்பிட்டு விட்ட அத்தானில நன்றிக் கடன். தன்னிலும் பத்து வயசு மூத்த அத்தானை நிமிந்து பாத்துக் கேள்வி கேட்கப் பயம். அக்கா பிள்ளைகள் பற்றிய அங்கலாய்ப்பு. "பொறுத்துக் கொள்ளடி அம்மா, அப்பா வரமட்டும்"

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி
பேணி வளர்த்திடும ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்"

அனைத்தையும் விலத்தி விறைத்துப் பொறுத்துக் கொண்டாள்.

அம்மா, அப்பாவும் வந்து விட்டார்கள் இனித் தனியாக ஒரு இடம் பார்த்து மூன்று பேருமாக.. நிம்மதிப் பெருமூச்சு.



வீடு சந்தோஷக் களை கட்டியது. சொந்தங்கள் வந்து போயின. அக்கா அவள் முகம் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினாள். அண்ணா படிப்பைப் பற்றி விசாரித்தான். தன்னையும் கல கலப்பாக்க முனைந்து அத்தான் வேலையால் வீட்டிற்கு வரும் போது மட்டும் அறைக்குள் அடைந்து.

வீடு முட்டச் சனம். சமையல், சாப்பாடு ஊர்க்கதைகள் எண்டு நீண்ட ஒரு இரவில் அனைத்தையும் மறந்து போயிருந்த நளாவை "பெடியன் அழுறானடி ஒருக்கா என்னெண்டு பார்" அம்மா சொல்ல பாதியில் விட்ட ஊர்க்கதையைக் கேட்கத் துடிக்கும் அவசரத்தில் வாறனப்பு" என்ற படியே ஓடி அறைக்கதவைத் திறக்க அரை குறை நித்திரையில் அழும் மகனைத் தட்டி விட்ட படியே தனது சாரத்தைத் தளர்த்தி மறு கையால் புடைத்து நிற்கும் தனது குறியை தடவிய அத்தானின் பசளை படர்ந்த பார்வையைத் தழுவிய நளா போன வேகத்தில் அறையை விட்டோடி தனது அறைக்குள் புகுந்து கொண்டு கதவைப் பூட்டிக் கொண்டாள்.

அம்மா, அப்பாவுடன் தனியா இடம் பார்த்து சென்ற பின்னரே மீண்டும் நளா மூச்சு விடத் தொடங்கினாள்.

"என்ன உனக்கும் அக்காக்கும் ஏதும் பிரச்சனையே. ரெண்டு பேரும் முகத்தைத் தூக்கிக் கொண்டு அலையிறியள்" அம்மா கேட்டா

இப்ப நிம்மதியா இருக்கிறன். அத்தானில அம்மாக்கு நிறம்பவே மதிப்பு இருக்கு அதைக் கெடுப்பானேன்.

"ச்சீ ஒண்டுமில்லையம்மா"

படுக்கையில் புரண்ட போது ஒருநாள் அம்மா அப்பாவிடம் சொன்னது நளாவின் காதில் விழுந்தது. "அந்தாளைப் போல ஒரு நல்ல பெடியன் எங்கட நளாக்கும் கிடைச்சிட்டிது எண்டா நிம்மதியா இருக்கும்"

கனேடியச் சட்டம் பெண்களுக்கு எத்தனையோ சலுகைகளைச் செய்து வைத்திருக்கின்றது. பாலியல் துன்புறுத்தல் என்பது இங்கே மிகப் பாரதூரமான குற்றமாக கணிக்கப்பட்டு குற்றவாளியாக காணப்படுபவருக்கு பல ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படுகின்றது.

இங்கே எனது விட்டுக்குடுப்பு எதற்குள் சேர்த்தி. அக்காள் எண்ட பாசமா? குடும்ப மானமா? கடைசிக்காலத்தில் அப்பா, அம்மாவை நிம்மதியாக இருக்க விட வேண்டும் என்ற எண்ணமா?

"அக்காவும் பிள்ளைகளும் இப்பதான் வந்திட்டு போகீனம் கொஞ்சம் வெள்ளண வந்திருந்தாச் சந்திச்சிருப்பாய்"

ஒரு சின்ன யோசினைக்குப் பிறகு "அத்தான் வரேலையோ?"

"பின்ன அந்தாள் வராமல்.." பெருமையான சிரிப்பு முகத்தில் வடிய



படிப்பகம்

www.padippakam.com

"எனக்கும் அப்பாக்கும் சுவெட்டர் எல்லே கொண்டு வந்தவர் இந்தா உனக்கு ஒரு சொக்லேட் பெட்டி தந்தவர்"

கறுப்பு சொக்லேட்டின் உள்ளிருந்து வெண்நிறத்தில் வழியும் பாணியின் படம் போட்ட பெட்டி அவளிற்கு அருவருப்பூட்ட அம்மாவிற்குத் தெரியாமல் குப்பைத் தொட்டிக்குள் போட்டு விட்டு தனது அறைக்குள் புகுந்து கொண்டாள்.

அவளின் கனவுகள் இப்போது குரூரத்தைத் தவிர வேறொண்டையும் கொண்டிருப்பதில்லை.



# இருள்களால் ஆன கதவு..

1

அந்த அகண்ட ஹோலில் அசைக்கப்படாமல் பல காலமாகப் போடப்பட்ட பொருட்கள் மனதில் பதிந்து போய் விட்டிருந்தன. ஒன்று அரக்கப்பட்டாலோ இல்லைப் புதிதாக நுழைந்து கொண்டாலோ மீராவால் இலகுவில் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

வழமை போல இன்றும் அதே சுவரின் மூலையில் சாய்ந்து, கலைந்த தலையும், சிவந்த கண்களுமாய் எங்கோ வெறித்துக் கொண்டே மகன் ரிஷிக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதாய் பாவனை செய்து கொண்டிருந்தாள் யசோ. அவளும் அந்த ஹோலின் ஒரு அசையாத பொருளாக மாறி வருகின்றாளோ என்ற அச்சம் மீராவிற்கு. அவள் தலை சாய்க்கும் பகுதி சிறிது நிறம் மாறிப்போயிருந்தது. தனியாக வீட்டு வேலைகளை அவள் செய்வதற்கு மீரா ஒரு போதும் அனுமதித்ததில்லை. இருந்தும் எதையாவது செய்து வைப்பதை அவளால் தடுக்கவும் முடிவதில்லை..

கதவு திறக்கும் சத்தம் கேட்டதும் குற்றம் செய்து விட்டது போல் புத்தகங்களை வாரி எடுத்துக் கொண்டு தனது அறையை நோக்கி நடந்தாள் யசோ. மீரா ரிஷியை அணைத்து அவன் தலை தடவி அவள் முகம் பார்க்கு முன்னே யசோ மறைந்து விட்டிருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

முகுந்தன் சோபாவில் கால் அகட்டி விழுந்தான். மூன்று நாட்கள் தொடர்ந்து வேலை செய்ததால் வந்த களைப்பு. இனிச் சிறிது நேரம் கண்மூடி, சிறிதாக குறட்டை விட்டுத் திடுக்கிட்டெழுந்து தொலைக்காட்சியில் செய்தி பார்த்துப் பின்னர் அவளுக்கு சமையலுக்கு உதவுவான். யசோ வந்த பிறகு மீரா அவனை உதவிக்கழைப்பதில்லை. மீரா எல்லாக் களைப்பிலிருந்தும் வெளியே வந்து விட்டிருந்தாள். முகம் கழுவி, சமையலுக்கு ஆயத்தமானாள். முகுந்தன் ஹோல் பக்கமோ, குசினிப்பக்கமோ இருந்தால் அந்த இடங்களை யசோ தவிர்ப்பாள். தெரிந்ததால், முகுந்தனின் தோளில் தட்டி கோப்பியைக் கொடுத்து அறைக்குள் போய் படுக்கச் செய்தாள் மீரா.

யசோ நெற்றி நிறைந்த விபூதியோடு வெங்காயத்தை எடுத்து தோலை உரிக்கத் தொடங்கினாள். மீரா அவள் முகம் பார்ப்பதை தவிர்த்தாள். அணைத்து வாய்விட்டுக் கதறிய நாட்கள் போய் யசோவின் செய்கைகள் இப்போதெல்லாம் கொஞ்சம் எரிச்சல் தருகின்றன அவளுக்கு. சாப்பிடும் போது இந்தா எழும்பி விடுகிறேன் என்பதாய் கதிரை நுனியில் இருந்து கொண்டு ஒற்றைக் கறியோடு சோற்றை கொஞ்சமாக வாய்க்குள் திணித்து தண்ணீர் விட்டு மென்று விழுங்குவதும் தமிழ் படம் பார்ப்போம் என்று பலவந்தமாக ஹோலுக்கு அழைத்து வந்தால் வழுக்கி விழுந்து விடுவது போல் சோபாவில் வேண்டா வெறுப்பாக இருப்பதும் மீராவிற்கு போதும் போதுமென்றாகி விட்டது. இவளின் எதிர்காலம் என் கையில் என்பதாய் மீரா அங்கலாய்த்தாள்.

2

நீண்ட தலைமயிரை இறுக்கமாக இரட்டைப் பின்னல் பின்னி நுனியில் கறுப்பு ரிபனை அழகாகக் கட்டி விட்டு அகன்ற பெரிய கண்களுக்கு அளவாக ஐடெக்ஸ் இட்டு, நெற்றியில் சின்னதாக ஒரு கறுப்புப் பொட்டும், மெல்லிய ஒற்றை வரியில் விபூதி போல் பவுடரும் பூசி, வெழுத்த வெள்ளைச் சட்டை, ரை, சப்பாத்து என்று ரோட்டில் அவள் இறங்கும் போது தூரத்தில் காத்திருக்கும் ஆண் கூட்டம் நடந்தும், சைக்கிளை உருட்டிக் கொண்டும் அவளைப் பின் தொடரும். மீராவிற்கு அந்த ஆண்கள் இட்ட பட்டப் பெயர் "வில்லி". அக்கா யசோவிற்கு அவள் தான் பாதுகாப்பு. யசோவின் அதி மிகுந்த அழகு மீராவை ஒரு போதும் சங்கடப்படுத்தியதில்லை. மாறாக பெருமைப்பட்டாள். அக்காவை எந்த ஒரு ஆண் வாடையும் நெருங்கிவிடாமல் பாதுகாப்பதில் அவளிற்கு மிகுந்த பெருமை. யசோவும் தன் அழகு பற்றி அலட்டிக் கொள்ளாதவள். யசோவையே சிறிய சிறிய கோணல்களுடன் வடித்தது போலிருந்தாள்



மீரா. யசோவிற்கு முன்னால் அவள் அழகற்றவள். இருந்தும் மீராவின் திறமை, துணிவு சிலவேளைகளில் யசோவை மிரளச் செய்யும். அவளிடம் ஏதோ அசாத்திய சக்தி இருப்பது போல் யசோ சில நேரங்களில் எண்ணிதுண்டு. தன் பாதுகாப்பிற்கு மீராவின் பின்னால் ஒதுங்குவதற்கு அவள் தயங்குவதுமில்லை.

கல்வி இயல்பாக வந்தும், ஏனோ சுவாரசியமாக இருக்கவில்லை யசோவிற்கு. அவள் இரவுகள் நீண்ட நித்திரையைத் தொலைத்தவையாயின. தலை வரை போர்த்துக் கொண்டு கண்களை மூடிக் கனவுக்குள் திளைக்கத் தொடங்கினாள். மிகப் பிரமாண்டமான மண்டபத்திற்குள், பட்டுச் சரசரக்க உறவினர்கள், நண்பர்கள் என்று கலர் கலராக வந்து போயினர். முற்றிலும் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மணவறையில் வெட்கத்துடன் தலைகுனிந்திருந்தவளை, முகம் தெரியாத ஒருவன் தாலி கட்டி மனைவியாக்கினான். மண்டபத்தில் தொடங்கி தாலி கட்டும் வரை அவள் கனவுகள் அவசர அவசரமாக இருக்கும், அதன் பின்னர் அதிக நுணுக்கங்களுடன் கனவு தொடரும். அவள் முதலிரவு எப்போதும் தமிழ் சினிமா முதலிரவுகளை ஒத்திருக்கும். இறுகப்பட்டுடுத்தி, தலை நிறைந்த பூவுடன் கையில் பால் கிண்ணம் என்று தலை குனிந்து அறைக்குள் நுழைந்து, முகம் தெரியாக் கணவனின் காலில் விழுந்து எழுந்து அதன் பின்னர் கனவு மேலும் நுணுக்கமாக பல மணி நேரங்கள் நகரும்.. உடல் சிலிர்க்க, தொடைகள் விறைக்க வெட்கித்துப் புரளுவாள் தொடரும் வெட்கத்திலும் வேட்கையிலும் திணறி முடிவில் யசோ காதலித்தாள். தான் கனவில் கண்டது அவன்தான் என்றும், பெண்ணாய் பிறந்தால் திருமணம் செய்து குழந்தை பெற்றுக் கணவனுடன் குடும்பம் நடாத்துவதுதான் என்பதில் அவளுக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் பேரிலும், தனது காதல் பற்றிப் பெற்றோரிடம் கூறி படிப்பை நிறுத்தித் திருமணமும் செய்து கொண்டாள். அப்பாவிற்கும் மீராவிற்கும் உண்டான ஏமாற்றம், அத்தானிடம் ஏற்பட்ட நெருக்கத்தால் மறைந்து போனது.

3

கல்வியை ரசித்து முன்னேறினாள் மீரா. அவளின் திறமை தரப்படுத்தலையும் மீறி அவளை பல்கலைக்கழகத்திற்குள் கொண்டு சென்று ஒரு மருத்துவராக வெளியே கொண்டு வந்தது. பொதுவாகவே தான் பிறரைப் பாதுகாக்கப் பிறந்தவள் என்ற அவளது நம்பிக்கை யாழ்ப்பாணத்து குற்றூர்களுக்கெல்லாம் சென்று மருத்துவம் பார்க்க வைத்தது. இருந்தும் வருடம் ஒரு முறையாவது பெற்றோருடன் குடும்பமாகச் சேர்ந்து



படிப்பகம்

www.padippakam.com

கொட்டமடிப்பதை அவளோ யசோவோ மறந்து விடவில்லை. தந்தையின் கனவை மீராவும் தாயாரின் கனவை யசோவும் நிறைவேற்றி விட்டிருந்தார்கள். மீரா யாரையும் காதலிக்கவில்லை உன்ர விருப்பம் போல படிச்சு வேலையும் எடுத்திட்டாய் இனிக் கலியாணம் செய்யலாம் தானே என்ற தாயாரின் இம்சை தாளாமல் அத்தானின் நண்பனான கனடாவில் வசிக்கும் முகுந்தனைத் திருமணம் செய்யச் சம்மதித்து கனடாவிற்கும் வந்து சேர்ந்து விட்டாள் அவள். வெறுமனே பெண்ணாகத் தான் உருமாறிக்கொண்டிருக்கின்றோமோ என்ற அச்சம் குழந்தைப் பேற்றைத் தள்ளிப்போட்டு அவளை ஒரு சமூகசேவகியாக மாற்றி விட்டது. மீண்டும் கனடாவில் ஒரு மருத்துவராக அவளிற்கு அதிக சிரமங்கள் இருக்கவில்லை. படிப்பு, சமூகசேவை வேலை என்று சக்கரம் போல் சுழன்றவளுக்கு வருடம் ஒரு முறை ஊர் வந்து பெற்றோரையும் யசோவையும் பார்ப்பேன் என்ற உறுதி வார்த்தையோடு அழிந்து போனது. அவ்வப்போது தொலைபேசியில் அழாத குறையாக இந்த வருஷமாவது ஒருக்கா வந்து எங்களைப் பாத்துவிட்டுப் போ என்ற யசோவின் குரலைக் கேட்கும் போது ஏதோ உந்தும். பின்னர் ஏனோ நிறைவேறாமலே தள்ளியும் போகும்.

4

நடுச்சாமச் தொலைபேசியின் அழைப்பில் நித்திரை குலைய மீரா திடுக்கிட்டெழுந்தாள். நான்கு வருடங்கள் கனடாவில் கழித்த பின்னர் குடும்பமாய் ஒன்றாய் சேர மீண்டும் அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் வந்தது. கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு அடக்கத்திற்கு முன்பாவது தந்தையின் முகத்தை பார்த்து விடவேண்டும் என்று பிளேன் ஏறினாள். முதல் இழப்பில் அவளின் சீவன் நடுங்கியது. அது தொடர்ந்த போது விறைத்தது. அடுத்து வந்த வருடம் தாயாரின் முகத்தை கடைசியா ஒரு முறை பார்க்க ஊர் போய் வந்தாள். அக்கா யசோ துவண்டு போயிருந்தாள். தொடர்ந்த இழப்புக்கள் இருவரையும் உலுக்கி விட்டிருந்தது. இருந்தும் முழுமையான ஒரு வாழ்க்கையை சந்தோஷமாக வாழ்ந்து முடித்திருந்தார்கள் தமது பெற்றோர் என்று தம்மைச் சமாதானமும் செய்து கொண்டார்கள்.

பெற்றோரை அடுத்தடுத்து ஜமனுக்குக் கொடுத்த களை தீர முன்பே நெற்றியில் பொட்டு வைத்தது போல் துப்பாக்கித் துளையோடு ரோட்டோரம் கிடந்த அத்தானின் வெறும் உடலை வீட்டிற்கு கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனார்கள் என்று தொலைபேசியில் மீராவிற்குச் செய்தி வந்த போது அவள் அழவில்லை. கிளினிக்கிக்குப்



போய் விட்டாள். முகுந்தன் மிரண்டான். வேலைக்கு லீவு போட்டு அவள் கிளினிக்கிற்குச் சென்று சாப்பிட வெளியே அழைத்துச் சென்றான். அவள் எதுவும் கதைக்காமல் "சரியா பசி" என்று விட்டுச் சாப்பாட்டில் கவனம் செலுத்த, அவள் கைகளைத் தனது கைக்குள் அடக்கி "நான் என்ன செய்ய? என்ன வேணுமெண்டாலும் சொல்லுங்கோ நான் செய்யிறன்" என்றான் குரல் தழுதழுக்க. எப்படி முடியும்? எது சாத்தியம்? ஒன்றையும் சிந்திக்காமல் தூரப்பார்வையை எறிந்து விட்டு மீரா சொன்னாள் "யசோவும் ரிஷியும் அடுத்த மாதமே என்ர வீட்டில நிக்கவேணும்." எப்படிச் சாத்தியமாயிற்று தெரியவில்லை அடுத்தமாசம் ரிஷியை அணைத்தபடி யசோ மீராவின் வீட்டில் கால் வைத்தாள். கலகலப்பான பழைய நாட்கள் மீட்டிப்பார்ப்பதற்கு மட்டும் சாத்தியமாயிற்று. மௌனம் நீள நாட்கள் நகர்ந்தன. யசோவின் சோகம் கேட்டு வந்த சொந்தங்கள் தாம் வாங்கி வந்த உணவைத் தாமே எடுத்துப் போட்டுச் சாப்பிட்டு காணாத பல சொந்தங்களைப் பார்ப்பதற்குக் கிடைத்த தளமாக மீரா வீட்டை மாற்றி ஊர் வம்பு அலம்பி அத்தான் சாவைப் பற்றிக் கேள்வி எழுப்பித் தாமே விடை சொல்லி விலகின. யசோ வெறுமனே வெறிப்பது மட்டும் தொடர்ந்தது. மரணம் பற்றிய மீராவின் விளக்கத்தையும் மீறி உளவியல் தாக்கத்திற்கு இருவரும் தள்ளப்படுவது அவளிற்குப் புரிந்தது. தனது குடும்பத்திற்கு என்ன நடந்தது விட்டது? ஏன் தனது குடும்பத்திற்கு மட்டும் இப்படியாக வேண்டும் என்ற கேள்வி மீராவைத் துளைக்க, இழப்புகளற்று சந்தோஷிப்பவர்களைப் பார்க்கும் போது வெறுப்பு வந்தது. அவளது பொதுநலத்தொண்டிலும் "ஏன்" என்ற கேள்வி மிஞ்சி தான் சுயநலமாக மாறி வருவது போல் பட்டது அவளுக்கு. "என்ர பிள்ளைகளுக்கெண்டு நான் கையால் பிளிந்து அவித்த இடியப்பம்" என்று மாமி பெருமையுடன் கூறிச் சாப்பாட்டை எடுத்து வைக்க "ஏன் மாமி உங்கட வீட்டில யாராவது செத்தா நான் செய்ய மாட்டனே?" என்று மாமியை அதிர வைத்தாள் மீரா. மாமி விலகிக் கொண்டாள். இல்லை மீரா உறவுகளை விலக்கிக் கொண்டாள். தான், முகுந்தன், யசோ, ரிஷி என்று தனது உறவைச் சுருக்கிக் கொண்டாள். அக்காவை பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டும் அவள் மாற வேண்டும். மீராவிடம் வீம்பு வந்தது.

5

யசோவின் மனம் படபடவென அடித்துக் கொண்டது. "அக்கா வீட்டில சும்மா அடைஞ்சு கிடக்காமல் ஏதாவது படியுங்கோவன்" என்ற போது தனது கோபம் அனர்த்தமானது என்று தெரிந்தும் மீரா மேல் கோபம்



படிப்பகம்

www.padippakam.com

எழுந்தது. சரளமாக நாலு வார்த்தைகள் ஆங்கிலத்தில் கதைக்கத் தயக்கம் அவளுக்கு. தனது கணவனை இழந்து மீராவிடம் அடைக்கலம் புகுந்து விட்ட வேதனை. பணத்தை மட்டும் குறிக்கோளாக வைத்து இயங்கும் கனேடிய வாழ்க்கை ஏற்படுத்திய பீதி.

ஊரில் உள்ளவற்றையெல்லாம் விற்று ரிஷியின் படிப்பிற்கு உதவும் என்று பாங்கில் கொஞ்சம் பணம் வைத்திருந்தாள் யசோ. கனடா வந்த தொடக்கத்தில் அதில் ஒரு சிறு தொகையை மீராவிடம் கொடுத்து எங்களுக்கான செலவுக்கு என்ற போது மீரா துடித்துப் போனாள். "என்னக்கா ஏன் என்னையும் உன்னையும் பிரிச்சுப் பாக்கிறாய். கலியாணம் கட்டினா எல்லாமே மாறீடும் எண்டு ஏனக்கா நினைக்கிறாய்" என்று அவளைக் கட்டிக் கொண்டு கதறினாள். யசோ மீராவின் பின்னால் ஒடுங்கிக் கொண்டாள். மீண்டும் தன்னைக் காக்கப் போவது இவள் தான் என்று நம்பினாள். முகுந்தனின் பெருந்தன்மை மீராவின் அரவணைப்பு இதமாக இருக்க, ரிஷியின் படிப்பு எதிர்காலம் அதுதான் தனது வாழ்க்கை என்ற திடமான முடிவுடன் அவள் தன் வாழ்க்கையைத் தயார் படுத்தி விட்டிருந்த பின்னர், இந்த வயதில் புத்தகத்தையும் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடம் செல் என்ற மீரா மேல் யசோவிற்கு சொல்ல முடியாத கோவம். இன்னுமொருநாள் மீரா "அக்கா நான் உன்னோட கொஞ்சம் கதைக்க வேணும்" என்ற படி அறைக் கதவைப் பூட்டியபோது நெஞ்சுக் குழிக்குள் கல்லடைத்தது அவளுக்கு. எப்போதும் எதற்கும் பதட்டம். எல்லாமே தனக்கு வேண்டாததாகத்தான் இருக்கும் என்று நம்பினாள். மீரா சொல்வதைப் புரிந்து கொள்ளும் பக்குவம் அவளுக்கில்லை. மீரா கனடா வந்து மாறி விட்டாள் என்று மனதார நம்பினாள். ஏழு வயது மகனுக்கு அம்மா. காதலித்து ஆசையாசையாய் குடும்பம் நடாத்தியவன் குற்றுயிரில் போய் விட்டான். அவனை மறந்து விட்டு இன்னொருத்தனோடு தமிழ் சினிமாப் பாணியில் அவள் மனதில் இருந்து டயலாக்ஸ் வந்தது. முடிந்தவரை கதைத்துப் பார்த்துச் சோர்ந்து போனாள் மீரா.

6

மீரா கற்பமானாள். பல நாள்கள் ஆலோசனையின் பின்னர் முகுந்தனும் மீராவும் சேர்ந்து எடுத்த முடிவு அது. படிப்பு ஒன்றுக்கும் உதவாது அனுபவம் தான் வாழ்க்கை என்று மீராவிற்கு கற்பவதி பாடம் சொன்னாள் யசோ. அக்கா கொஞ்சம் கலகலப்பாவது போல் பட்டது மீராவிற்கு. சுருங்கிய கைவிரல்களை விறைத்த படியே கோணலாகப் பிடித்து சின்ன வாயைக் குருவி போல் திறந்து சிணுங்கும் பிஞ்சுக்



குழந்தை ஆஷாவை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் யசோ. ரிஷியையும் ஆஷாவையும் பாதுகாப்பதில் தனது நேரத்தை செலவு செய்தாள். அக்காவின் மாற்றம் மீராவிற்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் தன்னை விட ஒரு வயது மூத்தவள். இளம் வயதில் திருமணம் செய்து குழந்தை பெற்றதாலும் அடுத்தடுத்த வாழ்வு கொடுத்த கடுமையான அடிகளினாலும் கண்களுக்குக் கீழ் கரு வளையமும்.. தொய்ந்து போன உடலுமாக இருந்தாள். இருந்தும் இன்றும் அழகாகவே தோன்றினாள். அக்காவின் வாழ்க்கை இத்துடன் முடிந்து விட்டது என்று ஏற்க மீராவால் முடியவில்லை. பெண் என்பதற்கான யசோவின் வரைவிலக்கணத்தை மீறி அவளை அடுத்த படிக்குக் எப்படி ஏற்றுவது என்று தெரியவில்லை மீராவிற்கு. தனது முயற்சிகளை விடவும் அவள் எண்ணவில்லை.

7

எல்லாமே ஒரு நொடியில் நடந்து முடிந்து விட்டது. ரிஷி மீராவின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தான். வாழ்வின் அவலங்களை அறியாத ஆஷா கண்ணயர்ந்து நித்திரையில் கனவுகளின் இனிமையின் பிடியில் சிரித்தபடி இருந்தாள். மீராவின் கை ரிஷியின் தலையை அளைந்தபடி இருக்க கண்கள் தூர வெறித்து நிலைத்திருந்தது. அவள் கிளினிக் சென்று நாட்களாகி விட்டது. முகுந்தன் மீராவின் முகம் பார்க்க அஞ்சி அறைக்குள் சுருண்டு கிடந்தான். முதல் முதலாக மூடநம்பிக்கைகள் மேல் மீராவிற்கு நம்பிக்கை வரத்தொடங்கியது. "யாரோ எங்கட குடும்பத்துக்குச் சாபம் போட்டு விட்டார்" அவள் வாய் புலம்பியது. இறுகிப் போன கலாச்சாரம் பண்பாட்டுக்குள் புதைந்து போயிருக்கும் எம்மவர், முக்கியமாக எமது பெண்களை வெளியே கொண்டு வரவேண்டும் என்று துடிப்பவர்கள் மேல் அவளுக்கு வெறுப்பு வந்தது. எத்தனை பேரால் முடியும்? அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதற்கிணங்க அடித்து அடித்து, கடைசியில் நானே கொன்று புதைத்து விட்டேனே. அவள் மனம் விம்மியது. "விசரி உன்னையும் என்னையும் எப்ப நான் பிரிச்சுப் பாத்திருக்கிறன். நீ, நான், முகுந்தன், ரிஷி, ஆஷா எண்டு என்ர உலக வட்டத்தை உனக்காகச் சுருக்கி உன்னைச் சிரிக்க வைக்க அல்லும் பகலும் பாடுபட்ட என்ர மனதை நீ புரிஞ்சு கொள்ளாமல் போயிட்டியே" விம்மினாள். "யாருக்கு யாரடி துரோகம் செய்யிறது. பெரிய தியாகி எண்ட நினைப்பு." மனம் கடுகடுத்தது. பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு எழுந்து சென்று அறைக் கதவைத் திறந்தாள். இருண்ட அறைக்குள் கண்கள் கூச படுத்திருந்த முகுந்தன் எழுந்து கட்டிலில் இருந்தான். தலை குனிந்திருந்தது. அருகில்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தவள் அவன் முகம் தூக்கி, கலங்கிய கண்களை தன் நெஞ்சோடணைத்து சாப்பிட்டு எத்தினை நாளாச்சு வாங்கோ எங்கையாவது வெளியில போய்ச் சாப்பிடுவம். பாவம் ரிஷி அவனுக்கு என்னையும் உங்களையும் விட்டா இனி யார் இருக்கீனம். முகுந்தன் விம்மினான். அவன் கண்ணீர் மீராவின் நெஞ்சில் விழுந்து வழிந்தது. மீரா அவனை இறுக்கிக் கொண்டாள்.



# ரெக்ஸ் எண்டொரு நாய்க் குட்டி

"கணன் மாமாவும், மாமியும் கனடா வந்து நிக்கினம். ஒரு கிழமைக்கு என்னோட தங்கச் சொல்லிக் கேட்டனான். உன்ர அறையிலதான் விடப்போறன். நீ தம்பியோட ஷெயர் பண்ணு" அம்மா சொல்லி விட்டுப் போய் விட்டாள். தம்பி அவசரமாக தன்ரை அறைக்குள் புகுந்து கொண்டான். என்னத்தை ஒளிக்கிறான், மறைக்கிறானோ தெரியாது. அம்மா யன்னல் சீலைகளைத் தோய்க்கிறது, கட்டிலுக்கு புது பெட்சீட் மாத்திறதெண்டு படு பிஸியாயிட்டா.

பாவம் அம்மா.. அப்பா இருக்கேக்க ரெண்டு பேருமா வேலைகளை சேந்து செய்திச்சீனம்.. இப்ப ரெண்டும் பெடியள்.. அதுகளிட்ட என்னண்டு வீட்டு வேலை செய்யக் கேக்கிறதெண்டு நினைச்சுத் தானே கிடந்து முறிவா.. நான் கொஞ்மாவது ஏதாவது உதவுவன்.. ஆனால் தம்பி படிக்கிற மாதிரிப் போஸ் குடுத்துக் கொண்டு எந்த நேரம் பாத்தாலும் கொம்பியூட்டரைக் கிண்டிக்கொண்டு இருப்பான்.

கணன் மாமா.. எங்கட சொந்தக்காறர் இல்லை.. ஊரில பக்கத்து வீடு.. மாமியும், அம்மாவும் நல்ல ப்ரெண்ஸ்.. குமுதம், ஆனந்தவிடகனில வாற தொடர்கதை பற்றிக் கதைக்கிறது, சேந்து சொப்பிங் போறது, படத்துக்குப் போறது எண்டு ஒண்டாச் சுத்தித் திரிவீனம். ஆனால் மாமாவும் அப்பாவும் பெரிசாக் கதைக்கிறதை நான் கண்டதில்லை.. சிலவேளைகளில ரோட்டில எங்காவது கண்டா சும்மா சாட்டுக்கு "எப்பிடி"



படிப்பகம்

www.padippakam.com

எண்டு ஆளையாள் கேட்டிட்டுப் போவீனம். அவ்வளவுதான்.. மாமாக்கு மூண்டு(ம்) பெட்டைகள்..

(நானும் தம்பியும் அவேலை பெட்டைகள் பெட்டைகள் எண்டு கதைக்கிறது அம்மாக்குப் பிடிக்கிறேலை.. "அதென்ன பெட்டைகள் மனேஸ் இல்லாமல்" எண்டு ஒருநாள் அம்மா சொல்லிப்போட்டுப் போக தம்பி "அதென்ன மனேஸ் இல்லாமல்" எண்டு அம்மா மாதிரி நெளிச்சுக் காட்டிச் சிரித்தான், எனக்கு அது அவ்வளவாப் பிடிக்கேலை)

நான் நடுவாளைக் கொஞ்ச நாளாச் சைட் அடிச்சன். அது பிறகு வேற ஒரு பெடியனோட கதைச்சுக் கொண்டு திரியிறதைக் கண்டிட்டு விலகீட்டன்.

ஒரு நாள் மாமி எங்கட வீட்டை அவசரமா ஓடி வந்து அம்மாட்ட ஏதோ ரகசியமாச் சொல்லி மூக்கைச் சீறிச் சீறி அழுதா.. அம்மா என்னைக் கடைக் கண்ணால பாத்துப் பாத்து மெல்லமா ஏதோ மாமீன்ர காதுக்க குசுகுசுத்தா. நான் விறாந்தையில் லாவகமாகக் கதிரையில சரிஞ்சு இருந்து கொண்டு ஆனந்தவிகடனில கமலகாசன் வாணி கணபதியக் கலியாணம் கட்டப் போகுதாம் எண்ட கிசுகிசு வாசிச்சுக் கொண்டு இருந்தனான். சிறீதேவியைக் கட்டாதது எனக்கு நல்ல சந்தோஷம். அம்மா என்னைப் பாத்து "தம்பி பெரியாக்கள் கதைக்கேக்க நீ என்ன இஞ்ச, உள்ள போ" எண்டு என்னைக் கலைச்சுப் போட்டா.. நான் கனநேரமா மாமி அழுத விஷயத்தைச் சொல்லுவா எண்டு ஆனந்தவிகடனில முகத்தை மேஞ்சது வீணாப் போச்சுது. அம்மா இன்னும் என்னைப் பெரிய பெடியனாப் பாக்காததும் ஏமாற்றமா இருந்துது.

நான் சோம்பல் முறித்தபடி எழும்பி முன் ஒழுங்கேக்க வந்து யாரும் பெட்டைகள் சைக்கிளில வரீனமோ எண்டு பாத்துக்கொண்டு நிண்டன். (ஒண்டும் செய்ய இல்லாட்டி இதுதான் என்ர பொழுது போக்கு) மாமியின்ர கடைசிப் பெட்டைதான் ரியூசன் வகுப்புக்கு போறதுக்காக சைக்கிளோட வெளியில வந்துது. கொஞ்சம் கறுப்பா இருந்தாலும் நல்ல முகவெட்டும் வடிவும். இருந்தாலும் ரெண்டாவதை நான் மனசார விரும்பினதால கடைசிப் பெட்டையில ஒரு பிடிப்பு வரமாட்டன் எண்டிட்டிது. பெட்டைக்குப் பக்கத்தால சந்தோஷமாத் துள்ளிக் கொண்டு "ரெக்ஸ்" உம் ஓடி வந்துது. கையில இருந்த ஒரு துண்டு பிஸ்கோத்தை என்ர காலடியில போட்டு ரெக்ஸ்சை என்ர காலுக்க வரப்பண்ணிப் போட்டு ஒரு வில்லங்கமான சிரிப்போட கடந்து போச்சுது பெட்டை. நான் முகத்தை உம் எண்டு பிடிச்சுக் கொண்டு நிண்டன். ரெக்ஸ் பிஸ்கோத்தை திண்டிட்டு என்ர காலை நக்கீச்சு.. நான் அதின்ர தலையில தடவி விட்டன்.



வீட்டுக்கு ஒருக்கா கள்ளன் வந்த பிறகு மாமா எங்கையோ இருந்து இந்த உருண்ட வெள்ளை ரெக்ஸ்சை வீட்டை கொண்டு வந்து கட்டினார். மாமா வீட்டை ஆர் கடந்து போனாலும் அதிகமா ரெக்ஸ் குரைச்சுக் கொண்டு அவையள விட்டுக் கலைக்கும். அதால அதிகமா மாமா வீட்டைக் கடக்கிற எல்லாருமே கொஞ்சம் உசாரா விடுவிடு வெண்டுதான் நடந்து போவீனம். சைக்கிள்காறர் எண்டா பாஸ்ட்டா ஓடி வந்து வீட்டைக்கடக்கேக்க பாரில காலைத் தூக்கி வைச்சுக் கொண்டு போவினம். ஆனால் ரெக்ஸ் இதுவரைக்கும் ஒருத்தரையும் கடிச்சதெண்டு நான் கேள்விப்படேலை.. நாங்கள் பக்கத்து வீட்டில இருக்கிறதாலையும், மாமியோட சேந்து ரெக்ஸ் அடிக்கடி எங்கட வீட்டை வாறதாலையும் எங்கட வீட்டில யாரைக்கண்டாலும் சந்தோஷத்தோட வாலை ஆட்டிக்கொண்டு வந்து காலை நக்கும்.

ஒருநாள் நான் வகுப்பு முடிஞ்சு வீட்ட சைக்கிள்ள வரேக்க,, மாமி வீட்டை பெரிய சத்தமா ரெண்டு மூண்டு நாய்களின்ர கத்தி குரைக்கிற சத்தம் கேட்டுது. நான் சைக்கிள மதிலோட சாய்ச்சுப் போட்டு போய்ப் பாத்தன் ரெக்ஸ் ஒரு பெட்டை நாயோட ஒட்டிப்போய் இழுபட்டுக் கொண்டு நிண்டுது. மாமி வீடு பூட்டிக் கிடந்துது.. (பூட்டிக் கிடக்கோ இல்லாட்டி பெட்டைகள் வெளியில வர வெக்கப் பட்டு உள்ளுக்க நிக்கீனமோ எண்டு தெரியேலை.). நான் ஒரு தடிய எடுத்து அதுகளைக் கலைச்சன். ரெண்டும் கத்திக் கொண்டு இழுபட்ட படியே பின் வளவுக்க ஓடீற்றுதுகள்..

பிறகு கொஞ்ச நாளால ஒருநாள் நான் வெளியில வெளிக்கிட்டிக்கொண்டிருக்கேக்க அம்மா ஓடி வந்து "தம்பி நான் ஊத்தையா நிக்கிறனடா இதை ஒருக்கா மாமீட்டைக் குடுத்திட்டுப் போ" எண்டு ஒரு பெட்டிய நீட்டினா.. மங்கையர்மலரில சொன்ன "ரெசுப்பி" இப்பிடித்தான் அடிக்கடி பெட்டியோட அங்கையும் இஞ்சையும் கை மாறும். நான் சினத்தோட பெட்டிய வாங்கிக் கொண்டு மாமி வீட்டை போனன். மாமி வீட்டு விறாந்தையில சறத்தை மடிச்சுக் கட்டி, மஞ்சள் நிறத்தில நைலோன் ஆம்கட் ரீசேட் போட்ட தடிச்ச கறுப்பன் ஒருத்தன் ரெக்ஸ்சை அமத்திப்பிடிச்சுக் கொண்டு மாமாவோட ஏதோ கதைச்சுக் கொண்டு நிண்டான். ரெக்ஸ் என்னைக் கண்ட உடன மெல்லிய குரலில முனகிப் பிறகு குரைச்சுது. நான் தயங்கித் தயங்கிக் கிட்டப் போக மாமா என்ன ஒரு மாதிரிப் பாத்திட்டு உள்ள போ எண்டு தலைய ஆட்டினர். நான் பேசாமல் உள்ள போனன். மாமி மேசையில துணிய விரிச்சு வைச்சு அளந்து அளந்து ஏதோ வெட்டிக்கொண்டிருந்தா. அவவின்ர வயிறு உப்பின மாதிரி இருந்துது.



படிப்பகம்

www.padippakam.com

மூண்டு பெட்டைகளும் ரேடியோவில இசையும் கதையும் கேட்டுக்கொண்டு இருந்தீச்சுதுகள். நான் முகத்தை "உம்" எண்டு பிடிச்சுக் கொண்டு மாமீற்ர பெட்டிய நீட்டினன். மாமி வாங்கி மேசையில வைச்சுப் போட்டுத் துணி வெட்டிறதில கவனமா இருந்தா. இசையும் கதையுமில "காதலிலே தோல்வியுற்றான் காளை ஒருத்தன்" எண்டு பாட்டுப் பாடீச்சுது. நான் பெட்டைகளையும் மாமியையும் மாறி மாறி பாத்துக் கொண்டு நிக்க

(நான் மூத்த பெட்டைய மட்டும்தான் அக்கா எண்டு கூப்பிடுறனான், முந்தி எனக்கு அக்காவோட நல்லா ஒத்துப் போகும். அவ சொல்லுற வேலையெல்லாம் ஓடியோடிச் செய்வன்.. ஆனால் இப்பவும் அவ என்னைச் சின்னப் பெடியன் மாதிரி கண்ட கிண்ட வேலைகள் சொல்லுறதால நான் அவேன்ர வீட்டை போறதைக் குறைச்சுப் போட்டன்.. பத்தாததுக்கு ரெண்டாவது பெட்டை அக்காட்ட என்னைப் பற்றி ஏதோ அள்ளி வைச்சிட்டுது எண்ட சந்தேகமும் எனக்கு இருக்கு)

அக்கா என்னைப் பாத்து "என்ன பெட்டி வேணுமே" எண்டு கேட்டா.. நான் "இல்லை" எண்டு தலையாட்டினன். கடைசிப்பெட்டை என்னைப் பாத்துக் கண்ணால சிரிச்சுது. பிறகும் நான் போகாமல் நிக்கிறதைக் கண்ட மாமி "என்னடா" எண்டா.. "இல்லை மாமி ரெக்ஸை யாருக்கும் குடுக்கப் போறீங்களே?" எண்டன். கடைசிப் பெட்டை ஒரு மார்க்கமா சிரிச்சுக் கொண்டு அறைக்குள்ள ஓடிச்சுது. நான் வந்த கோவத்தில திரும்ப "அது ஒண்டுமில்லையடா இஞ்சதான் நிக்கும் நீ போ" எண்டு மாமி வாயுக்க ஒரு சிரிப்போட சொன்னா.. எல்லாமே எனக்கு ஒரு புதிரா இருந்துது.. ரெண்டாவது பெட்டை என்னை ஒரு பொருட்டாவே எடுக்கிறதில்லை.. நினைச்சா நான் அவவின்ர லவ் கதைய அம்மாட்டச் சொல்லி நாறடிச்சுப் போடுவன்.. ஆனால் ஏனோ மனம் கேக்கேலை.. நான் பேசாமல் திரும்பி நடக்க, பின் முத்தத்து வேப்பமரத்தில ரெக்ஸை அந்த தடியன் கட்டி வைச்சிட்டு நிலத்தில இருந்து ஏதோ செய்து கொண்டிருந்தான்.. ரெக்ஸ் அனுங்கிக் கொண்டு நிண்டுது. நான் நிண்டு கொஞ்ச நேரம் பாக்க மாமா "இதெல்லாம் நீ பாக்கக் கூடாது போ" எண்டார். தயங்கித் தயங்கி நான் வெளியில் வர ரெக்ஸ் பெரிசாக் கத்திற சத்தம் கேட்டுது. ரெக்ஸ்க்கு ஏதோ செய்யிறான் அந்த தடியன்.. ஓடிப்போய் அதைக் காப்பாற்ற வேணும் எண்டு ஆசையா இருந்திச்சு.. நான் எட்டிப் பாத்தன்.. மாமான்ர தலை மதிலால இன்னும் தெரிஞ்சுது.. அதால நான் திரும்பிப் போகாமல் பேசாமல் வந்திட்டன்.

அடுத்தநாள் நான் வெளியில வெளிக்கிடேக்க ரெக்ஸ் மாமா வீட்டு வாசலில நிண்டு மெல்லமாக் குரைச்சுது. நான் "ஓடி வா" எண்டு



கையக் காட்டவும் வராமல் சினுங்சிச் சினுங்கிக் குரைச்சுது.. நான் கிட்டப் போக பின்பக்கத்தை ஒரு மாதிரி உயத்திப் பிடிச்சுக் கொண்டு கால்கள் ரெண்டையும் அகட்டிக் கொண்டு முனகிய படியே மெல்ல மெல்ல என்னட்ட நடந்து வந்துது. நான் அதை மெல்லமாத் தூக்கி தடவி விட்டன். பின்பக்கமா அதுக்கு ஒரு கட்டுப் போட்டிருந்துது.

மூண்டு பெட்டைகளுக்குப் பிறகு கனகாலத்தால மாமிக்கு ஒரு பெடியன் பிறந்துது. நானும் தம்பியும் மாமிக்குப் பிள்ளை பிறந்ததை கதைச்சுச் சிரிச்சதைக் கேட்டு அம்மா "வயசுக்கு ஒரு மரியாதை இல்லாமல் உதென்ன கதையும் சிரப்பும்" எண்டு கோவிச்சா.. தம்பி என்ர காதுக்கு "எங்களுக்குத் தங்கச்சி பிறக்காட்டிச் சரி" எண்டு சொல்ல நான் சிரிப்புத் தாங்கேலாம வெளியில ஓடீற்றன். அம்மா என்னை முறைச்சுப் பாத்துப் போட்டுப் போட்டா..

கணன் மாமான்ர தலை நரைச்சிருந்தாலும் நடையில தளர்ச்சி இல்லை.. மாமி தலைக்கு டை அடிச்சிருந்தா. முகந்தான் சுருங்கிப் போய் இருந்துது. எங்களைக் கண்ட உடன கட்டிப் பிடிச்சு அழுதா. அப்பா செத்தாப்பிறகு இப்பதான் காணுறா.. அதுதானாம் அந்த அழுகை. பெட்டைகள் மூண்டும் கலியாணம் கட்டி லண்டனில தான் இருக்குதுகள் எண்டா. ரெண்டாவது பெட்டைக்கு எத்தின பிள்ளை எண்டு வாயில வந்த கேள்விய நான் அடக்கிக் கொண்டன். எனக்கு எப்ப கலியாணம் எண்டு கேட்டா.. "அவன் யாரையோ லவ் பண்ணிறானாம் பெட்டை யூனிவேசிட்டியில படிக்குதாம் படிப்பு முடியத்தான் கலியாணம் எண்டு இழுத்தடிக்கிறான்" எண்டு அம்மா சொன்னா. நான் பெருமையாச் சிரிச்சன். தன்ர கடைசிப் பெடியன் லண்டனில் டொக்டருக்குப் படிக்கிறான் எண்டு என்ர பெருமையில மண்ணை அள்ளிப் போட்டா மாமி.

லண்டனிலும் பாக்க கனடா நல்லா இருக்குது எண்டும், சாப்பாடு, இடமெல்லாம் எங்கட ஊர் போல கிடக்குது எண்டும் மாமா சொன்னார். தான் இப்ப இடியப்பம் தோசை ஒண்டும் செய்யிறேலை எல்லாம் கடையில வாங்கலாம் எண்டு அம்மா கனடாப் பெருமையக் கொஞ்சம் கூட்டிச் சொன்னா. தான் கனடாவில வாங்கின சீலைகளை மாமி அம்மாக்குக் காட்டினா. அம்மா முகத்தைச் சோகமா வைச்சுக் கொண்டு தான் இப்ப பெரிசாப் பட்டு ஒண்டும் கட்டிறேலை எண்டா.. எனக்கு விசர் வந்துது. தம்பி ரூமுக்க கொம்பியூட்டரில் கிணுகிணுக்கிற சத்தம் கேட்டுது. நாளைக்கு வேலைக்கு வெள்ளணைப் போக வேணும் இருண்டிட்டுது படுக்கலாம் எண்டா வழியக் காணேலை.. (நான் மூத்த ஆம்பிளப் பிள்ளையாம் விசிற்ரேஸ் வந்திருக்கேக்க அவையளோட இருந்து கதைக்க வேணுமாம்.. அம்மான்ர மனேஸ் இஞ்சையும் வேலை



படிப்பகம்

www.padippakam.com

செய்யுது) நான் சோபாவில இருந்து தூங்கிக் கொண்டு இருந்தன். கதை கதையெண்டு கதைச்சு அலம்பி ஒரு வழியாக் கொட்டாவி விட்டபடியே ஒவ்வொருத்தரா படுக்கப் போச்சீனம். நான் பேசாமல் சோபாவில படுக்க அம்மா வந்து எழுப்பி “அவையள் கண்டாச் சரியில்லை.. போய்த் தம்பியோட படு” எண்டு பலவந்தமா அனுப்பினா. தம்பி கட்டிலில காலை விரிச்சுப் பரந்து படுத்திருந்தான். இண்டைக்கு நித்திரை கொண்ட மாதிரித்தான் எண்டு நான் ஒரு ஓரமா ஒதுங்கினன்.

கண் மூடி மூடித் திறக்க நான் அயருவதும் முழிப்பதுமாகப் புரண்டு கொண்டு கிடந்தன். மாமீன்ர ரெண்டாவது அடிக்கடி வந்து சிரிச்சிது. தம்பி சின்னதாக் குறட்டை விட்டான். நான் கையால அவன்ர வாயை மூடிப்பாத்தன் சரி வரேலை.. பெட் சீட்டை எடுத்து தலையைப் போத்து கண்களை இறுக மூடி ஒண்டு ரெண்டு எண்டு மனதுக்க எண்ணிக் கொண்டு கிடக்க, என்ர அறையில கட்டில் ஆடுற சத்தம் கேட்டுது. மாமி கிளுகிளுத்தா சின்னதாச் சிரித்தா.. பிறகு சினுங்கினா.. மாமா ஏதோ ரகசிய குரலில குசுகுசுத்தார். மாமியின்ர குரல் இன்னும் சினுங்கியது. பிறகு ரெண்டு பேற்ற மூச்சும் ஒரு மாதிரிக் கேட்டுது. என்னடா இது சோதினை எண்ட படி நான் தம்பியப் பாத்தன் அவன் வாய் திறந்து சொர்க்கத்தில கிடந்தான். நான் காதைப் பொத்திக் கொண்டு கிடக்க மாமியின்ர ஆ.. ஆ வெண்ட குரல் வந்து காதைப் பொத்தி அடிச்சிது.. பிறகு கொஞ்ச நேரத்தால ஓய்ஞ்சு போச்சுது. மாமா இருமுற சத்தம் கேட்டிச்சு.. எனக்கு கையெல்லாம் குளிர்ந்து விறைச்சுப் போச்சு.. அடக்க முடியாமல் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு கிடந்த என்ர கண்களை நித்திரை வந்து மூட பின் கால்களை அகட்டிப் பிடித்தபடி முனகலோடு அரக்கி அரக்கி நடக்கும் நான் மறந்து போயிருந்த ரெக்ஸ்; என் கண்களுக்குள் வந்து போனது.



# பெண்கள்: நான் கணிக்கின்றேன்

பயணம் நிச்சயமாகி விட்டது. எப்படியாவது யன்னலருகிலுள்ள சீட்டை புக் பண்ணுங்கள் என்ற போது என்ன கடைசி நேரத்தில இப்பிடி கேக்கிறீங்கள் என்று அவன் சினப்பது தெரிந்தது.. “வரேக்க ஒரு பட்டு வேட்டி சால்வை வாங்கிக்கொண்டு வருவன்” என்றதும்.. வினோதமான ஒரு ஒலியுடன் அவன் சிரித்தான் அவ்வளவுதான்..

எனக்கான இருக்கை எண்ணை கச்சிதமான ஒருத்தி சுட்டிக்காட்ட பட்டுவேட்டி சால்வைக்கு முழுக்குப் போட்டு உடலை நுழைத்துக்கொண்டேன். நெருக்கமாக இருந்தது. இடதுபக்கத்தில் பின்னால் இருந்து யாரோ பின்னால் குத்துவதுபோல் ஒருவித ஒலியை எழுப்பியபடியே ஒரு பிலிப்பீனோ தம்பதி ஒருவர். சண்டை போடுகிறார்களா? சம்பாஷிக்கிறார்களா? புரியவில்லை.. புரிந்து என்ன பண்ணுவது. தொடரும் ஆறுமணித்தியாலங்களிற்கு எனக்கான பின்னணி இசை அது என்று மட்டும் புரிந்தது.. வலதுபக்கத்திலிருந்த வெள்ளைப்பெண்ணிடமிருந்து வந்த விலையுயர்ந்த வாசனை தலையிடியைத் தந்தது.. சுற்றுமுற்றும் பார்த்தேன்.. கனடா பல்கலாச்சார நாடு என்பது உறுதியானது.. வடஇந்தியப் பெண்மணி ஒருத்தி கணவனின் உழைப்பில் குடும்பத்தைப் பார்க்க ஊருக்குப் போகிறாள் போலும். கழுத்து கைகள் எல்லாம் கணவனின் உழைப்பால் நிறைந்திருந்தது.. தலையணையை அணைத்தபடி எப்போது விமானம் கிளம்பும் குறட்டை



படிப்பகம்

www.padippakam.com

விட்டு நித்திரை கொள்ளலாம் என்பதான நிலையில் அவள் காத்திருந்தாள்.. எடுத்துச் சென்ற புத்தகத்தைக் கூட பிரிக்க முடியாத இறுக்கத்தில் இறுகிப்போய் நான்.. என்னைத் தவிர எல்லோருமே வாழ்வில் பலமணி நேரங்களை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் மீண்டும் எனக்குள் எழுந்தது.. நான் தயாரானேன்.. பயணத்திற்காய்..

அவள் என்னை இறுக அணைத்துக்கொண்டாள்.. அதே நீள் சதுர முகம் வயதாகிப்போயிருந்தது.. கட்டையாய் வெட்டப்பட்ட தலைமயிரை தூக்கிக் கட்டியிருந்தாள்.. கருகருவென்றிருந்தது.. நிச்சயம் டை அடித்திருப்பாள்.. உடல் இறுகி ஆண்தனத்தைக் காட்டியது.. மீண்டும் அணைத்துக்கொண்டோம்.. "எத்தினை வருஷமாச்சு.. இப்பவாவது வந்தியே.." என்னுடைய பையைப் பறித்து கழுத்தில் மாட்டியபடியே குதிரை போல் அவள் நடந்தாள்.. நீண்ட தலைமயிரும் மெல்லிய இடையும் நாணமும்.. கூச்சமுமாக பெண்களுக்கே ஆதாரமாக இருந்தவள்.. இன்று.. என்னை நான் குனிந்து பார்த்துக்கொண்டேன்.. விதியை நொந்தபடியே அவள் பின்னால் நான்..

லண்டனின் நெளிந்த குறுகிய ரோட்டும்.. நெருப்புபெட்டி போன்ற கார்களும் வினோதமாக இருந்தது.. அவள் ஆங்கிலப் பாடல் ஒன்றை ஓட விட்டு என் கைகளுக்குள் தன் கையைப் பிணைத்து "நல்ல குண்டா வந்திட்டாய்.. அம்மா மாதிரி இருக்கிறாய்" என்றாள்.. பிள்ளைகள் கணவன் குடும்ப வாழ்க்கை எல்லாம் எப்பிடிப் போகுது என்றாள்.. என் அளவில் எனது சந்தோஷங்கள் எனக்குப் பிடித்திருந்தது.. பெருமையாயும் இருந்தது.. அவளை நோகடிக்க விரும்பாது நான் சிரித்தேன்.. அவளும்..

கச்சிதம் என்ற வார்த்தைக்கு அர்த்தத்தை அவள் இருப்பிடத்திற்குள் புகுந்த போது புரிந்துகொண்டேன்.. வீடு ஒரு பல் கலாச்சார பள்ளியாய் சீனர்களின் சிரித்த வாய் குண்டுப் புத்தாவிலிருந்து.. கறுப்பர்களின் நார் பின்னல் தலையுடனான சின்னச் சின்னச் சிலைகள் ஓவியங்களுடன் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு நாட்டவர்களின் கலையுணர்வைக் காட்டி நின்றது.. கண் விழித்து நான் வியப்போடு பார்க்க தனது வேலை அப்படிப்பட்டதென்றாள்.. கட்டிடக்கலை ஆராய்ச்சியில் தான் வேலை செய்வதாகவும் பல நாட்டு நண்பர்கள் தனக்கு இருப்பதாகவும் சொல்லி என்னை நான் தங்கும் அறைக்கு அழைத்துச் சென்று காட்டினாள்.. எல்லாமே புதுமையாகவும் கொஞ்சம் அதிசயிக்கக்கூடியதாகவும் இருந்தன..

நான் அவளுடன் தங்கும் அந்த ஒரு கிழமையில் எங்கெல்லாம் செல்வது, என்ன சாப்பிடுவது என்பதை மிகவும் நேர்த்தியாக எழுதி வைத்து என்னிடம் காட்டி சம்மதமா என்றாள்? நான் யாரையாவது



பிரத்தியேகமாகச் சந்திக்க வேண்டுமா என்றும் கேட்டாள்.. அவள் எல்லாவற்றையும் ஒழுங்கு முறையோடு எழுதி வைத்து அதன்படி நடப்பது ஒரு வித செயற்கைத் தனம் போல் இருந்தாலும் அதில் இருக்கும் கச்சிதம் அவள் எனக்காக எடுத்துக்கொண்ட பிரயத்தனம் என்னைக் கவர்ந்திருந்தது.. பதினைந்து வருட நண்பியை முதல் முதலாய் பார்ப்பது போல் வினோதமாகப் பார்த்தேன்.. இருந்தும் அந்த வீடு நிறைவற்றதாய் எனக்குள் பெருமூச்சை வெளிக்கொணர்ந்ததை தவிர்க்கமுடியவில்லை..

கால்கடுக்க லண்டன் "ஹைட்" பாக்கில் பொடேரோ சிப்ஸ் சாப்பிட்டபடியே பாடசாலை நாட்களை மீட்டு மீட்டு வாய்விட்டுச் சிரித்து மீண்டும் எம்மை சிறுமிகளாக்கி புளகாங்கிதம் அடைந்தோம்.. மீட்டுப்பார்க்க எமக்குள் அடங்கியிருக்கும் நினைவுகளைப்போல் புலம்பெயர்ந்து வாழும் குழந்தைகளுக்கு இல்லை என்றபடியே அவளின் கண்பார்வையைத் தவிர்த்து "ஏன் இன்னும் கலியாணம் கட்டாமல் தனியா இருக்கிறாய்" என்ற போது அவளின் தொலைபேசி ஒலித்தது.. என்னிடம் கண்ணால் பொறு என்பதாய் காட்டி விட்டு சிறிது தூரமாய் போய் சிரித்துச் சிரித்துக் கதைத்தவள்.. பின்னர் "என்ர ப்ரெணட் மைக்கல் வெரி இன்ரறஸ்ரிங் பெலோ... நைஜீரியன் யூனிவேர்சிட்டியில வேலை செய்யிறான்.. எப்ப பாத்தாலும் ரிசேஜ் அது இது எண்டு உலகம் சுத்துவான்.. இப்ப பிரான்ஸ்சில நிக்கிறானாம் இன்னும் ட்ரூ வீக்ஸில இஞ்ச வந்திடுவன் எண்டான்.. நீ வாறது அவனுக்குத் தெரியும்.. உனக்கும் ஹாய் சொல்லச் சொன்னான்.." மூச்சு விடாமல் கூறியவள்.. சிறிது நிறுத்தி "வந்தால் என்னோடதான் தங்கிறவன்.." என்றாள் இயல்பாய்.. என் இயல்பு களங்கப்பட்டது..

எனக்கான அந்தக் கிழமை.. அவளுடன் சேர்ந்து ஒவ்வொரு இடமாகச்செல்லும் போதும் மிகவும் அர்த்தம் பொதிந்ததாக பிரமிப்பை ஏற்படுத்தியது.. குடும்பத்துடன் எத்தனை இடங்களுக்குச் சென்றுள்ளேன்.. எப்போதும் பதட்டமும், களைப்பும், அலுப்பும் எப்படா வீட்டிற்கு வருவோம் என்றிருக்கும்.. வீணான சிடுசிடுப்புக்கள் கோபங்கள்.. வெறிச்சிடும் வாழ்வு.. ஆனால் இப்போது.. இவள் வாழ்வின் ஒவ்வொரு விடயத்தையும் அர்த்தமாக்கி அனுபவிக்கிறாள்.. தோள் தேய்த்து நடக்க கணவன்.. காலுக்குள் இடற குழந்தைகள் அற்ற நிலையிலும்..இவளால் சிரிக்க குதூகலிக்க முடியுமெனின்.. கணவன் குழந்தைகள்.. வீடு கார்.. அதற்கும் மேலாய் இன்னும் கொஞ்சம் போய் வாசிப்பு, எழுத்து என்று என்னை மேன்மை படுத்தி பெண்ணியம், முற்போக்குத்தனம் என்று பவிசு பண்ணி.. மேதாவியாய் உலவி.. இப்போது.. என் முற்போக்குத்தனம் பெண்ணியக் கருத்துக்கள் என்னுள் முரண்டு பிடிக்கத்தொடங்கியது.. இருந்தும் எனக்குள் இவள் ஏன் இன்னும் கலியாணம் கட்டாமல்.. ஆண்களோடு இவ்வளவு க்ளோஸாக..



படிப்பகம்

www.padippakam.com

லண்டனில் பிரசித்தி பெற்ற சுற்றுலாப்பயணிகள் பார்க்க வேண்டிய இடங்கள் என்ற பட்டியலை முடித்து அவளது வேலைத்தளத்திற்கும் அழைத்துச் சென்றாள்.. பல இனத்து நாட்டவர்களும் அவளைக் கண்டதும் ஓடிவந்து அணைத்து என்னையும் சுகம் விசாரித்தார்கள்.. பாடசாலை நாட்களில் ஆண்களை நிமிர்ந்து பார்க்க மாட்டாள்.. ஆனால் இப்போது.. சரளமாக ஆண்களை அணைப்பது அவர்களின் கையைப் பிடித்தபடியே உரையாடுவது.. அவளின் இந்த "போல்ட்நெஸ்" எனக்குள் வியப்பாய்.. விரிய.. அவள் இடுப்பை வளைத்துப் பிடித்திருக்கும் வெள்ளையன் ஒருத்தனை தானும் அணைத்து அவன் உதட்டில் முத்தமிட்டு ஈரப்படுத்தி எல்லோரிடமும் இருந்து விடைபெற்றுக்கொண்டாள்.. நான் என்னிலிருந்து மீண்டு வர பல மணிநேரமானது..

அவளை நான் உன்னிப்பாகக் கவனித்தேன்.. ஒருவேளை தீர்க்க முடியாத நோயினால் சாகப்போகிறாளோ? இல்லாவிட்டால் காதல் தோல்வியை மறைக்க சந்தோஷமாக இருப்பதாய் பாசாங்குபண்ணுகிறாளோ..? கர்ப்பம் கொள்ளாததால் கண்டிப்போன உடல்.. நேர்கோடாய் நிமிர்ந்து நிற்கும் விதம்.. நுனிநாக்கு ஆங்கிலம்.. காற்றில் கலைந்து நெற்றியில் வழியும் கருமயிர், கன்னத்தில் குழி விழ குழந்தைபோல் சிரிப்பு.. எனக்குள் எதுவோ எழுந்து என்னைக் கேள்வி கேட்க தலையை உலுக்கி மீள முயன்று மீண்டும் தோற்றேன்..

லெமன் ரீக்குள் கொஞ்சம் தேனை விட்டு எனக்கு ஒரு கப்பை நீட்டியவள்.. சோபாவில் இரு கால்களையும் தூக்கிப்போட்டு தன்னை குஷனுக்குள் புதைத்து தனது ரீ கப்பை இரு கைகளாலும் அணைத்துப் பிடித்து வெளியேறும் சூட்டை உள்ளங்கைக்குள் வாங்கி ஒரு குழந்தையைப் போல் கவனமாகக் வாயருகே கொண்டு சென்று கண்களை மூடி முகர்ந்து பார்த்துப் பின்னர் ஒரு முறை மெதுவாக உறிஞ்சி.. ச்ஆஆஆஆ.. என்றாள்.. ஒரு தேனீரைக் கூட இவளால் எப்படி இவ்வளவு அலாக்காக அனுபவிக்க முடிகிறது..

எனக்குள் எழுவது என்ன?.. புரியவில்லை.. புரிவதில் சம்மதமுமில்லை.. மௌனமாக இருந்து விட்டு பின்னர் மீண்டும் கேட்டேன்.. "ஏன் நீ இன்னும் கலியாணம் கட்டேலை..?" நான் கேட்பதைப் பொருட்படுத்தாது மீண்டும் ஒரு முறை தேனீரை உறிஞ்சியவள்.. என்னைப் பார்த்துச் சிரித்தாள்.. "எதுக்கு நீ இந்தியா போறாய்" தெரியாததுபோல் கேட்டாள்.. நான் அலுத்துக்கொண்டேன்.. இவள் எதையோ மறைக்கிறாள்.. உண்மையான நட்பு என்பதற்கு இவளிற்கு அர்த்தம் தெரியவில்லை என்ற கோபமும் வந்தது.. அவள் என்னையே பார்த்தபடி இருக்க..



"அதுதான் சொன்னனே.. இலக்கியச்சந்திப்பு ஒண்டு.. பெண்ணியம் எண்ட தலைப்பில நான் ஒரு கட்டுரை வாசிக்கப் போறன். எங்கட கலாச்சாரத்தில எப்பிடியெல்லாம் பெண்கள் அடக்கப்படுகிறார்கள்.. எண்ட கட்டுரை" என்றேன் பெருமையாய்.. பின்னர் நான் வாசிக்கும் புத்தகங்கள் பற்றியும், எனது முற்போக்குச் சிந்தனை கொண்ட எழுத்து.. பெண்ணியக் கருத்துக்கள் என்பன எவ்வளவு தூரம் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன, பேசப்படுகிறன என்பது பற்றியும் பெருமை இல்லாது சொல்லி வைத்தேன்.. "குட்.. வாவ்" என்று விட்டு மீண்டும் தேனீரை உறிஞ்சிய படியே உன்னை நினைக்க எனக்குப் பெருமையா இருக்கு என்றாள். எனக்குள் நான் மீண்டும் என்னைத் துளைத்தெடுத்து கேட்டேன் "ஏன் இன்னும் கலியாணம் கட்டாமல் இருக்கிறாய் ஏதாவது பேர்சனல் பிரைச்சனையா?"

அவள் கண்மூடி மீண்டும் தேனீரை உறிஞ்சியது எரிச்சலைத் தந்தது.. "நான் கேக்கிறதை நீ இக்நோர் பண்ணுறாய் எனக்கு விளங்குது.. நான் நினைச்சன் நீ என்ர உண்மையான ப்ரெண்ட் எண்டு; உன்னுடைய கவலை வேதனைகளை என்னோட பகிர்ந்து கொள்ளாமல் நீ என்னை தூரத்தில வைக்கிறாய்" நான் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட..அவ்வள் வாய் விட்டுச் சிரித்தாள்.. பின்னர் எழுந்து வந்து என்னருகில் இருந்தவள்.. "ரெண்டு பிள்ளைகளுக்கு அம்மா எண்டுறாள் இன்னும் அதே குழந்தைத்தனம்" என்று என் முதுகில் தட்டி விட்டு என் ரீ கப்பையும் வாங்கிக்கொண்டு குசினியை நோக்கிச் சென்றாள்.. என்ன குழந்தைத் தனம்? நான் கேட்டதில என்ன பிழை? இந்தளவு வயதாகியும் கலியாணம் கட்டேலை.. வாரிசு எண்டு சொல்ல ஒரு பிள்ளை இல்லை.. இதில நகைச்சுவைக்கு எங்கே இடம்.. மனம் அடித்துக்கொள்ள.. நான் மௌனமாக அவளைத் தொடர்ந்தேன்..

மீண்டும் தொலைபேசி அழைத்தது.. இப்போது எல்லாமே எனக்கு கோபத்தைத் தந்தது.. அவளின் ஒவ்வொரு அசைவும் எனக்குள் அசிங்கமாகி.. உன்னிப்பாய் நான் கண்காணிக்க.. ஆங்கிலத்தில் அவள் உரையாடலில் காதல் தெரிந்தது.. இது யார் இன்னுமொருத்தனா? முதலில் நைஜீரியக் கறுப்பன் தன்னுடன் வந்து தனியாகத் தங்குவான் என்றாள்.. பின்னர் வெள்ளையனை அணைத்து முத்தமிட்டாள்.. இப்போது யார் சைனாக்காறனா? கடவுளே நல்ல காலம் நான் தனியாக இங்கு வந்தது.. இவர் வந்திருந்தால் இதுதான் உம்மட க்ளோஸ் ப்ரெண்டின்ர லச்சணமோ என்று கேட்டு என்னையும் தவறாகக் கணித்திருப்பார்.. அவள் தனது தனிமையை முழுமைபெறாத தனது வாழ்க்கையைப் பற்றிக் கதைக்காதது எனக்குள் எரிச்சலை ஏற்படுத்த எப்படியும் ஏதாவது சாக்குச் சொல்லி கெதியாக இங்கிருந்து கிளம்பிவிட வேண்டும்.. இவளோடு தனித்திருந்தால்



படிப்பகம்

www.padippakam.com

தெரிந்தவர்கள் பார்வையில் பட்டு வைத்தால்? நானும் கணிக்கப்பட்டு விடுவேன்..

வாய்க்குள் ஏதோ பாடலை முணுமுணுத்தவள்.. நான் அவளையே உற்றுப்பார்த்தபடி நிற்பதைக் கவனித்து விட்டு "என்ன?" என்பது போல் தலையை ஆட்டினாள்..

"நீ எதையோ என்னட்ட இருந்து மறைக்கிறாய்.. நீ இன்னும் கலியாணம் கட்டாமல் இருக்கிறதுக்கு ஏதோ பெரிய காரணம் இருக்க வேணும் சொல்ல விருப்பமில்லாட்டி விடு.." நான் முகத்தை தூக்கி வைத்துக்கொண்டேன்.. அவள் என்னைப் பார்த்து ஒரு விதமாகச் சிரித்தபடியே.. "சரி சொல்லு. நீ சந்தோஷமா இருக்கிறாயா?" கேட்டாள்.. "ஓம் அதில என்ன சந்தேகம்.. நல்ல அண்டஸ்ராண்டிங்கான புருஷன் நல்ல வடிவான கெட்டிக்காரப் பிள்ளைகள்.. வசதிக்கும் குறைவில்லை.. அதோட என்ர வாசிப்பு, எழுத்து எண்டு எவ்வளவு சந்தோஷமா இருக்கிறன்.. இதுக்கு மேல ஒரு பொம்பிளைக்கு என்ன வேணும் சொல்லு" என் முகத்தில் அதி உயர்ந்த பெருமை வழிய.. அவள் என்னை உற்றுப் பார்த்தாள்.. அவள் கண்களின் தீவிர ஒளி எனைத் தாக்க நான் பார்வையைத் தாழ்த்திக்கொண்டேன்.. என் கைகளைப் பற்றியபடியே அவள் சொன்னாள்.. "நீ சந்தோஷமா இருக்கிறாய் எண்டதை முற்றும் முழுதாக நான் நம்பிறன்.. ஏன் கலியாணம் கட்டினனீ பிள்ளைகளைப் பெத்தனீ எண்டு நான் உன்னட்ட எப்பவாவது கேட்டனானா?" என் நெற்றியில் முத்தமிட்டவள் தனது கைகளைக் கழுவி விட்டு படுப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கியிருந்தாள்.. நீண்ட நேரமாக என்னால் நின்ற இடத்தை விட்டு அசையமுடியவில்லை..



# சூட் வாங்கப் போறன்..

நெஞ்சை எதுவோ அழுத்தி, அழுத்தி இறுக்கிக் கொள்ள பொய்யற்ற வேதனையுடன் அந்த வீதியால் நடந்து செல்கின்றேன். பல முக்கிய சந்தர்ப்பங்களில் எனது கார் என்னை கைவிட்டு விடுவதுண்டு. இன்றும் அப்படித்தான். அனேகமாக இந்த வீதியால் காரில் செல்லும் போது அந்த ஃப்யூன்றல் ஃஹோம்மைக் கடக்கையில் எனக்குள் பலவிதமான கற்பனைகள் வந்து செல்லும். எத்தனை உயிரற்ற உடல்கள் இந்த மண்டபத்திற்கு வந்து சென்றிருக்கும். கைக்குழந்தையில் இருந்து கைத்தடிக்காறர்கள் வரை, ஒரு வினாடியில் விபத்தால் இறந்தவரும், பலவருடங்களாக நோயால் அவதிப்பட்டுச் சிதைந்தவரும், வாழ ஆசைகொண்ட கொலைசெய்யப்பட்டோரும் வாழ்வை வெறுத்த தற்கொலையாளிகளும், வடதுருவம் தென்துருவம், மொழிகளால் வேறுபட்டோர் நிறங்களால், குணங்களால்.. இப்படியே என் கற்பனை வளர்ந்து செல்ல செல்ல வேண்டிய இடத்திற்கு கார் தானாக எனைக் கொண்டு சேர்ப்பதுண்டு. இரவு நேரங்களில் இந்த வீதியால் தனியே வருவதை தவிர்ப்பேன். ஆவி, பேய் போன்றவற்றில் எனக்கு நம்பிக்கை இல்லாததுபோல் வெளி உலகிற்குக் காட்டிக் கொண்டாலும் தனியே இந்த வீதியில் வரும் போது தேவையில்லாத கற்பனை எல்லாம் வந்து என்னைப் பயமுறுத்தும். அவசரமாக அந்தப் பொழுதுதான் நான் பார்த்த பேய்ப்படத்தின் ரீல் மனக்கண்ணில் ஓடும். நண்பன் சொன்ன ஆவிக்கதை



படிப்பகம்

www.padippakam.com

ஞாபகம் வரும். பல வருடங்களிற்கு முன்னமே இறந்த உறவுகளின் முகம் தெரியும். பேய் இருக்கோ என்னவோ நான் வீணாக "ரிஸ்க்" எடுக்க விரும்பாதவனாக்கும்.

ஒருநாள் என் தற்போதைய மனைவியும் முன்னாள் காதலியுமான சாரதாவோடு இந்தப் பாதையால் இரவு வரவேண்டியிருக்க நான் காரை வேறுபக்கமாகத் திருப்புவதைக் கண்டு விட்டு "எங்க போறியள்?" எண்டாள். உண்மையைச் சொன்னால் என் ஆண்மைக்கு இழுக்கென்று விட்டு நான் சமாளிக்க, அவள் வாயுக்க சிரிச்சுக் கொண்டு "அப்ப பிள்ளை சொன்னது உண்மைதான்" எண்டாள். எனக்குக் கொஞ்சம் விளங்கி விட நான் மௌனமானேன். "அப்பாக்குப் பேய்க்குப் பயமம்மா" மகள் சொல்லிச் சிரிச்சது நினைவுக்கு வந்தது. அப்ப நான் மட்டுமா இந்த ரோட்டால போகப் பயப்பிடுறன். மற்றாக்கள் என்னை மாதிரியெல்லாம் கண்ட, கண்ட கற்பனை பண்ணிப் பயப்பிடுறேலையோ? எனக்குள் குடையத் தொடங்கியது.

பள்ளிக்கூட நாட்களில வகுப்புக்குக் குண்டு போட்டிட்டு பெடியளோடை ராணி தியேட்டருக்க புகுந்து படம் பார்க்கும் போது எல்லாப் பெடியங்களும் நாயகிகளின் மார்பு, இடை, தொடை எண்டு ரசிச்சு விசிலடிக்க நான் மட்டும் நாயகிக்கு மிக நெருங்கியிருக்கிற நாயகனின்ர குறியில கண்ணாய் இருப்பன். ஒரு வடிவான பொம்பிளையோட இவ்வளவு கிட்டக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு இருந்தால் உணர்ச்சிகள் கிளறுப்படாதோ? எண்ட கேள்வி என்னைப் போட்டுக் குடையும். ஆங்கிலப் படம் பாக்கேக்க முத்தக் காட்சிகளில இவர்களின் வாய் மணக்காதோ? கேள்வி எழும்பும். இப்பிடி வினோதமான கேள்வி எழும்பி, எழும்பி அடங்குமே தவிர நான் ஒருத்தரிடமும் இதுபற்றிக் கேட்பதில்லை.

இன்னும் கொஞ்சத் தூரம் தான் இருந்தது அந்த ஃபியூன்றல் ஃஹோமை அடைவதற்கு. வழியில் இருந்த கண்ணாடிக் கட்டிடம் ஒன்றை நான் கடக்கும் போது என் உருவ பிரதிபிலிப்பைக் கண்டு சிறிது நேரம் அங்கு நின்று எனது உடை, தலைஇழுப்பு போன்றவை சரியாக இருக்கிறதா? என்று நோட்டம் விட்டேன். செத்த வீட்டிற்காக கறுப்பு பாண்ட்ஸ்ஸூ, வெள்ளை சேட்டும் போட்டிருந்தேன். கனநாட்களாக அலமாரியில் போடப்படாமல் தூங்கியதால் சேட் கொஞ்சம் இறுக்கமாய் இருந்தது. புதுசா ஒண்டு வாங்குவம் எண்டால் மனம் வரவில்லை. ஒருநாள் கூத்துக்கு ஏன் வீணாக் காசைச் சிலவழிப்பான் என்று இறுக்கி பட்டினைப் பூட்டிவிட்டு வந்து விட்டேன். கொஞ்ச நேரம் தானே சரிக்கட்டுவம் என்று மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு நடந்தேன்.



கனடா வந்து இத்தின வருஷத்தில நான் ஒரு நாளும் ஃபியூன்றல் ஃஹோம் போனதில்லை. யாராவது செத்தா அவர்கள் வீட்டிற்கு போய் ஒருக்கா முகத்தைக் காட்டி விட்டு மாறி விடுவது எனது வழக்கம். ஆனால் இது என்னுடைய நண்பன் நேசனின் மரணவீடு. அதுவும் என்னோடு ஒன்றாய் படித்து. ஒன்றாய் வேலை செய்து ஒரு உடன் பிறப்பு போல வாழ்ந்தவன் திடீரெண்டு நெஞ்சு நோவென்று சொல்லி இறந்து போனான்.

சாரதா கத்தினாள். "சொன்னாக் கேக்கிறியளே ஆடு ஆடாச் சாப்பிடுங்கோ. பத்தாததுக்கு தேங்காய்ப்பூ போட்ட புட்டு வேற. ஒரு நாளைக்கு நீங்களும் இப்பிடித்தான் திடீரெண்டு போகப்போறியள், நான் இந்தப் பிள்ளைகளோட கிடந்து மல்லுக்கட்டுறன்" எனக்கு அவள் அவசரமாக நாள் குறித்தாள். நான் என்னைக் குனிந்து பார்த்தேன். கால்களைக் காணவில்லை. நாளையில இருந்து விடிய விடிய வீட்டைச்சுத்தி ஓடவேணும். முடிவெடுத்தேன். அடிக்கடி இப்பிடி முடிவெடுத்தபடியே இருந்தேன்.

இறப்பதற்கு முதல்நாள் கூட நேசன் என்னுடன்தான் கழித்தான். ஊர்ப் பெடியளின் விளையாட்டுப் போட்டியைப் பார்த்து விட்டு இரவு என்னுடைய வீட்டில் ஆட்டு இறைச்சிக்கறியும், புட்டும் சாப்பிட்டு விட்டுச் சென்றவன் அடுத்தநாள் காலை வேலையில் நெஞ்சு நோகுது எண்டான். மௌனமாக ஆர்ப்பாட்டம் இன்றி இறந்து போனான்.

நான் பொக்கெற்றுக்குள் இருந்து சீப்பை எடுத்து தலையை ஒருமுறை இழுத்துக் கொண்டேன். ஆட்டு இறைச்சிக்கறியும், புட்டும் என் மனதுக்குள் வந்தது. இதனால்தான் நேசன் இறந்தானோ? நான்தான் அவனைக் கொன்றேனோ? அவனுக்கு ஏற்கெனவே இருதயக்கோளாறு இருப்பது தெரிந்தும் கொழுப்புக்கூடிய சாப்பாட்டை சாப்பிட வைத்தது என் தவறோ? குற்றவுணர்வு எனைத்தாக்கி, அந்த வேகத்திலேயே "சா" யாருக்கும் எந்த நேரமும் வரும்; சும்மா நான் என்னை குற்றவாளியாக்கிக் கொண்டு என்று என்னை நானே சமாதானப்படுத்தி கண்ணாடியில் முகத்தை சோகமாக வைத்துப் பார்த்து மரணவீட்டிற்கு இது போதும் என்ற திருப்தியோடு அந்த ஃப்யூன்றல் ஃஹோமிற்குள் நுழைந்தேன்.

வாசுகி கதறிக்கொண்டிருந்தாள். அவளை யாரோ ஒரு பெண் அணைத்துக் கொண்டிருந்தாள். நல்லா நடிக்கிறாள்; எப்ப பாத்தாலும் நேசனை பேசிக்கொண்டிருப்பாள் இப்ப கத்துறாள். "பாவம் அந்தப் பிள்ளை நேசன் குடிச்சுப் போட்டுக் கார் ஓடினா பேசுவாள்தானே, உங்களுக்கு உங்கட ப்ரெண்டுக்கு புத்தி சொல்ல வக்கில்லை; அந்தப் பிள்ளையில குறைகண்டு பிடிச்சுக் கொண்டு" என் பாரியார் என் மேல்



படிப்பகம்

www.padippakam.com

பாய்ந்தாள். "ஆம்பிளைகள் அப்பிடி இப்பிடித்தான் இருப்பீனம் பொம்பிளைகள் தான் அட்ஜெஸ் பண்ணிக் கொண்டு போக வேணும், ஆக்களுக்கு முன்னால இப்பிடிப் புருசனை மரியாதை இல்லாமல்" வாய்வரை வந்ததை விழுங்கிக் கொண்டன்.

நேசன் படுத்திருந்தான். முகத்தில் சின்ன ஒரு புன்னகை தெரிந்தது. முகம் கறுத்திருந்தது. நெற்றியில் விபூதி சந்தணம். 42 வயசிருக்கும்; ரெண்டு சின்னப் பிள்ளைகளுக்கு அப்பா. என்னைப் போல இல்லை, நேசனுக்கு கனக்க கெட்ட பழக்கவழக்கங்கள் இருந்தன. குடி, சிகரெட் எண்டு.. கனக்க எண்டு போட்டு ரெண்டு மட்டும்தான் சொல்ல முடிந்தது. மௌனமாக நின்றேன். அவனுக்குக் கெட்ட பழக்கவழக்கங்கள் இருந்தன; அதானால்தான் செத்தான். "நேசன் கெட்டவன்".

"மல்லி" என் கண்களுக்குள் வந்தாள். என்னோடு வேலை செய்பவள். திருமணம் முடித்துப் பிரிந்து தனியாக வாழ்பவள். •தனது உடலின் அம்சங்களை அம்பலப்படுத்தவென்றே உடை உடுத்தி கண்களால் சிரித்துத் திரிபவள். நேசன் சொன்னான் "நல்ல வடிவா இருக்கிறாள். புருசனோட இல்லாட்டியும் வேற யாரையாவது கலியாணம் கட்டிக்கொண்டு சந்தோஷமா இருக்கலாமே. ஏன் சும்மா பேரைக் கெடுக்கிறாள்" எனக்கு அதில் உடன்பாடு இல்லை. திருமணம் என்ற பந்தத்தை அவள் விரும்பினால் என்போன்ற திருமணமான ராமர்கள் என்ன செய்வது? மல்லி என் கண்கள் பார்த்துச் சிரித்தாள். என் கைகள் அவள் உடல் கசக்கத் துருதுருத்தன. நான் ரூம் போடுவம் எண்டன், ஒத்துக் கொண்டாள். இன்றும் தொடருகிறது எமது உறவு. ஆனால் ஒரு காக்கை குருவிக்கும் தெரியாது. சிகரெட், குடிபோல் இது வெளியில் காட்டிக்கொடுத்து விடாத கெட்ட பழக்கம். "நான் நல்லவன்".

பலர் வந்து பார்த்து அழுது செல்லும் பார்வைப் பொருளாக நேசன் படுத்திருந்தான். எனக்கும் அவனுக்குமான நெருக்கம் பலர் அறிந்திருப்பதால் நான் பிரத்தியேகமாக என்னை முன் வரிசையில் அமர்த்திக் கொண்டேன். அழகான பூக்களின் அலங்காரத்தின் நடுவே நேசன் படுத்துக் கிடந்தான். என் பார்வை அவனைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தது. நேற்று நேசன் என்று அழைக்கப்பட்டவன் இன்று பிரேதம், "(டி)பொடி" என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றான். நாளை மீண்டும் அவன் பார்வைக்கு வைக்கப்படுவான். நாளை மாலை நெருப்புப் பேறணைக்குள் வைக்கப்பட்டுப் பொசுங்கிப் போவான். அதன் பின்னர் மெல்ல மெல்ல மறக்கப்பட்டு சுவடுகள் அழிந்து போகும். என் கண்கள் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தன. இது நேசன். இன்று அவனின் மரணச்சடங்கு. இதுபோல் ஒருநாள் எல்லோருக்கும் வரும். உறவுகள்



அழுது சிதறும். இதுபோல ஒருநாள் எனக்கும் வரும். நினைத்தபோது என் உடல் புல்லரித்தது. நான் குனிந்து பார்த்தேன். கால்களைக் காணவில்லை. நடந்து களைக்கும் போது மூச்சு வாங்கியது. சாப்பாட்டைக் குறைக்க வேணும். உடற்பயிற்சி செய்ய வேணும். மனம் சுழன்று சுழன்று வந்தது. பாவம் சாரதா நான் திடீரென்று செத்துப் போனால் துடித்துப் போவாள். தனிய பிள்ளைகளுடன் ஐயோ நினைக்கவே நெஞ்சு நடுங்கியது. தனியே அவள் என்ன செய்வாள்? ஒருவேளை மறுமணம் செய்து கொள்வாளோ? என் உடம்பில் கோபம் உருப்பெற்றது. அழகாகவும் இளமையாகவும் இருக்கின்றாள். நான் செத்தால் நிச்சயம் மறுமணம் செய்வாள். நான் உறுதியானேன். சிலவேளை இப்பவே யாரோடையாவது தொடர்பிருக்குமோ? கடைக்குப் போனனான் அது இது என்று சாட்டுச் சொல்லி அவள் வேலையால் நேரம் கழித்து வரும் நாட்கள் நினைவிற்கு வந்தன. அப்பிடி ஏதாவது இருந்து மாட்டுப் பட்டால் கொலைதான் விழும். நான் கால்களை இறுக்கி அடித்துக் கொள்ளப் பக்கத்தில் நின்றவர் என்னை ஒரு மாதிரிப் பார்த்தார். நான் நிலத்தில் எதையோ மிதிப்பது போல் பாவனை செய்தேன் (எறும்போ?)

யாரோ தேவாரம் பாடினார்கள். நேசன் அசையாமல் கிடந்தான். அவனின் தலை சிறிது உயர்ந்து இருப்பது போல்பட்டது. பாவம் கிடத்தியவர் கவனிக்கவில்லை. உயிரற்ற உடல் என்ற அலட்சியம். தலையை பதித்து விட வேண்டும் போல் மனம் பரபரத்தது. நெஞ்சு நோகேக்க எப்பிடி உணர்ந்திருப்பான். நான் கார் விபத்து ஒன்றில் அடிபட்ட போது உயிர் போவது போல் நோ கண்டேன். ஆனால் உயிர் போகவில்லை. அப்பிடியாயின் உயிர் போகும் நெஞ்சு நோ இன்னும் கூடுதலாக இருந்திருக்கும். பாவம் நேசன். என் பார்வை அவனின் உடல் மேய்ந்தது. அவன் கால் விரல்களிலிருந்து தலை வரை நினைவலைகளால் மேய்ந்தேன். துடையில் பெரிதாக ஒரு மச்சமிருக்கு. கடற்கரையில் குளிக்கும் போது கண்டுள்ளேன். எல்லாமே பொசுங்கப் போகுது. ஐயோ ஐயோ ஐயோ ஏன் சாவென்று ஒன்று உலகில்?

என் பார்வை அவன் நெஞ்சுப் பகுதியில் வந்து நின்றது. கறுப்பு சூட்டிற்கு வெள்ளை சேட் போட்டிருந்தான். கறுப்பு சூட்டின் கொலர் பகுதி மெல்லிய மினுங்கும் கடும் கறுப்பு நிறத்தில் இருந்தது. நான் உற்றுப் பார்த்தேன். நேசனிடம் ஒரே ஒரு சூட் மட்டும்தான் இருக்கிறது. கடும் நீல நிறம். அது மிகப் பழையது. அவனுக்குக் கொஞ்சம் கட்டையும் கூட. இருந்தும் அவன் அதைத்தான் எல்லா விழாக்களுக்கும் போட்டு வருவான். இது கறுப்பு. புதிதுபோல் இருக்கிறது. அப்பிடியெண்டால்



படிப்பகம்

www.padippakam.com

இதை எப்போது வாங்கினான். செத்தவீட்டிற்காக புதிதாக வாங்கியிருப்பார்களோ? இருக்காது. நேற்று செத்தவன் இண்டைக்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறான். அதற்கிடையில் யார் சூட் வாங்கக் கடைக்கு ஓடுவார்கள். உது உவன் புதிதாக வாங்கியிருக்கிறான். எனக்கு மறைச்சுப் போட்டான். எனக்கு நேசன் மேல் கோவம் வந்தது.

"இப்ப உங்களுக்கு என்னத்துக்கு சூட்? ஒருநாள் கூத்துக்கு இவ்வளவு காசைச் செலவு செய்ய வேணுமே. பேசாமல் வேட்டி கட்டிக்கொண்டு வாங்கோ" புதுச் சீலையில் இருந்த சாரதா ஒரேயடியாகச் சொல்லிப் போட்டாள். கலியாண வீடு என்றால் வேட்டி, சால்வை வேறு விழா வென்றால் வெறும் . பாண்ட், சேர்ட் என்று என்னைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தாள். நான் செத்தாப் போட உருப்படியா ஒரு சூட் இல்லை. பதினைந்து வருடத்திற்கு முன்பு என்னுடைய திருமணத்துக்கு வாங்கிய ஒன்று அலமாரியில் எங்கோ தொங்கிக் கொண்டிருப்பது ஞாபகத்திற்கு வந்தது. அது இப்ப ஒற்றக் காலுக்க நுழையுமோ தெரியவில்லை. நான் செத்தால் அதைத்தான் போடுவார்களோ? சாரதா மேல் கோவம் வந்தது. நான் உழைக்கிறன். எனக்கு அவ ஒரு முதலாளி. நாளைக்கே நான் போய் நல்ல வடிவான ஒரு சூட் வாங்கப் போறன். நேசனின்ரையிலும் விட வடிவா விலையா..

யாரோ ஒருவர் நேசனை நினைவு கூர்ந்து பேசிக்கொண்டிருந்தார்...



# நஷ்ட ஈடு

"வாழாவெட்டி" என்று சமூகத்தால் விழிக்கப்படும் தாயினால் வளர்க்கப்பட்டவன் நான். இரண்டு அறைகளைக் கொண்ட மண்ணாலான கொட்டில் வீட்டின் முன்னே, உச்சி வெய்யில் நேராய் இறங்க, தன்னை ஒடுக்கி கந்தல் சேலையால் தலையை மூடிக் குந்தியிருந்து, கிடுகு பின்னி பாரமாய் சுமந்து சென்று விற்றும், பால் அப்பம், முட்டை அப்பம் என்று வட்ட வட்டமாய் வாயில் நீரூறும் சுவையுடன் அப்பங்களைச் சுட்டு விற்றும், பிள்ளைகளை வளர்த்தவள் என் அம்மா. "அம்மா" என்றால் பல காலமாய் என் மனதில் வர்ணங்கள் அற்ற கந்தல் சேலையுடன் குந்தியிருக்கும் ஒரு கொத்தியாத்தை உருவமே பதிந்திருந்தது. அவள் முகத்தில் தீவிரத்தின் கீறல்கள் நிரம்பி வழியும். புன்னகைக் கோடு எங்காவது ஓடுகின்றதா என்று அவள் நித்திரையில் ஆழ்ந்திருக்கும் தருணங்களில் பக்கத்தில் இருந்து பார்த்த நாட்கள் ஏராளம். எனக்கும், என் அக்காவிற்கும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர வைத்தவள் அவள். என் நான்காவது வயதில் அக்காவின் படிப்பில் பலதையும் நான் தெரிந்து வைத்திருந்தேன். சாப்பாடு, நித்திரைக்கான நேரம் போக என் நேரங்கள் அனேகம் படிப்பிலேயே கரைந்தன. சிறுவயதுக்கான குறும்புகள் அனைத்தையும் இழந்தவன் நான். ஆனால் அதற்காக வருந்தியதாக ஞாபகம் இல்லை.

இரண்டு குழந்தைகளுடன் தனியாக விடப்பட்ட போதுதான் அம்மாவிற்கு கல்வியின் அருமை புரிந்தது என்பாள். தன் பெற்றோர்



படிப்பகம்

www.padippakam.com

விட்ட தவறைத் தான் விடக்கூடாது என்பதில் மிகவுமே கவனமாக இருந்தாள். புன்னகை மறைந்த முகமானாலும் அன்பைச் சுரக்க அவள் மறந்ததில்லை. மரத்துத் சுருங்கிய கைகளால் பள்ளியால் வரும் என்னை இழுத்து நெற்றி வியர்வையை அவள் வழிப்பதில் சுகம் காண்பவன் நான். எப்போதும் என் பார்வை அவள் முகத்தில் பதிந்து எதையோ தேடும். எதைத் தேடுகின்றேன் என்பதும் புரிந்ததில்லை. என் அம்மாவை வேறு உருவமாகப் பார்க்க விரும்பினேனோ என்னவோ. பளிச்சென்ற முகத்துடன், பொட்டும், பூவும் கலர் சேலையும், சிரிப்புமாக.

அம்மாவின் பத்து விரல்களை நம்பி எமது குடும்பம் இயங்கியது. பஞ்சத்தில் படுத்தாலும் பாடசாலையை நாங்கள் ஒருநாளும் தவற விடுவதில்லை. பழுப்பேறி, மூலை சுருண்ட பாடப்புத்தக்கை நெஞ்சோடு அணைத்துக் கல்வி கற்றோம். இரவு நேரங்களில் வீட்டு வேலைகள் முடிந்த பின்னர், என்னையும் அக்காவையும் இருபுறங்களாகப் படுக்க வைத்து எங்கள் தலையைக் கைகளால் அளைந்த படியே படிப்பு, சமூகம், வாழ்வு என்று தனக்குத் தெரிந்தவற்றை எமக்குள் புகுத்தி எம்மைச் சிந்திக்க வைக்கும் அம்மா, அப்பாவின் பார்வைக்கு அழகற்றவள். கறுப்பாக, கட்டையாக இருக்கும் அவள் முகத்தில் பற்கள் துருத்திக்கொண்டிருக்கும். அப்பா அழகானவராம் அம்மா சொல்லி நான் அறிந்து கொண்டது. நான் அப்பாவைக் கொண்டிருப்பதாக அடிக்கடி சொல்லுவாள். அதன் பின்னர் அழகு என்பது வெறும் மாயை, அழிந்து போகக் கூடியது. அழகென்று கர்வம் கொள்பவர்கள் கோழைகள், அறிவிலிகள் எல்லாமே பார்ப்பவர் கண்களில்தான் இருக்கிறது என்றும் சேர்த்து சொல்லுவாள். எனக்கு என் நிறத்தில், அழகில் கூச்சம் இருந்தது. இதில் பெருமை கொள்ள என்ன இருக்கிறது என்ற கேள்வியும் இருந்தது.

அப்பா பக்கத்து ஊர் பெண் ஒருத்தியின் அழகில் மயங்க, அவருடனான தன் உறவை துண்டித்துக் கொண்டாள் அம்மா. தொழில் பார்க்கும் தன் உதவியில்லாமல் அம்மாவால் இரண்டு பிள்ளைகளுடன் வாழ முடியாது என்று எண்ணியிருந்த அப்பாவின் முகத்தில் கரி பூசி வாழ்ந்து காட்டினாள். பண உதவியைச் சாட்டாக வைத்து தன் பிள்ளைகளுடனான தொடர்பைத் தொடரலாம் என்று எண்ணியிருந்த அப்பாவிற்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. அம்மாவின், அம்மா பிள்ளைகளாக வாழ்ந்து, வளர்ந்தோம் நானும் அக்காவும். நான் அப்பாவை வெறுத்தேன். வெறும் உடல் அழகிற்காக என் அம்மாவை மோசம் செய்த மிகப் பாவியாக அவரை நான் என் மனதில் உருவகித்துக் கொண்டேன். நல்ல குணமும், படிப்பும்தான் உலகில் முக்கியம் வெளிப்புற அழகு என்பது அழிந்து போகும் என்பது சின்னவயதிலேயே எனக்குள் ஆழமாகப் புகுந்து கொண்டவை.



என் அக்கா அம்மாவை ஒத்திருந்தாள். அவளிற்குப் பாடசாலையில் பல பட்டப்பெயர்கள் இருந்தன. அவள் காது பட யாராவது பட்டம் தெளித்தால் சுருண்டு போவாள். வீட்டு மூலையில் அம்மா பார்க்காத வண்ணம் ஒளித்திருந்து அழுவாள். 'ஒன்றுக்கும் மனம் உடைந்து போகக் கூடாது, அழக் கூடாது' என்பது அம்மாவின் இன்னுமொரு வேண்டுகோள். என் உலகம், எனது அம்மாவையும் அக்காவையும் மட்டுமே கொண்டிருந்ததால், வக்கிரம் படைத்த வெளி உலகை நான் வெறுத்தேன். முடிந்தவரை அம்மாவையும், அக்காவையும் சந்தோஷப்படுத்துவதிலேயே எனது உலகம் உருண்டு கொண்டிருந்தது. சொந்தங்கள் "அட ஆம்பிளப்பிள்ளை வெள்ளையா வடிவா இருக்கிறான். பெட்டைச்சிதான் இப்பிடிப்போயிட்டாள்" என்று அம்மாவிடம் அங்கலாய்த்துக் கொள்ளுவார்கள். நான் என் சொந்தங்களையும் வெறுத்தேன்.

அக்கா படிப்பில் கெட்டிக்காரி. அவளுக்கு இலக்கியத்தில் ஆர்வம் அதிகமாக இருந்தது. என்னை அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தின் பெரிய வாசகசாலைக்குப் போவாள். எனக்கு வாசிப்பில் ஆர்வம் இல்லாது போனாலும், சும்மா இருந்து தட்டித்தட்டி அதுவே ஒரு ஆர்வமாகி மிகச் சின்ன வயதிலேயே ஈழத்து இலக்கியங்கள், தமிழ் நாட்டு இலக்கியங்கள் என்று நல்ல பல இலக்கியங்களை அடையாளம் கண்டு கொண்டேன். எனது திறமை விஞ்ஞானத்தில் இருந்தாலும் நானும் ஒரு முழுநேர இலக்கிய விரும்பியாக மாறிப்போயிருந்தேன். என் வாசிப்புக்களைப் பகிர்ந்து கொள்ள என் பாடசாலையில் ஒருவரும் இல்லை. இதனால் நான் வாசிப்பவற்றையெல்லாம் அம்மா பாத்திரங்கள் கழுவும் போதோ, மீன் கழுவும் போதோ, அருகில் குந்தியிருந்து விளக்கத் தொடங்கினேன். அம்மா புரிந்து கொண்டாளா இல்லையா தெரியவில்லை. ஆனால் என்னை ஊக்குவிப்பதற்காக 'உம்' கொட்டத் தவறுவதில்லை.

பின்னர் இலக்கியக் கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள், வேற்றுமொழி படைப்புக்கள் என்று எனது வாசிப்புப் பரவத் தொடங்கியது. சிறு சிறு இலக்கியச் சந்திப்புகள் பற்றி அறிந்து கொண்டு வெறும் பார்வையாளனாக சுவரோரம் நின்று கேட்கத் தொடங்கினேன். தொடக்கத்தில் என்னை ஒருவரும் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. என் கருத்துக்கள் என் வாய் வரை வந்து மடிந்து கொண்டிருக்கும். பல சந்திப்புக்களின் பின்னர் நான் அடையாளம் காணப்பட்ட போது, நானும் கருத்துக்களைக் கூறத் தொடங்கினேன். என் ஆர்வம் அந்த இளைஞர்களைக் கவர்ந்திருந்தது. எல்லோருமே என்னிலும் விட வயதில் மிகவும் மூத்தவர்கள். இருந்தும் வாழ்வு, அரசியல், இலக்கியம் என்று என்னால் அவர்களுடன் கலந்துரையாட முடிந்தது. நான் அவர்களை நண்பர்களாகக் கொண்டதற்காகப் பெருமைப்பட்டுக் கொள்வேன். எல்லாம் அறிந்த,



படிப்பகம்

www.padippakam.com

நல்ல மனம் கொண்ட முழுமையான நண்பர்கள் அவர்கள் என்பது என் கணிப்பு. இலக்கியக் கலந்துரையாடல் என் வீட்டிலும் சில வேளைகளில் இடம்பெறுவதுண்டு. எனது நண்பர்கள் என்று வயதில் மூத்த இளைஞர்களை வீட்டிற்கு அழைத்து வந்த போது அம்மா கொஞ்சம் சங்கடப்பட்டாள். வயதுக்கு வந்த அக்கா வீட்டில் இருக்கிறாள், பல ஆண்கள் வீட்டிற்கு வந்து போவது அம்மாவிற்குச் சரியாகப் படவில்லை. 'இவர்கள் மற்றைய ஆண்கள் போல் நடந்து கொள்ள மாட்டார்கள். இவர்களுக்கு சமூகம் பற்றிய மிதமான அக்கறை இருக்கின்றது' என்று அவளுக்கு எடுத்துச் சொல்லி சம்மதம் வாங்கிக் கொண்டேன். தொடக்கத்தில் அக்கா உள்ளே ஒளிந்து கொண்டாலும், போகப் போக அவர்கள் பேச்சு அவளுக்கு சுவாரசியத்தையும் ஆர்வத்தையும் கொடுக்கத் தானாகவே வெளியே வந்து எங்களுடன் கலந்து கொண்டு "அம்மா வந்தாள்" அப்பு "மோக முள்" ஜானகி "அக்கினிப் பிரவேசம்" கங்கா என்று அலசினாள்.

எனக்கு பாடசாலையில் மாலை நேரங்களில் வாசகசாலையில் பகுதி நேர வேலையும், அக்காவுக்கு பாடசாலை நேரம் போக ஒரு தனியார் கல்விச் சாலையில் பகுதி நேர வேலையும் கிடைத்தன. அம்மா இப்போதெல்லாம் குந்தியிருந்து கிடுகு பின்னுவதில்லை. நாங்கள் கொண்டு வரும் பணத்திலேயே எங்கள் குடும்பம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டது. நானும் நண்பர்களும் நாடகங்கள், திரைப்படங்கள் பார்க்கச் செல்லும் போது அக்கா தயங்காமல் எங்களுடன் இணைந்து கொள்வாள். விடுமுறை நாட்களில் கட்டுச் சாப்பாட்டுடன் கடற்கரைக்கோ, பூங்காவிற்கோ சென்று இலக்கிய வாதங்களுடன் நாட்களைக் கழிக்கப் பழகிக் கொண்டோம். என் நண்பர்களில் ஒருவர் எனது அக்காவை விரும்பித் திருமணம் செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நான் அவ்வப்போது எண்ணுவதுண்டு. அக்கா சமூகப்பார்வைக்கு அழகற்றவள். சீதனம் என்று கொடுக்க எங்களிடம் ஒன்றுமிருக்கவில்லை. அக்காவிடமிருந்தது அறிவும், குணமும் மட்டுமே. அறிவையும் குணத்தையும் யாசித்து திருமணம் செய்து கொள்ள முன்வரும் ஆண்கள் பரந்த மனம் உடையவர்களாக இருக்க வேண்டும். என் நண்பர்கள் அப்படியானவர்களாக இருந்த போதும், வெறும் நட்பு என்ற ரீதியில் பழகி விடும் மிக நல்லவர்களாக இருப்பது எனக்குக் கொஞ்சம் சங்கடமாகவே இருந்தது.

அக்கா தமிழ் இலக்கியப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு ஆசிரியராக வேலைக்குச் சேர்ந்தாள். நான் பொறியியல் துறையில் மேற்படிப்பை மேற் கொண்டேன். நண்பர்களில் சிலர் திருமணம் செய்து கொண்டு குடும்பஸ்தர்களாகி விட, சிலர் வேலை நிமித்தம் வேறு



ஊருக்குப் போய் விட்டார்கள். நான் என் ஆசையை விழுங்கிக் கொண்டேன். எல்லா அம்மாக்களையும் போல் என் அம்மாவும் ஆசைப்பட்டாள் என் அக்காவின் திருமணத்திற்காக. சாதகத்தை வெளியே எடுத்தாள். மெல்லி படலம் போல் முகத்தை மேவியிருக்கும் சோகத்துடன் அக்கா மறுப்போ, சம்மதமோ எதுவுமின்றி மௌனமானாள். நான் அவளின் விருப்பம் கேட்டுப் பல தடவை கதை தொடக்கிய போது பேச்சை வேறு திசைமாற்றினாள். என் எதிர்ப்பையும் மீறி பெண்பார்க்கும் சடங்கு என் வீட்டிலும் தொடங்கியது. பெண்ணிற்கு அழகு குறைந்திருந்ததால், பெருந்தன்மையுடன் பணத்தைக் கூட்டிக் கேட்டார்கள் மாப்பிள்ளைச் சிங்கங்கள். பல சாதகங்கள் தட்டிப் போய் கடைசியில் தன்னிலும் பதினைந்து வயது மூத்த மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டி வீட்டை விட்டு வெளியேறினாள் அக்கா. அக்காவைப் பிரிவதற்காய் அம்மா கண் கலங்கினாள். நான் கலங்கிப் போனேன். இந்த உலகம், மனித மனங்கள், சமூக வழக்கங்கள் எல்லாவற்றின் மேலும் எனக்கு வெறுப்பு. மிக நல்லவர்களா இருந்த என் நண்பர்களையும் நான் வெறுத்தேன்.

அக்காவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

*அன்புள்ள தம்பிக்கு,*

*உன் சுகம் எப்படி? நான் இங்கே நல்ல சந்தோஷமாக இருக்கின்றேன். இந்தக் கடிதம் உனக்கு மட்டுமே எழுதுகின்றேன். படித்தவுடன் கிழித்து எறிந்து விடு. அம்மாவிடம் காட்டி விடாதே. தம்பி என் திருமணத்தின் போது நீ கலங்கி நின்றது எனக்கு இன்னும் கண்களுக்குள் நிற்கின்றது. நீ திருமணம் பற்றிய எனது எதிர்பார்ப்புக்களை கேட்ட போதெல்லாம் நான் பேச்சைத் திசை மாற்றினேன் என்பது உனக்குப் புரிந்திருக்கும். புரிந்து நீ குழம்பியதை நான் அறிவேன். தம்பி மனிதர்களில் ஒருவருமே நிறைவானர்கள் இல்லை. பல அறிஞர்களின் புத்தகத்தை வாசித்து விட்டதால் பெருந்தன்மையுடன் எல்லோரும் நடப்பார்கள், இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு. எல்லோருமே சுயநலவாதிகள். நானும் நீயும் கூடத்தான். உன் படித்த நல்ல வேலையில் இருக்கும் நண்பர்களில் ஒருவராவது என்னை விரும்பித் திருமணம் செய்ய மாட்டார்களா என்று நீ மனதுக்குள் ஏங்கியதை நான் அறிவேன். அது உன் சுயநலம். எனக்குள்ளும் அதே சுயநலமிருந்ததால் அழகான உன் நண்பன் ஜெகனை நான் காதலித்தேன். அவனும் காதலித்தான். ஆனால் அது*



படிப்பகம்

www.padippakam.com

*உனக்குத் தெரியாது. பின்னர் அவன் தன் சுயநலமாக பணக்கார அழகி ஒருத்தியைக் கலியாணம் செய்து கொண்டு விட்டான். இங்கே யாரும் யாரையும் குறை சொல்ல முடியாது. எல்லோருமே சுயநலமாகத்தான் காயை நகர்த்துகின்றோம். வெற்றி சிலருக்குக் கிடைக்கிறது. தோற்பவர்கள் இறப்பதில்லை. வாழ்ந்துதான் முடிக்கின்றார்கள். நான் இப்போது சந்தோஷமாக இருக்கின்றேன். இவர் எனக்குப் பொருத்தமான நல்ல நண்பராக இருக்கின்றார். நீ அதிகம் யோசிக்காமல் சந்தோஷமாக இரு. அம்மா எப்படி இருக்கின்றா? பதில் போடு.*

*இப்படிக்கு உனது அக்கா.*

நான் கடிதத்தோடு, எனக்குள்ளிருந்த பலவற்றைக் கிழித்துப் போட்டேன். எல்லோரும் சுயநலவாதிகள். அக்கா அழகாகச் சொல்லிவிட்டாள். என்னால் ஏற்க முடியாமல் இருந்தது. ஒருவேளை சுயநலவாதிகள் ஒப்பீட்டால் கூடுதலாக இருக்க முடியும். ஆனால் உலகில் எல்லோருமே சுயநலவாதிகள் என்று ஒட்டு மொத்தமாக கூற முடியுமா? என் அப்பா சுயநலவாதி. ஆனால் அம்மா, அவளை எப்படி சுயநலவாதியென்பேன்? அம்மாவைப்பற்றி எனது மனம் ஆராயத் தொடங்கியது. தனியாக கிடுகு பின்னி என்னையும் அக்காவையும் படிப்பித்தவள். தன் சுகங்களை காவு கொடுத்தவள். இவள் எப்படி சுயநலவாதியெனும் அடைப்புக்குறிக்குள்?.

"அம்மா நானும் அக்கா மாதிரித் தமிழ் இலக்கியம் படிக்கப் போறன். எனக்கு விஞ்ஞானத்தில நாட்டமில்லாமல் இருக்குது" நான் மண்டாடியபோது. "அப்பா இல்லாமல் கூனிக் குறுகி நிண்டு கிடுகு பின்னி உன்னைப் படிப்பிச்சனான். சாப்பாட்டுக்கு வழியில்லை, பிள்ளை என்ஜினியரா வர வேணுமெண்டு கனவு காணுறாள், எண்டு என்னைப் பழிச்சாக்களுக்கு நான் வெண்டு காட்ட வேணும்" அம்மாவின் அந்த வார்த்தைகள் என் தலையின் ஒரு மூலையில் ஓடி மறைந்தது.

நான் சுயநலவாதியாக இருக்க விரும்பவில்லை. முடிந்த வரை நான் என் வாழ்க்கையின் ஒவ்வொரு முடிவையும் கண்காணித்து, சுயநலமற்று வாழ முனைய வேண்டும் என்று உறுதி கொண்டேன். அதன் பின்னர் என் ஒவ்வொரு அசைவும் மிக நிதானமாக சுயநலமற்றிருந்தது எனக்குள் பெருமையையும், நிம்மதியையும் தந்தன. கல்வியை முடித்துக் கொண்டு வேலையில் சேர்ந்த போது பணக்கார அழகிகளின் சாதகங்களுடன் அம்மா வந்தாள். எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு என் அம்மாவும்,



அக்காவும் எதற்காக நிராகரிக்கப்பட்டார்களோ அதே காரணமான அழகற்றவள் என்று சமூகத்தால் பட்டம் சூட்டப்பட்ட ஒரு பெண்ணை மணந்து கொண்டேன். மீண்டும் பெருமையும், நிறைவும் எனக்குள். சுயநலமற்ற விட்டுக் கொடுப்போடு என் வாழ்வு நிறைவாக நகர ஒன்று, இரண்டு என்று இரண்டு குழந்தைகளுக்கு நல்ல அப்பாவானேன்.

எனக்கு மலை நாட்டிற்கு மாற்றல் வந்தது. கைக் குழந்தையுடன் கஷ்டம் வேண்டாம் முதலில் தனியே போய் செட்டில் ஆகிப் பின்னர் குடும்பத்தை அழைத்துக் கொள்ளலாம் என்று ஒரு வீட்டில் கிடைத்த சிறிய அறையில் இரண்டு மாதங்கள் போக்கிக் கொண்டேன். புதிய வேலைத்தளம், வேலைப் பழு அதிகமாக இருந்ததால் கிழமைக்கு ஒரு முறை மட்டும் தொலைபேசியில் மனைவி, அம்மாவுடன் கதைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. வேலை முடிந்து வீட்டிற்கு உடம்பு அலுப்போடு வந்தால், வீட்டு வேலைக்காறி சாப்பாடு கொண்டு வந்து அறையில் பரிமாறுவாள். தொடக்கத்தில் புதிய வேலை, புதிய மனிதர்கள் என்று என் கவனம் எங்கோ இருந்து காலப்போக்கில் வேலைக்காறியின் மேல் திரும்பியது. சின்னப்பெண். கலியாணமானவள். மருண்ட விழிகளுடன் கொள்ளை அழகாக இருந்தாள். வேண்டுமென்றே உடைகளை விலத்துவாளா? இல்லை தற்செயலானதா என்ற கேள்வி எனக்குள் இல்லாமல் அவள் அழகை படிக்கத் தொடங்கினேன். பொன்நிற பூனை மயிர்கள் மார்பில் புரள, மெல்லிய மண்ணிறத்து விம்மல் எனக்குள் இரசாயண மாற்றத்தை உண்டு பண்ணியது. கண்கள் கருகருவென்று காமம் பொங்கி மிதக்க நின்றாள். நான் கால்களை வேகமாக ஆட்டி ஆட்டி என்னைக் கட்டுக்குள் கொண்டு வந்தேன். மெல்லிய உதட்டுக்குள் எப்போதும் இருக்கும் ஒரு சிறு புன்னகை எத்தனை நாளுக்கு பாப்போம் என்று பயம் காட்டியது. வற்றிய என் மனைவியின் உடலில் உருண்டு புரண்டது ஞாபகம் வர மனதுக்குள் ஏக்கம் பற்றிக் கொண்டது. தொடைகள் திரள கால்களை நிலத்தில் ஊன்றி அழுத்தினேன். இப்படி ஒரு உடலை அனுபவிக்கும் சாத்தியமே வாழ்வில் இல்லாமல் போய் விடுமா? துக்கம் மனதுக்குள் மேவத்தொடங்கியது. சாப்பாடு தொண்டைக் குழிக்குள் சிக்கி மூச்சுத் திணற அவள் கையைப் பிடித்து இழுத்து அணைத்து முத்தமிட்டேன். அவளின் விம்மிய மார்புகள் என் நெஞ்சோடு உரசி என் உஷ்ணத்தை உச்சிக்குக் கொண்டு வந்தது. என் பிடியை விலக்கி அவள் நிதானமாக வெளியேறி தூரப் போய் புள்ளியாகி மறைந்து போனாள்.



படிப்பகம்

www.padippakam.com

# வெளிச்சம்

"உண்மைகள் அற்ற உலகில் பொய்கள் நிழலாய் தொடர, பொய்யை பொய் என மறுத்து உண்மையாய் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் நானும் பொய் பேசி அதை உண்மை என நம்பி ஏற்று வாழப்பழகிக் கொண்டு.."

இனிமேல் இது வேண்டாம்.

மணம் மூக்கைத் தாக்க நான் மூச்சை இறுக்கிக் கொண்டேன். பஞ்சு முகம் முழுக்க உலாவந்து ஓய்ந்தது. "இஞ்ச பார் எவ்வளவு ஊத்தை. இவ்வளவும் ஓயில். அடிக்கடி துடைக்காட்டி முகத்தில பருவாத்தான் வந்து கொட்டும். அருமந்த வடிவான முகம் பருவாக் கொட்டிக்கிடக்கு. உனக்கு அதைப்பற்றி ஒரு கவலையும் இல்லை, என்ன?" அம்மா தனக்கான அம்மா பாசம் மேலிட என்னை விட என் முகப்பருவிற்காய் நொந்து பேசி விட்டுப் போனாள். நான் கண்ணாடியில் முகத்தை ஊன்றிப் பார்வையிட்டேன். நெற்றியிலும் கன்னங்களிலும் அள்ளிப்போட்டிருந்தது முகப்பரு. என் வகுப்பில் அனேகமாகப் பலருக்கு முகப்பரு வரத்தொடங்கியிருந்தாலும் என்னுடையது கொஞ்சம் கூடுதலாகவே பட்டது. ஆனால் அது என்னைத் தொந்தரவு செய்யவில்லை. (ஷேரா பாவம் இரண்டு முகப்பரு நெத்தியில் வந்ததால் ஒரு கிழமை பாடசாலைக்கு வரவில்லை).

"இது எங்கட குடும்ப ஜீன்ஸ்" என்று அம்மாவின் காய்ந்து போன முகத்தழும்புகளைப் பார்த்த படியே சொன்னேன். "உண்மைதான். அப்ப எங்க வசதியிருந்தது? நாங்கள் பாலாடையும், முட்டை வெள்ளைக்கருவையும் பூசிப் பூசிப் பாப்பம். போனால்தானே. ஆனால் இஞ்ச எவ்வளவு வசதியிருக்கு? எத்தின விதமான மருந்திருக்கு? பூசிக் கொஞ்சம் குறைக்கலாமே. உனக்குப் பஞ்சி. உன்ர முகம் பற்றி எனக்கிருக்கிற அக்கறை உனக்கில்லை." அம்மா வீட்டு வேலைகளின் நடுவில் புறு புறுத்தபடியே வீடு முழுக்க நடந்து திரிந்தாள். கொஞ்சம் கிட்ட வந்து குரலைத் தாழ்த்தி "டேய் இப்பிடியே கவனிக்காமல் விட்டாயெண்டால் முகம் அசிங்கமாப் போயிடும். பிறகு ஒரு பெட்டையும் உன்னைப் பாக்காது. பிறகு கேர்ள் பிரெண்ட் கிடைக்கேலை எண்டு நீதான் கவலைப்படுவாய்". சொல்லி முடித்த பின்னர்தான் கூறிய நகைச்சுவையைத் தானே நினைத்துச் சிரித்துக் கொண்டாள். "உங்கள அப்பா லவ் பண்ணினவர் தானே? அப்பிடி என்னையும் ஆரும் லவ் பண்ணிவீனம்" போனவள் திரும்பி வந்தாள். அவள் கண்கள் கனவுகளில் நிறைந்திருந்தன.

"ம்.." பெருமூச்சு எழுந்து அடங்க "அது ஒரு காலம்" என்றாள். பிறகு ஏதோ நினைத்தவளாய் "இஞ்ச வந்து எவ்வளவு காலமாப் போச்சு. ஒருக்காப் போய் அம்மா, அப்பாவைப் பாத்திட்டு வரக்கூட வசதியில்லாமல் போயிட்டுது" திரும்பவும் அதே மாதிரியான ஒரு பெருமூச்சு. வேண்டுமென்ற நேரமெல்லாம் நெஞ்சை உயர்த்தி ஒரே பாணியில் அம்மா பெருமூச்சு விடக் கற்றுக்கொண்டிருந்தாள். எனக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. என்ன வயதிருக்கும்? வயதுக்கு மீறிய முதிர்ச்சியுடன் எப்போதும் வாயுக்குள் ஏதோ புறுத்த படியே ஓடியோடி எதையாவது செய்து கொண்டிருந்தாள். அப்பா அதிகார தோரணையில் வலம் வருவதால் நானும், தம்பியும் அம்மாவிடம் தான் ஒட்டிக் கொண்டோம்.

அம்மாவின் கவனிப்பில் என் முகப்பருக்கள் குறைந்திருந்தன. மூக்கின் கீழே கீறலாக மீசை முளைவிட்டிருந்தது. குரல்கள் ஆணினதும், பெண்ணினதுமாக மாறி மாறி வேடிக்கை காட்டியது. தலையைக் கலைத்து வேறு விதமாக இழுத்து விட்டேன். பிடிக்காத உடைகளையெல்லாம் சுருட்டிச் சுருட்டி அம்மாவிற்குத் தெரியாத இடத்தில் தள்ளி விட்டிருந்தேன். நண்பர்களுடன் கடைக்குப் போகப் பழகிக் கொண்டேன். "என்னடா இது, உடுப்பு கறுப்பங்கள் மாதிரி தொள தொள எண்டு" கோவம் போல் குரலை உயர்த்திப் பாவனை காட்டியபடியே என்னைச் சுற்றிச் சுற்றிப் பார்வையிட்டு முகத்தில் பெருமை பொங்க "என்னடா இது வடிவாவே இருக்கு?" நான் சிரித்தேன். "வடிவோ வடிவில்லையோ எனக்குப் பிடிச்சிருந்துது போட்டுக் கொண்டேன்."



படிப்பகம்

www.padippakam.com

குடும்பத் தலைவனாம் தான் என்ற மிடுக்கோடு என் அப்பாவும், அவருக்கு அடங்கிய மனைவியாம் தான் என்ற பணிவோடு என் அம்மாவும், ஏதோ பாவனைகள் பல, வீட்டில் இருந்தாலும் கட்டுப்பாடுகள் அற்ற குடும்பம் எங்களுடையது. எனக்கான முழுச் சுதந்திரம் தரப்பட்டிருந்தது. பதிலாக என்னிடம் அம்மா கேட்டுக் கொண்டது "நல்லாப் படி." நான் படித்தேன். அம்மா கேட்டுக்கொண்டதற்காக இல்லை. படிப்பு எனக்கு இயல்பாகவே வந்ததால்.

அம்மாவின் பெருமூச்சு ஒரு திட்டமாக உருவெடுத்து அப்பாவிடம் ஊருக்குப் போகவேணும் எங்கட சொந்தங்கள், ஊரையெல்லாம் சுத்திப் பாக்க வேணும் கனடாவில் பிறந்த என்ர பிள்ளைகளை பாட்டி, தாத்தாவுக்குக் காட்ட வேணும் என்று அடம் பிடித்து வெற்றி கொண்டது. "தாங்க முடியாத வெக்கை. எலெக்ரிசிட்டி இல்லை. அதால ரீவி இல்லை. அங்க ஒண்டுமே இல்லை. நல்லாக் கஷ்டப்படப் போறாய்" போய் வந்த என்னுடைய நண்பர்கள் போகு முன்பே எனக்குள் வெறுப்பை ஏற்றினார்கள். நான் அடம் பிடித்து அழுது பார்த்தேன். "நான் இப்ப பெரிய பெடியன். நான் தனிய இருப்பன்" குரலையும் உயர்த்திப் பார்த்தேன். ஆனால் என்னுடைய குரல் எடுபடவில்லை. ரீவி இல்லாத உலகம் பயம் காட்டியது. வீடியோ கேம்ஸ், புக்ஸ் என்று பொழுது போக்க கொஞ்சம் சேர்த்துக் கொண்டேன். அப்பாவின் வேலையால் அவரால் வரமுடியவில்லை. எங்களை அனுப்பி வைத்தார்.

மெல்லிய மழைத்தூறல்களினூடே இளம் பச்சை தென்னை ஓலை அசைய கிளிகள் குரல்கள் எழுப்பும் ஒரு பின்னேரப் பொழுதில், புழுதி மண் விரல்கள் புக நிலம் தேய்த்து நான் நடந்தேன். வீட்டுக் கூரை புகை எழுப்ப அம்மம்மா இருமி இருமி சமையல் செய்தாள். வீடு அமைதியாய் இருந்தது. எல்லோருமே பின்னேர நித்திரையில் இருந்தார்கள். அம்மம்மா ஓய்ந்து நான் பார்த்ததில்லை. எனக்கு எல்லாமே பிடித்திருந்தன. அடுப்பிலிருந்து ஆற்றங்கரை வரை ஓடியோடி ஆராய்ந்தேன். வீடியோ கேமும் புத்தகங்களும் தம்பியின் கைகளுக்குள் அடங்கிக் கொண்டன. முதல் முறையாக சாரம் கட்டக் கற்றுக் கொண்டேன். அம்மப்பாவும், மாமாக்களும் சைக்கிளில் ஊர்ச்சந்தை, விளையாட்டுப் போட்டிகள், கோழிச்சண்டைகள் என்று என் கற்பனைக்கு எட்டாத பல இடங்களுக்குக் கூட்டிச் சென்றார்கள். 'வெளிநாட்டுப் பெடியன் கொச்சைத் தமிழ் கதைக்கிறான்' என்று முதலில் ஒதுங்கி நின்ற சிறுவர்கள் சாரம் கட்டி காலில் செருப்பின்றி ஓடித்திரிந்த என்னைக் கண்டதும் தாமாகவே ஒட்டிக் கொண்டார்கள்.



நாட்கள் நகராமல் ஓட்டம் கண்டன. என் ஆராய்சியில் பல முடிவுறாமல் போய் விடுமோ என்ற ஆதங்கம் எனக்குள். "கனடா வேண்டாமம்மா இஞ்சையே இருப்பமே" அம்மா கண்கள் மிளிர என்னை வினோதமாகப் பார்த்தாள். அம்மப்பா பொக்கை வாயை அசைத்து, அசைத்துச் சிரித்த படியே "அதுக்கென்ன அவனை விட்டிட்டுப் போவன் இஞ்ச இருந்தே படிக்கட்டும்." அம்மாவின் முகத்தில் பயம் தெரிந்தது "உனக்கென்ன விசரே? அங்க பள்ளிக்கூடம், படிப்பு எல்லாம் விட்டிட்டு. அப்பா என்னைக் கொண்டு போட்டிடுவார்". என் மனக்கண்ணில் என் பாடசாலை நண்பர்கள், என் அறை, மீன் தொட்டி, மீன் குஞ்சுகள் எல்லாமே ஒருமுறை வந்து வா வா என்று அழைக்க மனதுக்குள் ஒரு ஏக்கம் பிறந்தது. நான் சிரித்தேன். "ஒரு கிழமை கூட இருந்திட்டுப் போவம்" என்றாள் அம்மா என் தலையைத் தடவிய படியே.

அம்மப்பா மெல்ல மெல்ல நடந்து வந்து வழமை போல் விறாந்தையின் ஓரத்தில் இருந்தார். அவர் கையில் "பெற்றோல்மாக்ஸ்" (விளக்கு) இருந்தது. நானும் வழமைபோல் அவர் அருகில் போயிருந்து அம்மப்பா செய்வது ஒவ்வொன்றையும் கண் வெட்டாமல் பார்க்கத் தொடங்கினேன். திரியை இழுத்து நீளத்தைப் பார்த்து விட்டு அருகில் வைத்தார். சிம்னியைக் கைகள் நடுங்க மெல்லக் கழற்றி வாயால் ஊதி ஊதி படிந்திருந்த கரும்புகையை துணியால் துடைத்தார். எண்ணெயை கொஞ்சமாய் விட்டுக் குலுக்கிப் பார்த்து மேலும் கொஞ்சம் விட்டார். சின்னதாக இருந்த பம்ப் ஒன்றை மெல்ல மெல்ல அடித்து பின் மூடியைப் பொருத்தி திரியை இழுத்து நெருப்பைக் கொழுத்தினார். வெளிர் நீலச் சுவாலை இருள் மேவும் அந்த மாலைப் பொழுதை ஊடுருவிச் சென்றது. "அம்மா எனக்கு ஒரு "பெற்றோல்மாக்ஸ்" வாங்கித் தாங்கோ கனடாக்குக் கொண்டு போக". அம்மப்பா பெரிதா ஏதோ ஜோக்கை கேட்டு விட்டது போல் பொக்கை வாயைப் பொத்திப் பொத்திச் சிரித்தார். "ம் உதெல்லாம் காவிக்கொண்டு போகேலாது". அம்மா எழுந்து போய் விட்டாள். அம்மப்பா இருமினார். "பெற்றோல்மாக்ஸ்சை" நிலையில் இருந்த ஒரு கம்பியில் கொழுவி விட்டு "மாட்டுக்கு வைக்கல் போட வேணும்". தனக்குள் சொன்ன படியே படியால் இறங்கிப் போனார். நான் பெற்றோல்மாக்ஸின் திரியை உற்றுப் பார்த்தபடி நின்றேன். வீட்டிற்கும், முற்றத்திற்கும் வெளிச்சம் தந்தபடி இருந்த அந்த விளக்கு எனக்கு வினோதமாகப் பட்டது.

அன்று மழை அதிகமாய் அடித்தது. அம்மப்பா இருமிய படியே முனகிக்கொண்டு பாயில் படுத்திருந்தார். கரு மேகக் கூட்டத்தின் அசைவால் வீடு இருளில் மூழ்கி அமைதியாய் இருக்க, எல்லோரையும் மழைக்குளிர் நித்திரைக்குள் இழுத்து விட்டிருந்தது. குசினிக்குள் மட்டும்



படிப்பகம்

www.padippakam.com

சின்னதாக ஒரு தேங்காய் எண்ணெய் விளக்கு மின்னிய வண்ணம் மின்மினி போல் ஆட்டம் காட்டியது. நான் பெற்றோல்மாக்ஸ் உடன் அம்மப்பா வழமையாய் இருக்கும் இடத்தில் வந்து இருந்தேன். சிம்னியை மெல்லக் கழற்றி ஊதி ஊதிக் கரும் புகையைத் துடைத்தேன். திரியை இழுத்து விட்டு அளவு பார்த்தேன். எண்ணெயின் அளவைக் குலுக்கிப் பரிசோதித்தேன். இன்னும் கொஞ்ச எண்ணெய் விட்டேன். பம்பை மெல்ல மெல்ல இழுத்து அம்மப்பா போல் அடித்தேன். நெருப்புப் பெட்டியை எடுத்து திரியைக் கொழுத்தினேன். எங்கே தவறினேன்?

கண் விழித்த போது எழுந்த மணம் மருத்துவமனை என்பதை அடையாளம் காட்டியது. அம்மா பக்கத்தில் இருந்த கதிரையில் நித்திரையாய் இருந்தாள். கண்கள் வீங்கியிருந்தன. என் முகம் முழுவதும் துணியால் கட்டுப் போட்டிருப்பது தெரிந்தது. "அம்மா" என்று மெல்ல முனகினேன். கண் விழித்தவள் என்னைக் கட்டிக் கொண்டு கதறினாள். நான் புரியாமல் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மப்பா, அம்மம்மா, மாமாக்கள், இன்னும் தெரியாத சொந்தங்கள் நண்பர்கள் என்று யார் யாரோ வந்து போனார்கள். எல்லோர் முகத்திலும் சோகம். கண்கலங்க என் தலை தடவி விலகினார்கள். நான் இறக்கவில்லை. ஆனால் வேறு ஏதோ மிகவும் பாரதூரமாக மனம் அடித்துக் கொண்டது. வாயில் வார்த்தைகள் வரமறுக்க, வழிந்த கண்ணீர் பாண்டேஜிக்குள் மறைந்து போனது. நான் பாண்டேஜில் வெட்டப்பட்டிருந்த ஓட்டைகளினால் பார்த்து, மூச்சு விட்டுச், சாப்பிட்டு, தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தேன். அப்பா போனில் "என்னால உடன வடிமுடியேலைத் தம்பி உன்ன இஞ்ச கொண்டுவாறதுக்கான அலுவல்ல ஓடித்திரிபிறன் ராசா.." குரல் கம்ம "யோசிக்காதை இஞ்ச நல்ல டொக்ரேஸ் இருக்கினம் எல்லாம் சரியாப் போகும்" அப்பா விம்மினார்.

நண்பர்களுடன் வெளியே சென்ற ஒருநாள் கலைந்திருந்த என் தலைமயிரை ஒதுக்கி கன்னத்தில் மெல்லத் தட்டி "வடிவாய் இருக்கிறாய்" என்றாள் அம்மா. வெளியே கிளம்பிய நான் போக மனமின்றி அறைக்குள் மீண்டும் புகுந்து கொண்டேன். அம்மா கதவைத் தட்டினாள். கதவைத் திறந்த என் கண்களில் கோபம் இருந்தது. "என்னப்பு" என்றாள். "அம்மா ஏனம்மா பொய் சொல்லுறீங்கள்? நீங்கள் மட்டுமில்லை தம்பி, அப்பா, என்ர ஃபிரெண்ஸ் எல்லாரும் ஏனம்மா பொய் சொல்ல வேணும். என்ர முகத்தைப் பாக்க என்னாலேயே சகிக்க முடியேலை. எல்லாம் கருகி பேய் மாதிரி இருக்கு. நான் சாகேலை ஆனால் என்ர முகம் செத்திட்டுது. இனி அது திரும்ப வராது. இதுதான் உண்மை. நீங்கள் எல்லாரும் வடிவா இருக்கிறாய், வடிவாய் இருக்கிறாய் எண்டு சொல்லச் சொல்ல எனக்கு என் மேலையே வெறுப்பா இருக்கு. என்னைச் சந்தோஷப்படுத்திறதா நினைச்சு நீங்கள் ஒருத்தரும் பொய் சொல்ல வேண்டாம். வாழ்க்கை எண்டது ஒரு பாடம். நான் என்ர விபத்துக்குள்ளால இருந்து என்னை மீட்டுத் திரும்பவும் வாழ முயற்சிக்கிறன். ஆனால் என்னைச் சுத்தி எல்லாரும் நடிக்கிறது என்ர முயற்சியைப் பாழாக்கிப் போடுமோ எண்டு பயமா இருக்கம்மா? முகப்பருவுக்கே முகம் வடிவில்லாமல் போயிடும் எண்டு ஓடியோடி வைத்தியம் பாத்த நீங்கள், இப்ப என்ர முகம் வடிவாய் இருக்கிற மாதிரியும் அதுக்கு ஒண்டும் தேவையில்லாத மாதிரியும் ஒண்டுமே பூசி விடுறேலை. ஏனம்மா.? பூசுங்கோ தழும்புகள் மறைய ஏதாவது கிறீம் இருந்தால் வாங்கிப் பூசி விடுங்கோ. எனக்கு என்ர அம்மா திரும்ப வேணும் என்ர முகத்தில ஒண்டுமில்லாத மாதிரி நீங்கள் நடக்கிறது என்னால தாங்கேலாமல் இருக்கம்மா." அம்மா என்னைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

நான் கண்ணாடியில் என் முகத்தை ஊன்றிப் பார்த்தேன். உடை மாற்றிப் பாடசாலைக்கு ஆயத்தமானேன். அம்மா ஓடிவந்து சாப்பாட்டுப் பார்சலைக் கையில் வைத்தாள். சிறிய ஒரு டப்பாவில் இருந்த கிறீமை ஒற்றை விரலால் அள்ளி என் முகத்தில் பூசினாள். நெற்றியில் கொஞ்சி, என் கை விரலை அழுத்தி வழி அனுப்பினாள். இப்போதெல்லாம் அம்மா அதிகம் கதைப்பதில்லை. அவள் கண்களில் ஒரு வித ஒளி படர்ந்திருக்கின்றது. எனக்கு மிக நெருக்கமானாள். என்னுடைய நல்ல நண்பியானாள். பொய்கள் அகன்று, இந்த அழகிய உலகில் என் வாழ்வு சந்தோஷமானது.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு நீண்ட நேர இறப்பு.

மிகமிக நீண்ட தூரத்தில் முகில்களில் சாயையால் அவள் ஒருகால் மடித்து பிருஷ்டம் சரியப்படுத்திருந்தாள். தொப்புள்கொடியின் விடுபடலின் அவஸ்தையாய் இழுபட்டு மிதந்து கொண்டிருந்த அவன் கைகள், கிளைகளாய் நீண்டு அவள் இடுப்பில் மெல்ல நகர்ந்து காயங்களின்றி இறுக்கி, இழுத்தது. முழங்கால் மடித்து குதியினால் அவன் தொடையில் ஓங்கி உதைந்தாள் அவள். அவன் பிடி இறுக நோக்கண்டாள். "போ விடு" சிணுங்கலோடு விம்மினாள். எறிந்த பந்தின் விசையாய் அவள் முதுகோடு ஒட்டி காதோர மூச்சு தலைமயிர் கலைக்க "ஏனம்மா" என்றான். காதோர அவன் சுடு மூச்சு உடல் சிலிக்க அவள் சின்னக்குரலெடுத்து அழுதாள்.

அலையும் மெழுகுதிரியின் சுவாலையில், மென்சிவப்பாய் உருத்திரிய கைவிரல்கள் கொண்டு அவள் முகம் அலசினான் அவன். கோடை வெய்யிலின் வியர்வைப் பீரிடல்களுடன் கலந்த அவள் கண்ணீர் சிதறல்கள், தலைமயிரை ஈரப்படுத்தி முகத்தில் அப்பி பரவிக்கிடந்தது. மென்சிவப்பு முகத்தில் கறுப்புக் கோடுகளாய் நீளும் தலைமயிரை, மெல்ல ஊதி ஊதி ஒவ்வொன்றாக எடுத்துப் பின்னால் போட்டு அவள் கையில் கிடந்த துணி ரப்பரை மெதுவாகக் கழற்றி தலைமயிரைக் கோதிச் சேர்த்துப் போட்டான்.



காற்றின் கனம் சாளரங்களில் நிழலாய் அசையும் கிளைகளால் அடையாளம் காட்டியது. மெல்ல அவள் முகம் திருப்பி இதழில் இதழ் பதித்து விலகிக் கொண்டான்.

சீரான சுவாசத்துடன் கண் இமைகள் மூடி ஓய்ந்து கிடந்தாள் அவள். வியர்வையும், சம்பூவும், சமையலும் கலந்து அவள் தலைமயிரிலிருந்து எழுந்த மணம் அவன் சுவாசத்துடன் கலந்து சென்றது. அவள் நெஞ்சிலிருந்து வயிறு வரை ஆதரவாக வருடிக்கொடுத்தான் அவன். வியர்வையில் ஊறிக் கசிந்து கலந்து விரலோடு வந்தது ஊத்தை உருண்டை. உடல் அசைக்காது மெல்ல மெல்ல உருட்டி உருட்டித் தூக்கிப் போட்டான் அதை. அவன் ஒற்றை கையை அணையாக வைத்து அவள் நித்திரையாகிப் போனாள்.

அவன் முகடு பார்த்தான். சுத்த வெள்ளையில் பரந்து கிடந்தது அது. ஒற்றைப் புள்ளியில் வரியாகத் தொடங்கிப் பெரிதாய் ஒரே சீராக வளைந்து வளைந்து வட்டம் பெரிதாகி வரி எங்கோ மறைந்தது. மறைந்த புள்ளியிலிருந்து மீண்டும் பார்வையை சிறிதான வட்டத்தில் பதித்து சுத்திச் சுத்தி வந்து புள்ளியில முடித்தான். மேடு பள்ளமற்ற முகட்டில் ஒற்றை நிறத்தில் வளையும் வட்டத்தைப் பிரமிப்புடன் சிறிது நேரம்பார்த்தான். பின்னர் பார்வை யன்னலோரம் சென்றது. பருத்த மரத்தின் கிளையொன்று யன்னலை உரசித் தெரிந்தது. கறுப்பு, கடும்பச்சை, பச்சை, இளம்பச்சை, கடும்மஞ்சள், மஞ்சள், இளமஞ்சள் எனக் கலவையாய் சின்ன இலைகள் கலந்து தெரிந்தன. ஒற்றைக் காம்பில் சின்னநிகம் போன்ற இலைகளை மனதுக்குள் எண்ணினான். வியந்தான். பருத்த மரத்தின் முழுவதுமான இலைகளை எண்ண மனம் அடித்துக் கொண்டது. களைத்து பார்வையை திசை திருப்பினான். சிறிது அசைந்து விட்டு மீண்டும் சீராக சுவாசித்த அவள் வியர்வை அவன் உடலில் ஒட்டி வழிந்தது.

அவன் பார்வை அறையை வேவு பார்த்தது. கடும் பச்சையில் சுவர்கள் வினோதமாய் கிடந்தன. வெளிர் நிறங்களே அறைக்குப் பொருத்தமானவை என்று எண்ணிக் கொண்டான். இருப்பினும் கடும்பச்சை அழகாக இருப்பது போலும் பட்டது. சுவரில் தொங்கும் ஆபிரிக்க ஓவியங்கள் கறுப்பிலும், மஞ்சளிலும் சுவருக்குப் பொருத்தமாய் தீப்பிளம்புபோல் காட்சியளித்தன. மேசையில் கிடந்த பூச்சாடியின் பூக்களை இனம்காண முனைந்து பின் பார்வையை நாலாபக்கமும் அலைய விட்டான். கை விறைத்தது. கால்களைப் பிரித்துப் போட்டான். அவள் பிருஷ்டம் குளிர்ந்துபோய்க் கிடந்தது. வெள்ளை படர்ந்து அவள் முழங்கைகள் பொருக்குக் கண்டிருந்தன. முதுகில் சின்னச் சின்னக் கறுப்புப் புள்ளிகளும், சிறிய



படிப்பகம்

www.padippakam.com

கொழுப்புப் பருக்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கிடந்தன. தனது நிகம் கொண்டு மெல்ல பருக்களை நெரித்தான். அவள் உடல் சிறிது உதறி அசைந்து உடல் திருப்பி, அவன் கழுத்தோடு முகம் வைத்துப் படுத்துக் கொண்டாள். மச்ச வாசத்தோடு, வெண்காய மணமும் கலந்த அவள் மூச்சு அவன் முகத்தில் பரவியது. அவன் தள்ளி அவள் முகத்தைப் பார்த்தான். கண்ணீர் கன்னத்தில் கறையாகிக் கிடந்தது. புருவங்கள் அலங்கோலமாய்க் கிடந்தன. மெல்லத் தன் நிகம் கொண்டு அதை ஒழுங்கு படுத்தினான். கண் இமைகள் ஈரலிப்போடு மினுமினுத்தன. சொண்டின் மேற்பகுதியில் பூனை மயிர்கள் சுருண்டு கிடந்தன. "பெண்ணுக்குள் ஒளிந்திருக்கும் ஆண்மை" தன் மீசையை ஒருமுறை வருடி விட்டுக் கொண்டான்.

அவள் உடல் முறித்தாள். கண்கள் சொடுக்கி அவன் முகம் பார்த்தாள். ஒரு கொட்டாவி விட்டாள். சின்னதாகப் புன்னகைத்தாள். பின் எக்கி அவன் இதழ் முத்தி மீண்டும் கழுத்துக்குள் முகம் புதைத்தாள். கலவையாய் வெவ்வேறு வாசனைகள் அவளிடமிருந்து எழுந்து அடங்கின. அவள் கால்களால் அவனை வளைத்துக் கொண்டாள். அவன் கைகளை உயர்த்திப் போட்டுக் கொண்டு அசையாது கிடந்தான். வியர்வைகள் வற்றிப் போய் விட்டிருந்தன. கொட்டாவி விட்டான். கண்கள் மூட அவனிடமிருந்தும் சீராக சுவாசம் வெளிப்பட்டது. ஒரு சீரான லயத்துடன் இருவரின் மூச்சு ஒலியும் அந்த அறையை ஆட்கொண்டது.

அனல் காற்றின் வீரியம் குறையவில்லை. குழந்தைகளின் கும்மாள ஒலிகள் தூரத்தில் கேட்டன. வாகனங்கள் புழுதியைக் கிளப்பிச் சென்றன. இடம்மாறிப் பறக்கும் பறவைகளின் குரல்கள், காற்றில் கலக்கும் பாடல் வரிகள், நடைபாதைப் பேச்சுக்குரல்கள் இயங்கும் நகரத்தின் அடையாளமாய் வடிந்து சென்றன. சுவரோரக் கடிகாரம் சத்தமிட மறந்து அசைந்து கொண்டிருந்தது.

அவள் இருமினாள். தொடர்ந்து இருமினாள். கால்களை எடுத்துக் கொண்டாள். கட்டிலை அசைக்காது எழுந்து அருகிலிருந்த சாடியில் இருந்து தண்ணீர் எடுத்துக் குடித்தாள். துவாயால் கழுத்து வியர்வையைத் துடைத்தாள். அவன் நெற்றியை ஒருமுறை ஒற்றி விட்டாள். அவனிடமிருந்து வினோதமான ஒலியில் குறட்டை வெளிவந்து கொண்டிருந்தது. சீராகக் கத்தரிக்கப்படாத மீசையில் சிறிய நரை ஓடியது. சொண்டுகள் வறண்டு போய்க் கிடந்தன. கன்னத்தில் நீளமாய் ஒரு காயம் காய்ந்து தெரிந்தது. கண்களின் அடியில் கருவளையம். கன்னத்து மயிரிலும் சிறிய நரை. அவள் குனிந்து விரல் நுனியால் நரை மயிரில் ஒன்றை இடுக்கி மெல்ல இழுத்தாள். அவன் அசைந்தான். அவள்



தனக்குள் சிரித்து மெல்லிய குரலில் பாட்டுப் பாடிய படியே சுவரை நோட்டமிட்டாள். பார்வையை சுற்றிச் சுற்றி ஓட விட்டாள். குப்புறப் படுத்து குமுதம் புரட்டினாள். அவன் தலைமயிரை விரல்கள் கொண்டு கலைத்து விட்டாள்.

அவன் மூடி மூடி இமைகள் திறந்தான். புன்னகைத்தான். அவனுக்கு மூத்திரம் முட்டியது. எழுந்து வோஷ் ரூம் சென்றான். குளிக்கும் சத்தம் கேட்டது. அவள் கட்டிலில் புரண்ட படியே பாடல் ஒன்றை ஹம் பண்ணினாள். தண்ணீர் சத்தம் நிற்க அவன் மீண்டும் வந்தான். அவள் எழுந்து கொண்டாள். வோஷ் ரூம் போனாள். குளித்தாள். வெளியே வந்தாள். இருவரும் மௌனமாகத் தொலைக்காட்சி பார்த்தார்கள். அவன் வயிறு புரண்டு குளறியது. "சாப்பிடுவமா?" கேட்டான். அவள் தலையசைத்தாள். பார்சலை உடைக்க குளிர்ந்து போய்க் கிடந்தது சாப்பாடு. கையால் அள்ளி அள்ளிச் சாப்பிட்டார்கள். தண்ணீர் குடித்தார்கள். யாரோ ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தொலைக்காட்சி செய்தி சொல்லிச் சென்றது. அவன் மேசையில் கிடந்த பழங்களை எடுத்து அவளுக்கு நீட்டினான். அவள் வாயுக்குள் கிடந்த சுவிங்கத்தை எடுத்து விரல் நுனியில் பிடித்த படியே ஒரு பழத்தை எடுத்துச் சாப்பிட்டு விட்டு மீண்டும் சுவிங்கத்தை வாயுக்குள் திணித்துக் கொண்டாள். அவன் பழங்களைச் சாப்பிட்ட படியே தொலைக்காட்சி செய்தியில் மூழ்கிப் போனான். அவள் குமுதத்தையும் தொலைக்காட்சியையும் மாறி மாறிப் பார்த்து நேரத்தைப் போக்காட்டினாள். அவன் தொலைக்காட்சியை அணைத்து விட்டு "போவமா?" என்றான். அவள் தலையசைத்தாள். கைப்பையினுள் கார் திறப்பைத் தேடினாள்.

அவன் அருகில் வந்து அவள் இடுப்பைக் கைகளால் வளைத்து "ஏன் அழுதனீ" என்றான். அவள் சொண்டுகள் நடுங்க, கண்கள் பனிக்க மீண்டும் விம்மிய படியே அவன் தோள் சாய்ந்தாள். முகில்களின் நடுவில் பறப்பதாய் ஒரு கனவு அவனுக்குள். நீலமாய், வெள்ளையாய், கறுப்பாய் முகில்களின் நிறங்கள். சாளரத்தைக் கீறிக் கீறி சத்தம் எழுப்பியபடி இருந்தது பருத்த மரத்தின் ஒரு கிளை. காற்று வெப்பம் தணிந்த குளிராய் வீசியது. அவளை இறுக்கினான். மீண்டும் இறுக்கினான். பலம் கொண்ட மட்டும் இறுக்கினான். அவளுக்கு நோகவில்லை. அவள் எப்போதோ இறந்து விட்டிருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

# எனக்கும் ஒரு வரம் கொடு..

குசினி மூலையில் வருபவர்களுக்குத் தேத்தண்ணி போடும் சாக்கில் நேரத்தைக் கடத்திக் கொண்டு நின்றாள் கௌசி. நினைவு மைவிழியையே சுத்திச் சுத்தி வந்து கொண்டிருந்தது. "தலைக்கு வாருங்கோ" எண்டு அண்ணா கூப்பிட்டுவிட ஆயாசத்தோடு மனம் நிறைய தண்ணியை அள்ளி அள்ளி வார்த்தாள் கௌசி. "சரி காணும்" கிண்ணியைப் பிடுங்கி அண்ணியின் அக்கா அடுத்த பொம்பிளையிடம் குடுத்தாள்.

கன்னங்கள் சிவக்க முகத்தில வடிந்த தண்ணியை சிரித்த படியே வாங்கிக் கொண்டு, மைவிழி கௌசியின் கையை வருடி விட்டாள். சிலிர்த்த உடம்பு அடங்க முதல், அவளை கட்டிப்பிடித்து ஈரம் சீலையில் ஊறியதையும் உணராமல் கொஞ்சிக் கண் கலங்கி "என்ர குஞ்சு" எண்டாள். உருண்ட முகத்தில், விரிந்த கண்களால் கௌசியைப் பாத்து வெட்கத்துடன் சிரித்தாள் மைவிழி.

மைவிழியின் ஒவ்வொரு அசைவையும் பாக்க ஆசைப்பட்டவளாய் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த கௌசியிடம் "அண்ணி வாறாக்களுக்குப் பாத்துப் பலகாரம் குடுக்கிறீங்களே, அண்ணி வாறாக்களுக்குப் பாத்து தேத்தண்ணி குடுக்கிறீங்களே". கைக் குழந்தையோடும் பட்டோடும் வேர்க்க விறுவிறுக்கப் பறந்து கொண்டிருந்தாள் அண்ணி.



"என்ன கக்காத் துணி தோச்சனீரே" பெட்டைகள் பின்னேர வேளையிலை அரட்டையடிக்க கிணத்தடியில சந்திக்கேக்க கேக்கிற போது கையையும், சட்டையையும் மணந்து மணந்து பாப்பாள். தோள் பட்டையில எப்பவுமே ஒரு புளிச்ச மணம் நிரந்தரமாய் வீசும். கௌசி தலையச் சரிச்சுச் சரிச்சு மணந்து பாப்பாள். ஒருவித சுகம் அவளை அணைத்துக் கொள்ளும். சட்டை திட்டுத் திட்டாய் அங்குமிங்கும் விறைத்துக் கிடக்கும். பிரசவத்தின் முழு மோகனங்களுடனும் அலைந்து கொண்டிருப்பாள் அவள்.

"நல்லா பால் மண்டீட்டாள் ஒருக்கா ஏவறைக்குத் தட்டுறீரே". குழந்தையைக் குடுத்து விட்டுப் போவாள் அண்ணி. நிமித்தி தோளோட சேத்து அணைத்து முதுகை மெல்ல மெல்லத் தட்ட, நெளிந்து தலையத் தூக்கித் தூக்கி மோதி, தோளைச் சூப்பி பெரிதாகச் சத்தமாய் ஏவறை விட, தோள் ஈரமாகத் திரைஞ்ச பால் பின் சட்டையில் வடியும். வாய் துடைத்து இறுக அணைத்துக் கொஞ்ச, அவள் மார்போடு முகம் தேச்சு முலையை வாயால் கௌவ முயலும் குழந்தை "ச்சீ போடி கெட்ட பெட்டை என்னட்டைப் பால் இல்லை, அம்மாட்டக் குடிச்சது காணாதே குடிகாறப் பெட்டை" கன்னத்தில் செல்லமாய் அடிக்க, சின்னதாய் துடித்து வீறிட்டுக் கத்த இறுக அணைத்துக் கொள்ளுவாள்.

"கக்கா இருந்திட்டாள் போல" அண்ணி கை நீட்ட "நான் மாத்திறனே" கட்டிலில் துணி விரிச்சு குழந்தைய நிமித்திக் கிடத்த அது சிணுங்கும். "எண்ட செல்லமெல்லோ, எண்ட குஞ்செல்லோ" சொன்னபடியே முகத்தோடு முகம் தேச்சுக் கொஞ்ச குழந்தை சிரிக்கும்.

"என்ர செல்லம் சிரிக்குதோ, ஆ.. என்ர ராசாத்தி சிரிக்குதோ" கண்ணுக்குள் பாத்துக் கேட்டபடியே உடுப்பைக் கழற்றி துணிக்குக் குத்தியிருக்கும் பின்னை ஆட்டாமல் கழற்றுவாள். "சீ கக்காப் பெட்டை, என்னடி செஞ்சு வைச்சிருக்கிறாய்?" கேட்டபடியே மூக்கைச் சுளிச்சு துணியை அகற்றி, சின்னத் துவாயை ஈரமாக்கி உடம்பைத் துடைப்பாள். கால்களை அகற்றி பௌடர் போட்டு "இப்பிடியே கிடந்து கொஞ்ச நேரம் விளையாடு காத்துப் படட்டும்" பக்கத்தில படுத்திருப்பாள்.

"சின்னப்பாப்பா எந்தன் செல்லப் பாப்பா
சொன்ன பேச்சைக் கேட்டாத்தான் நல்ல பாப்பா

சின்னப் பாப்பா எந்தன் செல்லப் பாப்பா

தின்ன உனக்குச் சீனி மிட்டாய் வாங்கித்தரணுமா

சிலுக்குச் சட்டை சீனாப் பொம்மை பலூண் வேணுமா



படிப்பகம்

www.padippakam.com

கண்ணாமூச்சி ஆட்டம் உனக்குச் சொல்லித் தரணுமா

அப்போ கலகலவெண்டு சிரிச்சுக்கிட்டு

என்னைப் பாரம்மா..."

குழந்தை அவள் பாட்டை ரசிச்சபடியே "ங்க ங்க" எண்டு சேர்ந்து பாடும்.

"அண்ணி அண்ணி இஞ்ச ஓடிவாங்கோ" பதறியடிச்சு ஓடிவந்த அண்ணியிடம் மைவிழி குட்டி உடம்பு பிரட்டப்பாக்கிறாள் எண்டு பரவசமாய்ச் சொல்லுவாள். "போடி அடுப்பில கறி, நீ கத்த நான் பயந்திட்டன்." அண்ணி கொஞ்ச நேரம் நிண்டு பாத்துவிட்டு போய் விடுவாள். "என்னடி குட்டி ஏமாத்தீட்டாய். இஞ்ச இப்பிடி இப்பிடித் திரும்பு" எண்டு குழந்தைக்குப் பக்கத்தில் கிடந்து தன் உடம்பை பிரட்டிப் பிரட்டிக் காட்டுவாள். அண்ணா அண்ணியைக் கூப்பிட்டு "இஞ்ச எங்கட கௌசிக் குட்டி உடம்பு பிரட்டுறாள். படம் எடுப்பம் கமெராவைக் கொண்டு வாரும்" முகம் சிவக்க சட்டையை இழுத்து விட்டு எழும்பி இருப்பாள்.

"நடவடி சக்கை மாதிரி இருக்கிறாய். உன்ர வயசில எல்லாம் ஓடித்திரியுதுகள்" மைவிழியின் கையைப் பிடித்து எழுப்பி, நிப்பாட்டி தன் கைகளோடு அவள் கைகளைப் பிணைத்து, பின்பக்கமாய் தான் நடந்து சின்னச் சின்ன அடியாய் அவளை நடக்கச் செய்வாள். "என்ர குஞ்செல்லே நடவம்மா.. ஆ.. கெட்டிக்காறி அப்பிடித்தான் அப்பிடித்தான்.." கௌசிக்கு முதுகு பிடித்துக் கொள்வதுதான் மிச்சம். முதலாவது பிறந்தநாளுக்கு மைவிழி நடக்காமல் போனது கௌசிக்கு வெக்கக் கேடாய் இருந்தது. "என்ர அக்கான்ர மகள்.. என்ர அண்ணான்ர மகன்.." பெட்டைகள் சொல்லிக் கொண்டே போவார்கள்..

"கௌசிமாமி அந்த ராஜாக்கதை.. கௌசிமாமி பொரியல் தாங்கோ.. கௌசிமாமி எனக்குக் காச்சல் நான் பள்ளிக்கூடம் போகேலை.. கௌசிமாமி..கௌசிமாமி.."

மைவிழியைக் குளிக்கவார்த்தபடியே "சின்னச் சின்னக் கை, சின்ன மூக்கு, சின்ன வாய்" கௌசி அடுக்கிக் கொண்டு போக "இதென்ன கௌசிமாமி, சின்னப் பாப்பா" தன்ர மார்பைத் தொட்டுக் கேட்டுச் சிரிப்பாள். "போடி கள்ளப் பெட்டை" கன்னத்தைத் தட்டுவாள் கௌசி. "உங்களுக்கு மாதிரி எனக்கும் பெரிசாகுமா" கண்கள் அகல கௌசியின் உடம்பைப் பார்த்த படியே கேட்பாள் மைவிழி. அவளின் உடம்பில் சவுக்காரத்தைத் தேச்சபடியே "ஓம் கொஞ்சம் கொஞ்சமாப் பெரிசாகும், அப்ப மைவிழிக் குட்டி பெரிய பொம்பிளையா வளந்து வளந்து வருவாள்.



கௌசி மாமி மைவிழிக் குட்டிக்குச் சீலை கட்டி, தலையெல்லாம் பூ வைச்சு, நகைகளெல்லாம் போட்டு வடிவா வெளிக்கிடுத்தி விடுவன், மைவிழிக் குட்டி ராசாத்தி மாதிரி இருப்பாள் என்ன?" மைவிழியின் கண்கள் கனவில் மிதக்க ஒரு கணம் எங்கோ சென்று திரும்புவாள். "கனக்க ஆக்களெல்லாம் வருவீனமே. நிறம்ப பிரசெண்ட் எல்லாம் கிடைக்குமே," "ம்..போடி உனக்கு பிரசெண்ட்தான் முக்கியம்" அவள் துடையில் அடிப்பாள். ஆ..ஆ அழுவது போல் நடிக்கும் மைவிழியின் தலையில்

"ஒரு குடம் தண்ணி - நூறாண்டு

ரெண்டு குடம் தண்ணி - நூற்றிப் பத்தாண்டு

மூண்டு குடம் தண்ணி - நூறு நூறு நூறாண்டு

ஐயோ தண்ணி முடிஞ்சுதே" சோகமாக முகத்தை வைத்துக் கொள்ளுவாள்..

துவாயை உதறி தலையைத் துடைச்சு, உடம்பை சுத்தி நடுங்கும் மைவிழியைத் தன் உடலோடு அணைத்துத் தூக்கி அறைக்குள் ஓடி வந்து, உடம்பைத் தேய்த்துத் துடைத்து, பௌடர் போட்டு, தலைக்கு ஓடிக்கொலோன் பூசி, சுருங்கியிருக்கும் கைகளைத் தன் கையோடு சேர்த்துத் தேச்சுச் சூடாக்கி, பொக்கிள் மேல் வாயை வைத்து ஊதிவிட்டு, மைவிழி கூசி நெழிந்து கலகலவென்று சிரிப்பாள்..

கௌசியின் முதலிரவன்று மைவிழி நித்திரை கொள்ளவில்லை. "எனக்குக் கௌசிமாமியோட படுக்க வேணும் குரலெடுத்துக் கத்தியவளை இரவிரவாகக் கொண்டு அலைந்ததாய் அண்ணி இப்பவும் சொல்லிச் சிரிப்பாள்.

"கௌசி மாமி ஒருக்கா வீட்டை வாறீங்களே" காலம வெள்ளணை போன் வந்தபோது பயந்து போனாள் கௌசி. "என்னம்மா என்ன நடந்தது" கேட்டவளிடம் "நீங்க இப்ப உடன இஞ்ச வாங்கோ" விசும்பினாள். என்னடா அம்மா எங்கை? என்ன நடந்தது? சொல்லனம்மா" "அம்மாவும், அப்பாவும் நித்திரை, எனக்கு உங்களோட கதைக்க வேணும்" கௌசிக்கு கொஞ்சம் விளங்கியது, கணவனிடம் சொல்லி விட்டு மனம் குதூகலிக்க "உடன மாமி வாறன் நீங்கள் போய் அறைக்குள்ள இருங்கோ சரியே" அண்ணி எழும்பு முதல்லே மைவிழிக்கு நப்பிண் பாவிக்கச் சொல்லிக் குடுத்தாள் கௌசி.

"பதின்மூண்டு பொம்பிளைகள் வேணும் தட்டுத் தூக்க கூப்பிடுங்கோ நேரம் போகுது" அண்ணியின் அக்கா பெரிய குரலில் கத்தினாள். "இஞ்ச உதில இருந்து கொசிப்படிக்காமல் தட்டுத் தூக்க வரட்டாம்



படிப்பகம்

www.padippakam.com

பொம்பிளைகளே போங்கோ" பட்டும், நகையுமாய் ஜொலித்த பொம்பிளைகளைக் கிண்டலாய் கூப்பிட்டு குசினிக்குள் வந்து "இஞ்ச என்ன செய்யிறாய் தட்டுக் கொண்டு வரக் கூப்பிடீனம் போ" அண்ணா சொல்லி விட்டுப் போனான். "கௌசி மைவிழி கூப்பிடுறாள், தன்னோட உங்களையும் வரட்டாம்.. அவளுக்குப் பக்கத்தில தட்டோட வாங்கோ" அழுத மகனைத் தோளில போட்டு ஆத்திய படியே அண்ணி வந்து கையைப் பிடித்து இழுத்தாள். "இல்லை அண்ணி உவனை என்னட்டத் தந்திட்டு நீங்கள் போங்கோ." "இஞ்ச நேரம் போகுது. மைவிழி உங்களத்தான் வேணுமெண்டு கேக்கிறாள் போங்கோ" பிடிச்சுத் தள்ளாத குறையாச் சொல்லிவிட்டுப் போய் விட்டாள் அண்ணி.

வரிசையாகப் போன பெண்களோடு தானும் சேர்ந்து கொண்ட கௌசியைப் பார்த்து கண்களால் சிரித்துத் தலையாட்டினான் அவள் கணவன். கௌசிக்கு வெட்கமாக இருந்தது. இண்டைக்கு இரவைக்கு இருக்கு உங்களுக்கு. அவளும் கண்களால் சொல்லிவிட்டுப் போனாள்.

"இந்தாங்கோ பலகாரத்தட்டு, இந்தாங்கோ பழத்தட்டு, இந்தாங்கோ பூத்தட்டு.." தட்டுகளைத் தூக்கித் தூக்கிப் பெண்களிடம் குடுத்துக் கொண்டிருந்தாள் அண்ணியின் அக்காள். கௌசியின் தோள் மேலால் தட்டுகள் பின்னேறிப் போய்க் கொண்டேயிருந்தன. கௌசி மௌனமாக நின்றாள். சுவர்கள் ஒடுங்கி நீள, மூச்சு முட்டுவதுபோல் சுவாசமின்றித் தடுமாறினாள். தலையில் சடைநாகத்துடன், மூக்கு மின்னியும், நெத்திப் பொட்டும், சீலையுமாய் மைவிழி யாரை ஞாபகப்படுத்துகின்றாள். மைவிழி அவளைக் கட்டிப்பிடிச்சு மார்போடு முகம் வைத்துக் கண்கள் கலங்க கைகளை இறுக்கினாள். "நீர் இப்பவும் சின்னப்பிள்ளையில்லை தெரியுமோ? பெரியபிள்ளை மாதிரி ஃபிகேவ் பண்ணும் பாப்பம், மேக்கப்பெல்லே குழம்பீடும்" கையைப் பிடித்து மைவிழியை இழுத்து விட்டாள் லண்டனிலிருந்து வந்திருந்த அண்ணியின் அக்காள்.

தொண்டைக் குழி இறுக, தொடைகள் நடுக்கம் கண்டன. கௌசியின் கால்கள் இயங்க மறுத்தன. பெரிதாய் நாதஸ்வரம் அலறியது. சிரிப்பும் சிங்காரமுமாய் பெண்கள், ஆண்கள், குழந்தைகள், முதியவர்கள்.

எங்கோ காட்டில் தனித்து விடப்பட்டவள் போல் கௌசியின் மனம் பயம் கண்டது. கணவனை இறுக அணைத்து உடலுறவு கொள்ள வேண்டும் போல் வேகம் கொண்டது உடம்பு. உன்னை நான் இறுக அணைத்துக் கொள்கின்றேன். என் கருப்பைக்குள் உன் விந்தைக் கொடு. அது கருக்கட்டி உருப்பெற்றுக் குழந்தையாக மாறட்டும். என் அடிவயிறு நோக் காண கால்கள் வலிக்கட்டும். என் வயிற்றைக் காலால் சிசு எட்டி உதைக்கட்டும், என் பெருத்த வயிறுடன் உன் தோள் தாங்கி நெடுந்தூரம் நடந்து வருகின்றேன். பிரவச வலி எனக்கும் வேண்டும். என்னைத் தாங்கு உன்னுடன் பிணைத்துக் கொள். உலகின் எல்லா நோவும் என்னைத் தாக்கட்டும். என் யோனி கிழித்து உலகை குழந்தை ஒன்று எட்டிப் பார்க்கட்டும், என் முலையின் கட்டிப் போன பாலை அது சப்பி உறிஞ்சிக் குடிக்கட்டும். என் உடலிலிருந்து உதிரம் வழிந்து தெருவெங்கும் ஓடட்டும். நானும் தாயாக எனக்கும் ஒரு வரம் கொடு. எனக்கும் ஒரு வரம் கொடு. எனக்கும் ஒரு வரம் கொடு.

"தட்டுத் தூக்க ஒரு ஆள் குறையுது கூப்பிடுங்கோ" அண்ணியின் அக்கா குரல் எங்கோ தொலைவில் கேட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# 40+

**தா**ன் அன்றைக்கு ஆஷாவோட கதைக்க வேண்டியதை எல்லாம் திரும்பத் திரும்பச் சொல்லிப்பாத்துக் கொண்டான் சந்திரகாந்தன். பல தடவைகள் சொல்லிப் பார்த்துக் கொண்டதால் முதல் தடவை சொன்னது மறந்து போனதோடு அதுதான் அழகான வார்த்தைளோடு அமைந்திருந்தது என்ற ஏக்கமும் அவனுக்குள் வரத் தொடங்கியது. மறந்ததை நினைவுபடுத்த முனைய உள்ளதும் மறந்து போய்..

சரி ஒண்டும் வேண்டாம் முதல்ல இருந்து சொல்லிப்பாப்பம். திரும்ப ஒவ்வொரு வார்த்தையாக கோர்க்கத் தொடங்கினான். அவன் வாய் வார்த்தைகளைக் கோர்க்க மனம் ஆஷாவோடு கட்டில் வரை போய் நின்றது. கதவை டொக் டொக் என்று யாரோ ஊன்றித் தட்டினார்கள். கட்டிலில் இருந்து நினைவை இழுத்து இறக்கி நிலத்திற்கு வந்து

"என்ன ஆர்" எண்டான்

"அப்பா எனக்கு இண்டைக்கு எக்ஸ்சாம் இருக்கு, நான் குளிக்க வேணும்" சினத்தோடு மகள் காவேரி கத்தினாள்.

"வாறனம்மா முடிஞ்சுது". குரல் குழைந்தாலும் மனம் புறுபுறுத்தது. அவசரமாக மீசையின் எல்லா வெள்ளையையும் மூடி கறுப்பு டையை அடித்து முடித்தான். திடீரென்று மனம் சோர்ந்து தவித்தது. தவித்ததை



திரும்ப உலுப்பி சமாதானம் சொல்லி நிமிர்த்தி வைக்கும் கைங்கரியம் அவனுக்கு இப்போதெல்லாம் இயல்பாகவே வந்தது. மனச்சோர்வு அளவுக்கு மீறினால் உடனே ஏதாவது ஒரு தத்துவப் புத்தகத்தில் தான் வாசித்த வாழ்க்கைத் தத்துவங்கள் சிலவற்றை தன் வாதத்துக்கு ஏற்ப கண்டு பிடித்து அதைத் தன் வாழ்க்கையோடு தொடர்பு படுத்தி தன்னைத் திருப்திப் படுத்திக் கொள்வான். இல்லாவிட்டால் யாராவது ஒருவரின் வாழ்க்கை முறையை நினைவிற்கு கொண்டு வந்து அதில் பல பிழைகளைக் கண்டு பிடித்து அதோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து தான் ஒன்றும் பிழை விடவில்லை என்று திருப்திப் பட்டுக் கொள்வான். காவேரி கடந்து போன போது வாயுக்குள் நமட்டுச் சிரிப்பு ஒன்றைச் சிரித்தாள். சாப்பாட்டு மேசையில் மூன்று பிள்ளைகளும் தங்களுக்குள் சுரண்டி கண்காட்டிச் சிரிப்பதைக் காணாதது போல் தவிர்த்தான். ஆஷாக்கு காவேரியிலும் விட எத்தின வயசு கூட இருக்கும். மனம் கணக்குப் பார்த்தது. ஆஷாவிடம் அவன் இன்னும் வயசு கேட்கவில்லை. ஆனால் நிச்சயமா அவளுக்கு முப்பதுக்குக் கிட்ட இருக்கும். "அம்மா அப்பான்ர மீசையைப் பாத்தீங்களே?" சித்து திடீரென்று சிரித்த படி கேட்டான். "உன்னச் சாப்பிடேக்க கதைக்க வேண்டாம் எண்டு எத்தின தரம் சொன்னனான். அவன் தலையில ஒரு தட்டுத் தட்டி "ஏன் இப்ப எல்லாருந்தானே டை அடிக்கீனம், அப்பா அடிச்சா என்ன?" கௌரி சொன்ன படியே காந்தனின் மீசையைப் பார்த்தாள். "வடிவாயிருக்கப்பா" என்றாள்.

"கௌரி கௌரி இப்பிடி அசடா இருக்காதை. நான் உனக்குத் துரோகம் செய்யிறன்" திடீரெண்டு விக்கி விக்கி அவளின்ர காலில விழுந்து அழுந்து மன்னிப்பு கேட்கும் பெரிய ஒரு தியாகி போலவும், எப்பவும் உண்மை கதைக்கும் ஒரு உத்தமன் போலவும் தன்னைக் கற்பனை பண்ணிப் பார்த்தான். குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்பது என்பது எவ்வளவு பெரிய விஷயம். அப்பிடி நான் செய்தால் என்னுடைய மதிப்பு எவ்வளவு உயர்ந்து போகும். அதுவும் கொஞ்சம் மனம் சஞ்சலிச்சுப் போனன், "ஆனால் எனக்குக் குடும்பந்தான் பெரிசு எண்டு இப்ப உணர்ந்திட்டன்" போன்ற வசனங்களை எடுத்து விட்டால் எவ்வளவு கௌரவமாக இருக்கும். கௌரி அவனின் தலைய எடுத்து தன்ர நெஞ்சோட சாய்ச்சு "அப்பா ஏதோ தெரியாமல் பிழை விட்டிட்டியள், ஆம்பிளைகள் இப்பிடித்தான் யோசிக்காமல் பிழை விட்டிடுவீனம் பிறகு குழந்தைப் பிள்ளைகள் மாதிரி விக்கி விக்கி அழுவீனம். நான் உங்களக் கோவிக்க மாட்டன். என்னிலதான் முழுப் பிழையும் நான் உங்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஒரு நல்ல பொஞ்சாதியா இருந்திருந்தால் இப்பிடியெல்லாம் நடந்திருக்குமே" என்று கண்களைக் கசக்கிவிட்டுப் பின்னர், "இனிமேல் நாங்கள் சந்தோஷமா இருப்பம் அப்பா" என்பாள். காந்தன் விக்கினான். சாப்பாட்டு மேசையில் ஒருத்தரும் இல்லை.

கௌரி கட்டி வைச்ச சாப்பாட்டுப் பெட்டியை எழுத்துக் கொண்டு திரும்பவும் ஒருக்காத் தன்னைக் கண்ணாடியில் பாத்து வயித்தை எக்கி உள்ளே தள்ளி அது தந்த உருவத்தில் திருப்தி கொண்ட படியே வெளியே போனான். "இப்ப எத்தின வருஷமா ஜிம்முக்குப் போக வேணும் எண்டு நினைச்சு நினைச்சுக் கடத்திப் போட்டான். என்ர உயரத்துக்கு இந்த வயிறு மட்டும் கொஞ்சம் இறுக்கமா இருந்தா என்ன வடிவாயிருக்கும். ஆஷா நல்ல உயரத்தோட நல்ல இறுக்கமான உடம்போட இருக்கிறாள். என்னை முதல் முதல்ல உடுப்பில்லாமல் பாக்கேக்க அவளுக்கு அரியண்டமா இருந்தாலும் இருக்கும். அவனுக்குக் கவலையாய் இருந்தது. எதுக்கும் முதல் முதலாச் செய்யேக்க இருட்டுக்க வெளிச்சம் வராத மாதிரிப் பாத்துக் கொள்ளுவம். பிறகு பழகீட்டுது எண்டால் அவள் பெரிசா என்ர வயிறக் கவனிக்க மாட்டாள். அதுக்கிடேலை ஏலுமெண்டா ஜிம்முக்குப் போய் வயிற இறுக்கிக் கொள்ளலாம். இனிமேல் சோத்தைக் கொஞ்சம் குறைக்க வேணும். கௌரி சொன்னாலும் கேக்கமாட்டாள் எந்த நாளும் கடமைக்கு ஒரு சோத்தை அவிச்சு வைச்சிருப்பாள்."

காந்தனுக்கு திடீரென்று நெஞ்சுக்குள் ஏதோ செய்தது. கௌரியின் மேல் அவனுக்கும் அன்பு நிறையவே இருக்கிறது. ஆனால் காதல், காமம் என்பது ஏனோ அவனுக்கு அவளைக் காணும் போது எழுவதில்லை. கௌரி கூட தான் ஒரு நல்ல அம்மாவாக இருப்பதைத் தவிர வேறு ஒன்றிலும் அக்கறை காட்டவில்லை. காமம் உச்சத்துக்கு ஏறும் சில இரவுகளில் ஒரு பெண் உடலில் அதை தீர்க்க வேண்டிய கட்டாயத்தால் அவன் இரவு வேளையில் கௌரியை அணைப்பதுண்டு. கௌரி காந்தனின் பசிக்குத் தீனி போடுவது தன் கடமை என்று எண்ணி கெதியாக முடித்துக் கொண்டால் கெதியாக நித்திரை கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு வெறும் மரக்கட்டையாய் இயங்குவாள். இரண்டு இயந்திரங்கள் எதையோ செய்து முடித்து விட வேண்டும் என்பதுக்காய் அவசரமாக இயங்கும்.

இந்த நிலை காந்தனுக்கு வெறுப்பைத் தர, அதன் பின்னர் தொடர்ந்த ஒவ்வொரு தழுவலிலும் மனதில் வேறு ஒரு பெண்ணை மனப்பிரமை செய்யத் தொடங்கினான். இது அவனின் குறியை விறைக்கப் பண்ணவும்,



இயக்கத்தை கெதியாக முடித்துக் கொள்ளவும் உதவியாக இருந்தது. தொடக்கத்தில் குற்ற உணர்வை அது கொடுத்தாலும், பின்னர் அது பழக்கப்பட்ட ஒன்றாகி விட்டது. காலப்போக்கில் அது கூட அவனுக்கு பிடிக்காத ஒன்றாய்ப் போய் உடல் உறவு என்ற ஒன்றிலிருந்து விலகி நிம்மதியா நித்திரை கொண்டால் போதும் என்ற நிலை வந்துவிட்டது. வேலை முடிய சில நண்பர்களுடன் பாருக்குச் சென்று ரெண்டு பியர் குடித்து விட்டு வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டுப் படுத்தால் செக்ஸ் பற்றிய நினைவு அவனுக்கு எழாமலேயே இருந்து விடும். வயது போய் விட்டது. இது இயற்கை என்று நம்பியிருந்தவனுக்கு வேலையிடத்தில் அம்பதுகளில் இருக்கும் நண்பர்கள் நகைச்சுவையாகத் தமது காதல் வாழ்க்கை பற்றி அலசும் போது தனக்கு உடலில் ஏதாவது குறை வந்து விட்டதோ என்ற சந்தேகம் எழத் தொடங்கியது. கௌரிக்குத் தெரியாமல் நீலப்படங்களை எடுத்துப் பார்த்தான். அவன் உணர்வு கட்டவிழ்த்து விட்டது போல் புடைத்துக் கொண்டு எழத் தொடங்கியது. ஆண்களை விடப் பெண்களுக்கு காம உணர்வு ஏழு மடங்கு கூடுதலாக இருக்கும் என்று எங்கோ வாசித்த ஞாபகம் வர காந்தன் குழம்பிப் போனான். கௌரியும் காந்தனும் உடலுறவில் ஈடுபட்டு பல மாதங்கள் ஆகி விட்டன. "நான் இப்படிக் குழம்பித் தவிக்கிறேன். ஆனால் கௌரி நல்ல சந்தோஷமா நிம்மதியாக இருக்கிறாள். கோயிலுக்கு என்று அடிக்கடி வெளியில் போய்விட்டு வருகிறாள். நான் தான் அசடு மாதிரி ஏமாந்து கொண்டிருக்கிறேனோ." காந்தன் காரை ரோட்டுக் கரையில நிப்பாட்டினான். "கௌரி நல்லவள். வளந்த பிள்ளைகள் இருக்கேக்க பிழை ஒண்டும் செய்யக் கூடியவள் இல்லை. அவளுக்கு பெரிசா உணர்ச்சி இல்லைப் போல. விரதம் விரதம் எண்டு எப்ப பாத்தாலும் கடவுளின்ர நினைப்பில இருக்கிறதால அவளுக்கு வேற நினைவொண்டும் இல்லை. தானே வார்த்தைகளைப் பொருத்தித் தன் மனதுக்கு திருப்தி தரும் பதில் ஒன்றைக் கண்டு பிடித்து நிம்மதியாகினான். இதுதான் சரி இதைவிட வேறமாதிரி ஒண்டும் இருக்க ஏலாது. இருக்காது."

கௌரி என்று வரும் போது "பிழை," என்றும் தான் என்று வரும் போது "குற்றமில்லை" என்பதற்கான அத்தனை காரணங்களையும் கண்டு பிடித்து நிம்மதி கொண்டான். விலகி விலகி இருந்து விட்டு இப்போது நீலப் படங்கள் பார்த்து உணர்சியை மீண்டும் மீட்டெடுத்து இரவு வேளைகளில் கௌரி மேல் கைபோட அவள் தட்டி விட்டு தள்ளிப் படுத்துக் கொண்டாள். அவன் வாய் விட்டுக் கேட்டால் கூட தனக்கு ஏலாமல் இருக்கு சுகமில்லாமல் நிக்கப் போகுது போல அதால உடம்பை



படிப்பகம்

www.padippakam.com

உலுப்பி எடுக்குது எல்லா இடமும் ஒரே நோகுது என்னால இனிமேலும் ஏலாது எண்டு அவள் முற்று முழுதாக விலகிக் கொண்டாள். கடைசியா கௌரியோட அவன் உறவு கொண்ட நாள் நினைவுக்கு வந்த போது மனம் அவமானத்தால் குறுகிப் போய் பழி வாங்கும் மூர்க்கம் அவனுக்குள் எழுந்தது.

ஒரு சனிக்கிழமை இரவு குடும்பத்தோட பார்ட்டி ஒன்றுக்குப் போய்விட்டு வந்து, மனம் முழுக்கச் சந்தோஷத்தோடும், உரிமையோடையும் கட்டிலில் படுத்திருந்த கௌரியை கட்டிப்பிடித்த காந்தனை தனக்கு நித்திரை வருகுதென்று தள்ளி விட்டாள் கௌரி. கொஞ்சம் குடிச்சிருந்ததாலையோ, இல்லாட்டி பார்ட்டியில் பல பெண்களோடு நடனமாடி உணர்ச்சி உசுப்பப்பட்ட நிலையில் இருந்ததாலையோ என்னவோ கௌரியின் புறக்கணிப்பை அவன் கணக்கெடுக்காமல் அவளை இறுக்கி அமுக்கி தன் வேகத்தைத் தீர்த்துக் கொண்டான். அவள் சத்தம் போடாமல் மூக்கை உறிஞ்சும் போது அவன் நித்திரையாய் போயிருந்தான்.

அடுத்தநாள் நித்திரையால் எழும்பி கீழே வந்த காந்தன் டைனிங் ஹோலில குசினிப் பக்கமா ஒரு கேட்டிண் போட்டு, அம்மாக்கு படியேறக் கால் சரியா நோகுதாம், என்று ஒரு சின்ன கட்டிலோட ஒரு பெட் ரூம் செட்டப்பாகியிருந்ததைக் கண்ட பிறகுதான் அதின் சீரியஸ் அவனுக்கு விளங்கியது. எவ்வளவோ மன்றாடி மன்னிப்புக் கேட்டுப் பார்த்தும் அவள் ஒரு ஞானியைப் போல அவனைப் பார்த்து ஒரு சின்னச் சிரிப்பு சிரித்துவிட்டு தன் இரவுகளை அங்கேயே முடித்துக் கொண்டாள். காந்தன் பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்குமோ என்று முதலில் அவமானத்தால் ஒடுங்கிப் போனான். பிறகு காலப்போக்கில தான் குடுத்து வைச்சது இவ்வளவுதான் என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் பழக்கிக் கொண்டான். கட்டுப்படுத்த முடியாத இரவுகளில் குற்ற உணர்வோட கையை உபயோகித்தான். எல்லாமே அவனுக்குக் குற்றமாகப்பட்டது. இயற்கையாக நடக்க வேண்டிய ஒன்று தடைப்பட்டு இப்ப தான் ஒரு குற்றவாளியோல கூனிக் குறுகிப் போவதை நினைத்து அவனுக்கு சில நேரங்களில கோவம் தலைக்கு மேல் ஏறுவதுண்டு. நீலப்படங்கள் பார்ப்பதை முற்றாக நிறுத்திக் கொண்டான். மீண்டும் நண்பர்களோடு பாருக்கு சென்று பியர் குடித்து வீட்டிற்கு தாமதித்து வந்து சாப்பிட்டுவிட்டுப் படுப்பதைப் பழக்கப்படுத்திக் கொண்டாலும் கௌரி தன்னை நிராகரிப்பது அவனுக்குள் காமத்தைத் தூண்டச் செய்தது.



உடலின் விந்தை அவனுக்குப் புரியவில்லை. காதல் அற்ற நிலையில் அவ்வப்போது எழும் காமத்தை அடக்க இயந்திரம் போல் இருவரும் இயங்கினர். அந்த வேளையில் கௌரியின் உடல் மட்டும்தான் அவனுக்குத் தேவையாகியிருந்தது. உருவம் யாராவது ஒரு கவர்ச்சி நடிகையாகவோ இல்லாவிட்டால் வேலைத்தளத்தில் பார்க்கும் ஒரு இளம் பெண்ணாகவோ இருந்து வந்தது. "அப்போது நான் யாருடன் உடல் உறவு கொள்ளுகின்றேன். மனதில் வரிந்து கொள்ளும் அந்தப் பெண்ணுடனா? இல்லை கௌரியுடனா?" என்ற கேள்வி அவனுக்கு அடிக்கடி எழுவதுண்டு. பின்னர் அதைக் கூட மனம் விரும்பவில்லை. தானாகவே கௌரியை விட்டு விலகிக் கொண்டான். சரி இனி காமத்தின் தொல்லை விட்டது என்று நிம்மதி கொண்டாலும் தனக்கு வயது போய் விட்டது அதனால் உணர்வுகள் அடங்கி விட்டன என்ற எண்ணம் அவனுள் எழுந்து மனஉளைச்சலைக் கொடுக்கும். இந்த நிலை தனக்கு மட்டுமா இல்லை நாற்பதுகளில் ஆண்கள் எல்லோருக்குமே ஏற்படும் ஒன்றா? பதில் தெரியாமல் குழப்பம்தான் அவனுக்குள் மிஞ்சிக் கிடந்தது. இளம் வயதில் கௌரியை எப்பிடியெல்லாம் காதலித்தேன். ஆனால் இப்போது அவளை வெறுக்கவில்லை. ஆனால் அவளின் வடிவம் எனக்குள் எந்த உணர்வையும் எழுப்பவில்லை. அதே நிலைதான் கௌரிக்கும் என்று அவனுக்குள் விளங்கிய போது அவள் மேல் கொஞ்சம் கோவம் வந்தது. உடல் உணர்வு, காமம், காதல் என்று எல்லாமே அவனுக்கு விந்தை காட்டும் மர்மர்களாகத் தெரிந்தது.

வேலைத் தளத்தில் சாப்பாட்டு வேளைகளில் அதிகம் தனிமையில், கையில் கிடைக்கும் ஒரு பத்திரிகையோடு நேரத்தைக் கழிக்கும் அவன் தற்போதெல்லாம் தனிமையைத் தவிர்க்க விரும்பியும், காதல், காமம் பற்றி மற்றவர்களின் புரிதலைப் தெரிந்து கொள்ளும் எண்ணத்துடனும் வேற்று நாட்டு ஆண்கள் பெண்களுடன் தனது சாப்பாட்டு நேரத்தைக் கழிக்கத் தாடங்கினான். அவர்களின் வக்கிரக் கதைகள் மீண்டும் அவனின் உணர்வுகளை தட்டி எழுப்பி விட்டன. இது நிரந்தரமான உடல் பசி. வேகம் கூடும் குறையும். ஆனால் மனிதன் இறக்கும் வரை இருந்தே தீரும் என்பதை அவன் புரிந்து கொண்டான். தியானத்தால் மட்டும் இதனைக் கட்டுப்படுத்தலாம் என்று ஒரு புத்தகம் அவனுக்குக் கூறியது. கௌரி தேவாரத்தின் மூலம் இதனைக் கட்டுப்படுத்துகிறாள் என்றும் அவனுக்குப் பட்டது.

இப்போது என்ன செய்வதென்று தெரியாத நிலை காந்தனுக்கு. இதைப் பற்றி யாரோடு கதைக்கலாம் என்று அவனுக்குத் தெரியவில்லை. கலியாண



படிப்பகம்

www.padippakam.com

வயசில் பொம்பிளப் பிள்ளை வளர்ந்து நிற்கும் போது நான் இதைப் பற்றி யாரிடமாவது கேட்டால் சிரிக்க மாட்டர்களா? அப்ப டிவோர்ஸ் எடுத்த, பொஞ்சாதி செத்த, இல்லாட்டி கலியாணமே கட்டாத ஆம்பிளைகளெல்லாம் என்ன செய்கின்றார்கள். அவனுக்குத் தெரியவில்லை. யாரிடம் கேட்பது என்றும் விளங்கவில்லை. மருத்துவ ஆலோசனை பெறலாம் என்று மனம் சொன்னாலும் அதற்கான துணிவும் அவனிடமில்லை. ஆனால் தன்னால் இதற்கு மேல் ஏலாது என்ற நிலையில அவன் தவிச்சுக் கொண்டிருக்கும் போது தான் ஆஷா அவன் வேலைத் தளத்திற்கு வந்து சேர்ந்தாள். முதல் பார்வையில் அவனுக்கு ஆ்ஷாவைப் பிடிக்கவில்லை. அவளின்ர உடுப்பும் எடுப்பும். உதுகள் உப்பிடி உடுப்புப் போட்டு அலையிறதாலதான் ஆம்பிளைகளின்ர மனம் அல்லாடுது. தமிழ் பெட்டை அதுவும் தன்ர டிப்பார்மெண்டில என்ற போது காந்தனுக்கு ஆவேசம் வந்தது.' ஆஷா வடிவாக இருப்பதும், உடுப்பதும் அவனுக்கு எரிச்சலைத் தந்தது. அவள் உடையில் எப்பவும் பிழை கண்டுபிடிக்க முனைந்து தனது மனதுக்கு திருப்தி தரும் விதத்தில் அதைக் கண்டு பிடித்தும் வந்தான். சாப்பாட்டு மேசையில் தேவையில்லாமல் ஆஷாவை இழுத்துக் கொச்சை படுத்தினான். இவ்வளவுக்கும் வெறும் "ஹெலோ" ஒன்றை மட்டும்தான் அவள் அதுவரை சொல்லியிருந்தாள்.

ஆஷா அவனைக் கடந்து போகும் நேரங்களில் வேண்டுமென்றே காணதுபோல் திரும்பிக் கொள்வான். ஒருநாள், வேலையில் சில சந்தேகங்களைக் கேட்க ஆஷா அவனிடம் வரவேண்டியிருந்தது. உடனே தன்னை முற்று முழுதாக மாற்றிக் கொண்டு அப்போதுதான் அவள் அங்கு வேலை செய்வதே தனக்குத் தெரிந்தது போல் மிகவும் இயல்பாகச் சிரித்த படியே "நீங்கள் சிறீலங்காவா? எந்த இடம்? எப்ப வந்தனீங்கள்?" போன்ற கேள்விகளை மிகவும் நட்போடு கேட்டு, "எப்ப உங்களுக்கு சந்தேகம் இருந்தாலும் தயங்காமல் என்னட்ட வாங்கோ, இங்க இருக்கிறதுகள் சரியான எரிச்சல் பிடிச்சதுகள் ஒண்டும் சொல்லித் தராதுகள்". என்று குரலைத் தணித்துச் சொன்னான். அதன் பின்பு தேவையில்லாத காரணங்களோடு அவளிருக்கும் இடத்துக்கு அடிக்கடி போய் வரத் தொடங்கினான். தான் செய்வது சின்னத்தனமாக இருப்பது போல அவனுக்குப் பட்டாலும் அதையும் சரிப்படுத்த தனக்கான காரணத்தைக் கண்டுபிடித்து தன்னைத் தானே சமாதானம் செய்தான். "அது சின்னப் பிள்ளை. என்ர மகளின்ர வயசிருக்கும். சும்மா எங்கட ஊர் பிள்ளை எண்ட அக்கறைதான்". இப்பிடி மனதுக்குள்ள ஒரு சின்னப் புலம்பல்.



ஒருநாள் சாப்பாட்டு நேரம் ஆஷா அவனிடம் வந்து, கிட்டடியில ஏதாவது நல்ல ரெஸ்ரோரண்ட் இருக்கிறதா சாப்பிட, என்று கேட்டாள். உடனேயே குரலைச் செருமி தனக்குத் தெரிஞ்ச அத்தின ரெஸ்ரோறண்டையும் அடுக்கி, இது நல்லா இருக்கும், இதில சாப்பாடு வாயில வைக்கேலாது என்று தான் வகை வகையாக ரெஸ்ரோரெண்டில் சாப்பிடுவது போல கையை அங்கும் இங்கும் ஆட்டி பாதை காட்டினான். "நீங்கள் சாப்பாடு கொண்டு வராட்டி வாங்கோவன் ஒரு நல்ல ரெஸ்ரோறண்டில போய் லன்ஜ் எடுப்பம்" என்றாள் ஆஷா. காந்தன் முதலில் கொஞ்சம் திடுக்கிட்டு பிறகு சிரித்த படியே "இல்லை நான் கொண்டு வந்திருக்கிறன். பிறகு ஒருநாளைக்குப் பாப்பம்" என்ற போது அவனின் கைகள் குளிந்து போயிருந்தன. தன்னுடைய பதில் அவனுக்குத் திருப்தியாக இருந்தது. நாற்பது வயதில் படியேறக் கால் நோகுது என்று சொல்லி டைனிங் ஹோலில் கட்டில் போட்டு இரவு ஒன்பது மணிக்கே தேவராப் புத்தகத்தை கையில் பிடித்து முணு முணுக்கும் கௌரி தனக்கு மனைவியாய் வந்திருந்தாலும் தன் மனம் அலையவில்லை என்று தன் மீதே அவன் பெருமை கொண்டான். ஆஷா "ஓகே" என்று விட்டுப் போய் விட்டாள். காந்தன் அங்குமிங்கும் பார்த்து விட்டுத் தன்னைக் குனிந்து பார்த்தான். அவனுடைய சேட் கொஞ்சம் கசங்கியிருப்பது போலவும் பாண்ஸ்சிற்கு அவ்வளவாக பொருத்தாதது போலவும் இருந்தது. அதற்குப் பிறகு அவசரமாக ஆறு சோடி உடுப்பு வாங்கிவிட்டான். இரண்டு தரம் ஆஷாவோட சாப்பிடவும் போய் வந்தான். ஒரே வேலைத்தளத்தில் வேலை செய்யும் இரண்டு பேர் கஸ்சுவலாக சாப்பிடப் போகின்றார்கள். தன் மனதுக்கு சமாதானம் சொல்ல அவன் கண்டுபிடித்த வசனம் இது. காந்தனின் நடையில் இப்போது ஒரு துள்ளலும், கதையில் கொஞ்சம் அவசரமும் கலந்து கொண்டது.

இப்ப பிள்ளைகள் என்ன கேட்டாலும் கேள்வி கேட்காமல் வாங்கிக் குடுக்கிறான். தனக்குள் இருக்கிற குற்ற உணர்வைப் போக்க தான் பிள்ளைகளுக்குக் குடுக்கும் லஞ்சம் அது என்று அவனுக்கு விளங்கினாலும், அதை மறுத்தான். பிள்ளைகளுக்குத் தேவையிருக்குது அதால கேக்கின்றார்கள். நான் உழைக்கிறேன் வாங்கிக் குடுக்கிறேன். அவ்வளவுதான். "வேலையிடத்தில புறொமோஷன் ஒண்டு கிடைக்கும் போல இருக்கு அதால கொஞ்சம் நீட்டா இருக்க வேணும் நேரத்துக்குப் போக வேணும், லேட்டானாலும் நிண்டு வேலைய முடிச்சிட்டு வரவேணும்" என்று ஒருவரும் கேட்காமலே சாப்பாட்டு மேசையில் அடிக்கடி சொல்லத் தொடங்கினான்.



படிப்பகம்

www.padippakam.com

இப்பவெல்லாம் கௌரி தனிக்கட்டிலில்ல கீழே படுக்கிறது அவனுக்குச் சாதகமா இருந்தது. இரவு வேண்டிய நேரம் வரை ஆஷாவோட கற்பனையில் சல்லாபிக்க முடிந்தது. தலாணியை எடுத்து ஆஷா, ஆஷா என்று அளைய முடிந்தது. "ஒரு நல்ல இங்லீஷ் படம் வந்திருக்கு உங்களுக்கு ரைம் இருந்தா வெள்ளிக்கிழமை இரவு போவமா?" என்று ஆஷா அவனைக் கேட்ட போது காந்தனின் துடைகள் இரண்டும் நடுங்கி ஆடியது. இது "அது தான் என்ற முடிவை அவன் அப்போதுதான் நிச்சயம் செய்து கொண்டான். வெள்ளிக்கிழமையா.." என்று இழுத்து யோசித்து. தான் அதிகம் யோசித்தால் ஆஷா வேண்டாம் என்று சொல்லி விடக் கூடும் என்ற பதட்டத்துடன்.

ம்..எனக்கு ஒரு வேலையுமில்லை. அக்ஸ்சுவலி.. அண்டைக்கு கௌரியும் பிள்ளைகளும் கோயிலுக்குப் போகீனம். நான் ப்ரியா இருப்பன். ப்ரெண்ஸ் ஆரேடையாவது எங்கையாவது போகலாம் எண்டு நினைச்சிருந்தனான். லுக் இப்ப நீங்களாவே கேட்டிட்டீங்கள்.. நான் வாறன்" என்றான். ஆஷா "தாங்க்ஸ்" என்று விட்டுப் போய் விட்டாள். தான் கொஞ்சம் கூடுதலா வழிந்து விட்டது போல் அவனுக்குப் பட்டது. எவ்வளவு வடிவாப் பொய் சொல்லுறன் என்று தன் மேல் பெருமை கொண்டான். அவன் மனதில் படம் பார்க்கும் அந்த வெள்ளி இரவு படமாய் விரிந்தது. படம் பார்க்கும் போது அவளின் உடம்பில் தான் முட்டாத மாதிரி இருக்க வேணும். ரிக்கெட் தான் தான் எடுக்க வேணும். குடிக்க சாப்பிட ஏதாவது வாங்க வேணும். இங்கிலீஸ் படமெண்டா கட்டாயம் ஏதாவது ஏடா கூடமா காட்சி வரும் அந்த நேரம் நெளியாமல் நல்ல இறுக்கமா இருக்க வேணும். படம் முடிய சாப்பிடப் போகக் கேக்கலாம். கம் பக்கெட் ஒண்டு வாங்க வேணும். ஒரு வேளை அவளா கைய கிய்யப் போட்டால் என்ன செய்யிறது. அவனுக்கு உடம்பு கூசியது. அந்தக் கூச்சம் சுகமாக இருந்தாலும் பயமா இருந்தது. அவசரப்பட்டு இடம் கொடுத்து பிறகு ஏதாவது பிரச்சனையில மாட்டீட்டா. திடீரெண்டு அவனுக்குப் பயம் வந்தது. வடிவா இளமையா இருக்கிறாள். எதுக்காக என்னோட இப்பிடிப் பழகிறாள். காசு கீசு அடிக்கிற யோசினையோ? இல்லாட்டி வீக்கான பெட்டையாக்கும், உப்பிடி எத்தின பேரோட பழகீச்சோ.. வேலையெண்டு போற போற இடமெல்லாம் ஒண்டை வைச்சிருக்குமாக்கும். ஏதாவது வருத்தம் இருந்து எனக்கு வந்திட்டா.. இவ்வளவும் அவனின் மனதுக்குள் உருண்டாலும்.. எல்லாத்தையும் தள்ளி விட்டு என்னை அவளுக்குப் பிடிச்சிருக்கு அதுதான் உண்மை.



வேற ஒண்டுமில்லை. வேற ஒண்டாவும் இருக்க ஏலாது என்று முற்றுப்புள்ளி வைச்சான். எனக்கும் அவளைப் பிடிச்சிருக்கு.

வெள்ளிக்கிழமை வேலை முடிய ஆஷா அவனைக் கூட்டிக்கொண்டு "புளோர்" சினிமாக்குள் நுழைந்தாள். சனம் மிகக் குறைவாகவே இருந்தது. ஆஷா வேணுமென்றே சனமில்லாத தியேட்டரைத் தெரிவு செய்திருக்கிறாள் என்று காந்தனுக்குப் பட்டது. அவன் முகம் சிவந்து உணர்வுகள் அல்லாடத் தொடங்கியது. இந்த அளவிற்கு வந்தாகிவிட்டது. இனி நிச்சயமாக அடுத்தது அது வாகத்தான் இருக்கும். அதுக்காக அவன் எவ்வளவு காசோ நேரமோ செலவிடத் தயாராகவிருந்தான். தனக்கு கௌரி மேல் காதல் இல்லாமல் போய் விட்டதை நினைக்கும் போது அவனுக்கு வேதனையாகவிருந்தாலும் தான் தொலைத்து விட்டதாக நினைத்திருந்த இளமை திரும்பிவந்துவிட்டதென்பதை நினைக்கும் போது வாழ்கை என்பதே அனுபவிப்பதற்காகத்தான் அதை அனுபவிப்பது குற்றம் அற்றது என்று தன்னைத் தேற்றிக் கொண்டான்.

ஆஷா படத்திற்கு டிக்கெட்களை எடுத்து விட்டு படம் தொடங்க நேரம் இருப்பதால் கோப்பி குடிக்கலாம் என்றாள். கோப்பி குடித்த படியே பல கதைகளையும் கதைத்துக் கொண்டிருந்தவள் தான் தனியாக ஒரு அப்பாட்மெண்டில் இருப்பதாகவும் ஒரு நாளைக்கு கௌரியையும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தன்னுடைய அப்பாட்மெண்டிற்கு சாப்பிட வரும் படியும் கேட்டாள். காந்தன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான். தான் தனியாக இருப்பதைச் சொல்லி என்னை அங்கே சாப்பிடக் கூப்பிட விரும்புகிறாள், அதை நேரடியாகச் சொல்லக் கூச்சப்பட்டு குடும்பத்தோடு வரும்படி கேக்கிறாள். நல்ல கெட்டிக்காறிதான் என்று நினைத்துக் கொண்டான்.

காந்தன் மௌனமாக இருந்தான். ஆஷா கோப்பியைக் குடித்த படியே அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு ஒரு பெருமூச்சை விட்ட படியே "எனக்கு இப்ப முப்பத்திரெண்டு வயசாகுது என்ர வாழ்கைய எப்பிடி அமைச்சுக் கொள்ள வேணுமெண்டு எனக்குத் தெரியும்தானே, நான் முந்தி அண்ணா அண்ணியோடதான் இருந்தனான். பிறகு ஒத்து வரேலை அதால தனிய ஒரு அப்பாட்மெண்ட் எடுத்து இருக்கிறன்" என்றாள். காந்தன் சின்னதாகச் சிரித்தான் இதற்கு என்ன சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆஷாவே தொடர்ந்தாள். "அவேலுக்கு நான் கலியாணம் கட்ட வேணும் பிள்ளைப் பெறவேணும், அவேலில பிழையில்லை எங்கட ஆக்களுக்குத் இதைத் தவிர வேற



படிப்பகம்

www.padippakam.com

என்ன தெரியும்" என்றாள் அலுப்போடு. காந்தனுத்தான் தான் ஏதாவது பிழையாகச் சொல்லி விடுவேனோ என்ற பயம் வர அதே சின்னச் சிரிப்பைத் தொடர்ந்தான். "நான் நினைக்கேலை நான் கலியாணம் கட்டுவனெண்டு லிவிங் டு கெதர் இஸ் ஓக்கே வித் மீ.. ஆனால் எனக்கு நல்லாப் பிடிச்ச ஆளா இருக்கோனோம் அதுக்குத்தான் வெயிட்டிங்" என்றாள் சிரித்த படியே.

காந்தனுக்குக் குழப்பமாக இருந்தது. தான் என்ன சொல்ல வேண்டும் என்ற தெளிவு அவனுக்கு வரவில்லை. ஆனால் தன் முகத்தில் மாற்றம் வருவது அவனுக்கு விளங்கியது. அதை அவள் கவனித்து விடக்கூடாது என்பதில் கவனமாகவிருந்தான். கதையை வேறு பக்கம் திருப்ப "படத்துக்கு இன்னும் எவ்வளவு நேரமிருக்கு" என்றான். ஆஷா நேரத்தைப் பார்த்து விட்டு "அரை மணித்தியாலத்துக் கிட்ட இருக்கு வேணுமெண்டா உள்ள போயிருப்பம்" என்றாள்.

உள்ளே அங்கொன்றும் இங்கொன்றுமானச் சிலர் இருந்தார்கள். இருந்தார்கள். "என்ன படம் இது சனத்தைக் காணேலை" என்றான் காந்தன் சந்தேகத்தோடு.

"ஓ இது ஹொலிவுட் படமில்லை தியேட்டர் நிரம்பிறதுக்கு, இது ஒரு டொக்குமென்ரி, உங்களுக்கும் பிடிக்குமெண்டு நினைக்கிறன்" ச் என்று தலைய ஆட்டியவள் "என்ர ப்ரெண்ஸ் ஒண்டும் வரமாட்டுதுகள் எண்டிட்டுதுகள்", என்று விட்டு "நான்ஜிங்" எண்டு ஜப்பான் சைனாவைப் பிடிச்சு செய்த அநியாயத்தையெல்லாம் டொக்குமென்றியாக்கியிருக்கிறாங்கள்.. நான் ரிவியூ வாசிச்சனான்.. வாசிக்கவே நெஞ்சுக்க ஏதோ செய்துது.. எனக்கு இப்பிடி டொக்குமென்ரீஸ் எண்டா நல்ல விருப்பம். அவங்கள் செய்த அநியாயம் கேள்விப்பட்டீங்களோ தெரியாது.. பாத்தீங்கள் எண்டாத் தெரியும்.. எங்கட நாட்டிலையும் இதுதானே நடக்குது. போரால பாதிக்கப்படுறது பொம்பிளைகளும் குழந்தைகளும்தான் நினைச்சாலே வேதனையா இருக்கு" என்றாள். காந்தனுக்கு இந்த நேரத்தில் தான் ஏதாவது சொல்வது தனது கடமை என்று பட்டது. "அதை நினைச்சாலே சரியான வேதினை தான் ம்.. என்ன செய்யிறது எங்கட கைய மீறின அலுவல் எங்களால கவலைப் படத்தான ஏலும்" என்றான். கொஞ்ச நேரம் மௌனமாக இருந்த ஆஷா "செக்ஸ் எண்டு வந்திட்டா இந்த ஆம்பிளைகளுக்குக்கெல்லாம் கண்மண் தெரியிறேலை.." முகம் சிவக்க சொன்னவள், காந்தன் திடுக்கிட்டதைக் கண்டு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "ஐ ஆம் ஸொறி" என்றாள், பின்னர் தானாகவே "இந்த வோர், அதால பாதிக்கப்படுகிற பொம்பிளைகள்.. தீஸ் மென் ஆர் அனிமல்ஸ்" என்றாள்.. திரும்பவும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "நீங்கள் ஜென்ரில்மென். நான் மீட் பண்ணின நல்ல சில ஆம்பிளைகளுக்க நீங்களும் ஒராள்".. என்றாள் சிரித்த படியே.. படம் ஆரம்பித்தது. **ஒரு சைனீஸ் சிறுமியின் உடைகளைக் களைந்து விட்டு அவளை கதிரையில் கால்களை அகல விரித்து இருக்குமாறு துவக்கைக் காட்டிப் பணிந்த ஷப்பானிய இராணுவவீரன் சிரித்துக் கொண்டிருந்தான் திரையில்..**




படிப்பகம்

www.padippakam.com

# மூளி

**தி**ரும்பவும் ஒருமுறை இறுக்கத் தட்டி விட்டு காத்துக்கொண்டிருந்தேன். காத்திரமான மர நிறக்கதவின் பொன்நிற "6" இலக்க வட்டத்தில் அமைந்திருந்த கண்ணாடிக்குமிழில் உருவம் ஒன்று அசைவது தெரிந்தது. பின்னர் கதவு திறந்தது.

"வாரும்" குழம்பிய தலையோடு கண்களைக் கூசிப் பார்த்தபடியே மாமி கூப்பிட்டார்.

"நித்திரையா இருந்திருக்கிறீங்கள் போல குழப்பீட்டனே" போன் அடிச்சிட்டு வந்திருக்கலாம்..

"ச்சீ அதெல்லாம் இல்லை சும்மா படுத்துக்கிடந்தனான்.. நீர் உள்ளுக்க வாரும்" கதவை முழுவதுமாகத் திறந்து பிடித்தார். முகத்தில் சோகத்திற்குள்ளும் ஒரு சந்தோஷம் தெரிந்தது. அது நான் வந்ததினால் இருக்கலாம்.

"சொறி மாமி என்னால பியூன்றலுக்கு வரமுடியேலை அதுதான்" கொண்டு சென்ற இடியப்பத்தைக் கொடுத்த படியே மாமியைக் கட்டிப் பிடித்தேன். என்னை அறியாமலே கண்கள் கலங்கின. என்னை நினைக்க எனக்கே வினோதமாக இருந்தது.

"எனக்கு அவையள் ஒருத்தரையும் வடிவாத் தெரியாது அங்க போய் நான் என்ன செய்ய" நான் அடம்பிடிக்க "மனுசீட்ட அப்பம் வாங்கித்



திண்டனி எல்லே, நன்மைக்குப் போகாட்டியும் பறவாயில்லை இப்பிடியான நேரங்களில போனால் அவவுக்கு ஒரு ஆறுதலா இருக்கும் வீட்டையாவது ஒருக்கா போ" அம்மாவின் கட்டாயத்தில் வந்திருக்கிறன்.

நினைத்திருந்தால் செத்தவீட்டிற்குப் போயிருக்கலாம். ஆனால் போகவில்லை. மாமியைப் பெரிதாக எனக்குத் தெரியாது. என் வீட்டுக்கு எதிர்த்த கட்டிடத்தில் இருப்பதால் ரோட்டில் கண்டு கதைத்துப் பழக்கம். ஒன்று ரெண்டு முறை தான் சுட்டது எண்டு அப்பம் கொண்டு வந்து தந்திருக்கிறார். நானும் பழங்கள் வாங்கிக் குடுத்திருக்கிறன். அவ்வளவுதான் எங்கட உறவு.

"அதுக்கென்ன இப்ப வந்திருக்கிறீர் தானே.. அதே போதும்" சொன்ன மாமி இடியப்பத்தை வாங்கிய படியே, "இதெல்லாம் என்னத்துக்கெடா, நான் ஒராள் என்னத்தை பெரிசா சாப்பிடப் போறன்" இடியப்பத்தைக் கொண்டு போய் குசினிக்குள் வைத்துவிட்டுத் திரும்பினார்.

சுவரில் அங்குமிங்குமாக சாமிப்படங்கள். ஒரு பக்கச் சுவரில் குடும்பப் படம் ஒன்று, திருமணநாள் படம் ஒன்று, மூத்த மகனின் தனிப்படம், அடுத்த சுவரில் மாமாவின் பெரிய படம் சந்தனம், குங்குமம், மாலை என்று தொங்கிக் கொண்டிருந்தது. மூலையில் இருந்த மேசையில் மாமாவின் சின்னப் படம் வைக்கப்பட்டு அதற்கு முன்னால் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

"இருமன் நிக்கிறீர்" மாமி சாப்பாட்டு மேசைக்கு முன்னால் இருந்த கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு இருந்தார். நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். இருப்பதற்கு பெரிதாக கதிரைகள் இல்லை. ஒரு பழைய மூன்று பேர் இருக்கக் கூடிய சோபா ஒன்று துணி போர்க்கப்பட்டு இருந்தது அதன் முக்கால் பகுதியும் புத்தகங்கள் பரவிக்கிடந்தன. நான் ஒரு மூலையில் இருந்து கொண்டேன்.

மாமாக்கு எண்பதைத் தாண்டீற்றுது. அவருக்குப் பலவித வருத்தங்கள். கனகாலமா கண்பார்வையும் தெரியாமல் படுக்கையில் கிடந்து புலம்பிக் கொண்டிருந்தார். ஆஸ்பத்திரியில் வைத்திருந்து பிரயோனம் இல்லை என்று வைத்தியர்கள் கைவிரித்ததால் மாமியின் விருப்பத்துக்காய் வீட்டிற்குக் கொண்டு வந்து தாதிகளின் உதவியுடனும், பிள்ளைகளின் உதவியுடனும் மாமி மாமாவைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டார். முதல் ஒரு கிழமையாகச் சொந்தங்கள், நண்பர்கள் எண்டு அடிக்கடி ஆக்கள் வந்து போனார்கள் பின்னர் பிள்ளைகள் கூட தமக்கு நேரம் கிடைக்கும் போது மட்டும் வந்து போகத் தொடங்கினார்கள். கடைசியில் இவர் எப்ப சாவார் எண்டு நினைக்கிற அளவுக்கு மாமா ஒரு சுமையாகிப் போனார். மாமி மட்டும் ஒண்டையும் பொருட்படுத்தாமல்



படிப்பகம்

www.padippakam.com

தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தார். முழுகி விரதமிருந்து ஒவ்வொரு நாளும் கோயிலுக்கு மூண்டு நேரப் பூசைக்கும் போய் மாமாவையும் பார்த்துக் கொண்டார்.

இனி என்ன கதைக்கிறது எண்டு எனக்குத் தெரியவில்லை. வேலைக்குப் போற வழியில வந்திருக்கிறன். கொஞ்ச நேரம் இருந்திட்டுப் போகலாம் எண்டது என்ர எண்ணம்.

"ரீ போட்டாக் குடிப்பீரே" மாமி கேட்டார்.

"வேண்டாம் மாமி நான் இப்பதான் சாப்பிட்டனான்" மாமி நேரத்தைப் பாத்தார். பின்னேரம் நாலு மணி. சிரித்த படியே,

"துடக்குத்தானே பரவாயில்லை பிறகு ஒருநாள் வந்து குடியும்"

"இல்லை அதில்ல மாமி உங்களுக்கு ஏன் வீணாக் கஷ்டம் எண்டு அதுதான்" அந்தரமாக இருந்தது.

"இல்லை நான் எனக்குப் போடப்போறன் அதுதான் கேட்டனான், அப்ப உமக்கு ஜூஸ் ஏதும் தரட்டே? அது துடக்கில்லைத் தானே குடிப்பீரோ?" திரும்பவும் அதே தொனியில் கேட்டார்.

"யூஸ் வேண்டாம் ரீயே தாங்கோ.. நானே போடுறன்" எழும்பினேன்.

"இல்லை இல்லை இல்லை நீர் இரும் உடுப்பு ஊத்தையாப் போயிடும், நான் போடுறன்" மாமி அவசரமாக எழும்பிக் குசினிக்குள் போனார். நான் பின்தொடர்ந்தேன்.

பெரிய பழக்கமில்லாட்டாலும் ஏதோ நல்லாப் பழகியவர்கள் போல எனக்குள்ளும் மாமிக்குள்ளும் ஒருவித பிடிப்பு இருப்பது போல் பட்டது.

"அப்ப மாமி நீங்கள் தனியத்தான் இருக்கப் போறீங்களோ இல்லாட்டிப் பிள்ளைகள் யாரோடையும் போய் இருக்கப் போறீங்களோ?" கேட்ட பிறகுதான் தேவையில்லாத கேள்வி போல பட்டது. மாமி பாலை ஊத்தி அடுப்பில் வைத்த படியே இயல்பாக,

"பிள்ளைகள் வரச்சொல்லித்தான் கேக்குதுகள் நான்தான் இன்னும் முடிவெடுக்கேலை.. கொஞ்ச நாள் போகட்டும் யோசிப்பம்"

தண்ணீர் கொதித்து கேத்தில் விசில் அடித்தது. மாமி கேத்திலையே பாத்துக் கொண்டு நிண்டார். மாமி எதையோ யோசிக்கிறார் எண்டு எனக்குள் விளங்கச் சங்கடமாக இருந்தது. தேவையில்லாமல் எதையோ ஞாபகப்படுத்தீட்டன் போல,

"மாமி தண்ணி கொதிச்சிட்டுது" மாமியை மீட்டெடுத்தேன். அவர் என்ர முகத்தைப் பார்த்துச் சொன்னார்



"எனக்குப் பிள்ளைகளோட ஒத்து வருமோ தெரியேலை" அதுக்கான பதில் தெரியாமல் நான் நெளிந்து கொண்டு சிரித்தேன்.

"இல்லைப் பிள்ளை என்ர பிள்ளைகள் அருமையானதுகள். என்னை நல்லா வைச்சுப் பாக்குங்கள், ஆனால்..." எண்ட படியே பாலை சாயத்துக்குள் விட்டுக் கலந்தார். இப்ப எனக்கு ஆர்வமாக இருந்தது.

"ஆனால் மாமி என்ன பிரச்சனை?" எண்டேன்.

"அதுகள் ஒண்டுக்கும் கடவுள் நம்பிக்கை இல்லை.. எல்லாத்துக்கையும் எல்லாத்தையும் போட்டுச் சமைக்குங்கள்.. எனக்கு ஓங்காளிக்கும், சொன்னனெண்டா அவையளுக்கு ஒரு சிரிப்பு" எனக்கும் சிரிப்பு வந்தது. சந்தோஷமாயும் இருந்தது. மாமி கஷ்டப்படப் போவதில்லை.

"என்ன மாமி நீங்கள் புறிம்பா ஒரு பாத்திரத்தை வைச்சுச் சமையுங்கோவன்" மாமி என்னை வினோதமாகப் பாத்தபடியே தேத்தண்ணிக் கப்பை நீட்டினார். நான் புருவங்களை உயர்த்தி பிழையோ என்பது போல் முகத்தைப் பிடித்தபடியே கப்பை வாங்கிக் கொண்டு மாமியைத் தொடர்ந்தேன். திரும்பவும் இருந்து கொண்டோம்.

"ஒரு குசினி, ஒரே அடுப்பு இஞ்சால மீன் பொரியேக்க அங்கால நான் மரக்கறி சமைச்சா சரியாயிடுமோ?" ஓ இதுதானோ பிரச்சனை.. எனக்குப் பதில் தெரியவில்லை.. பேசாமல் தேத்தண்ணியை உறிஞ்சினேன். அந்த நேரத்திற்கு அது அற்புதமாக இருந்தது. மாமி ஒரு தட்டில பகோடா கொஞ்சம் கொண்டு வந்து வைத்தார்.

"யாராவது வந்தால் குடுக்கலாம் எண்டு வாங்கி வைச்சிருக்கிறன்.. எனக்குப் பொக்கை வாய் சப்பேலாது" சிரித்தார், நானும் சிரித்தேன்.

அடுத்து என்ன கதைப்பது? செத்தவீடுகளுக்கு எண்டு கதைக்க ஏதாவது தனியாக இருக்குமோ? சந்தோஷமான விஷயங்களைக் கதைக்கலாமா? எனக்கு செத்தவீடுகளுக்குத் தனியாகப் போய் பழக்கமில்லை. என்ன கதைப்பது எண்டு தெரியேல்லை. சும்மா ஒரு கடமைக்காய் "கட்டிலோட கிடந்து வேதனைப் படாமல் மாமா போனது நல்லது எண்டு நினையுங்கோ மாமி" மாமாவின் இறப்பிற்கு அர்த்தம் சொல்லி சரியாகக் கதைத்து விட்டேன் என்று பட்டது.

"உதைத்தான் எல்லாரும் சொல்லீனம்? என்னெண்டாலும் அவர் உயிரோட இருக்கிற மாதிரி வருமே?" ஓ திரும்பவும் பிழையாய் கதைச்சிட்டன். அப்ப நான் இனி என்ன கதைக்க பேசாமல் செத்தவீட்டுக்கே போய் இருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

ஊரை மாதிரி இல்லாமல் கனடாவில் அனேகமாக எல்லாரும் உடல் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிற நேரம் நேராக மண்டபத்துக்குப் போய் பார்த்து விட்டு வந்து விடுவார்கள். செத்தவீடு கூட ஒரு ஒழுங்கான நிகழ்வு போல நடந்து முடியும். ஒப்பாரி, கத்தி அழுவது ஒண்டும் கிடையாது. நல்ல நெருங்கின சொந்தங்கள் மட்டும் முன் இருக்கைகளில் இருந்து கொண்டு சத்தமில்லாமல் மூக்கை உறிஞ்சிக் கண்ணீர் வடித்து, ரிசூக்களால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருப்பார்கள். போவோரும் வரிசையில் மெல்ல மெல்ல நகர்ந்து பார்வைக்காக இருக்கும் உடலைப் பார்த்து, உறவுகளைக் கட்டி அணைத்து விட்டுப் போய் இருக்கையில் இருந்து கொள்ளுவார்கள். தேவாரங்கள் பாடப்படும், இறந்தவரின் சிறப்புப் பற்றி யாராவது உரையாற்றுவார்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு இருந்து விட்டு வந்தவர்கள் சத்தம் போடாமல் மெல்ல எழும்பிப் போவார்கள். அவர்களுக்கான அடுத்த வேலை எங்கேயோ காத்துக்கொண்டிருக்கும்.

நான் நேரத்தைப் பார்த்தேன். இன்னும் கொஞ்ச நேரத்தில இறங்கினால் வேலைக்கு நேரத்துக்குப் போய் சேந்திடலாம். நான் நேரத்தைப் பார்த்ததை மாமி கண்டிட்டு "என்ன போப்போறீரே? நேரம் போட்டுதே" அவரின் கேள்வியில் ஏக்கம் இருந்தது. நான் போய் விட்டால் மாமி திரும்பவும் தனியே விடப்படுவார். திரும்பவும் அவர் போய்ப் படுத்துக் கொள்ளலாம்.. எனக்குள் ஒரு அசௌகரியம் ஏற்பட்டது. நான் என்ன செய்வது? வேலைக்குப் போகவேணும். மாமி இப்பிடித் தனிய இருக்காமல் பிள்ளைகளோட போய் இருக்கிறதுதான் நல்லது. ஆனால் யார் அதைச் சொல்லுறது? எனக்கு ஏன் தேவையில்லாத வேலை. இண்டைக்குப் போயிட்டா நான் இனி எப்ப மாமியைப் பாப்பனோ? ஒருவேளை பார்க்காமலேயே போகலாம். சும்மா எதையாவது சொல்லிக் குழப்பாமல் இன்னும் கொஞ்ச நேரம் எதையாவது கதைச்சிட்டுப் போவம்.

"தமிழ் ரீவி இல்லையோ மாமி?" கதையைத் திசை திருப்பினேன்.

"இருக்குது சிலநேரம் பாப்பன். அதில என்னத்தைப் போடுறாங்கள்? நெடுகலும் அதை எப்பிடிப் பாத்துக்கொண்டு இருக்கிறது" மாமியின் கதைகள் விரக்தியாய் விழுந்தது. நான் சோபாவில் கிடந்த குமுதத்தை எடுத்துப் பிரட்டினேன்.

"உதுகள் ஒண்டும் நான் வாசிக்கிறேலை.. மகள் கொண்டு வந்து வைச்சிட்டுப் போயிருக்கிறாள். யாராவது வந்தால் சும்மா ஒருக்காத் தட்டிப்பாப்பினம், நான் தேவாரப்புத்தகங்கள் தான் படிக்கிறனான், மனசுக்கும் ஒரு ஆறுதல் தேவையெல்லே" எனக்கு இனிப் போனால் போதும் எண்டு பட்டது.

"அப்ப சரி மாமி நான் வேலைக்குப் போக வேணும் நேரம் போகுது.. இன்னுமொருநாள் வரட்டே" எழும்பினேன். வரப்போவதில்லை என்பது எனக்குத் தெரியும், ஆனால் இப்போது போனால் போதும் என்பதுக்காய் எழுந்த குற்ற உணர்வைக் குறைக்க சொன்ன வார்த்தைகள் அது என்பது எனக்கும் தெரியும்.

"சரி உமக்கும் கனக்க வேலை இருக்கும். ஒருநாள் ஆறுதலா வாரும் கதைப்பம் என்ன?" சொன்னபடியே என்னைத் தொடர்ந்து கதவடிக்கு வந்தவர் தயங்கிய படியே "பிள்ளை உம்மட்ட ஒரு உதவி கேட்டாக் கோவிக்க மாட்டீரே" கண்களைக் கூசியபடியே மாமி கேட்க எனக்குக் கைகள் குளிர்ந்து போனது.. எனக்கு மாமியைப் பிடிக்குதா பிடிக்கேலையா என்பது கூட விளங்கவில்லை.. பாவமாக இருந்தது.

"கேளுங்கோ மாமி" எண்டன்.

சிரித்தபடியே "பிள்ளைகளுக்குத் தெரிஞ்சாக் கொண்டு போடுவாங்கள்.. நான் ஒரு பால் பெட்டி தாறன் துர்க்கை அம்மன் கோயிலில குடுத்து விடுறீரெ" கைகளை பிசைஞ்சு கொண்டு கேட்டார்.

"அதுக்கென்ன மாமி பரவாயில்லை தாங்கோ போற வழிதானே" சொன்ன படியே குசினிப் பக்கம் போனேன்.

"கொடியேறீட்டுது.. முந்தியெண்டா மூண்டு நேரம் போய் நிண்டு ஐயாவுக்குப் பூசைக்குத் தேவையான உதவியெல்லாம் செய்வன். பூசைச் சாமான்கள் ஒழுங்கு செய்து தட்டுத் தூக்கிக் குடுக்கிறதும் நான்தான்.. பாத்திருப்பீர் எண்டு நினைக்கிறன்" நான் சங்கடப்படுவதைக் கண்டிட்டு,

"கோயிலுக்குப் போறேலைப் போல ஆ.. இப்பத்தையான் பிள்ளைகள் எல்லாம் இப்பிடித்தான், என்ர பிள்ளைகளே இப்பிடி இருக்கேக்க உம்மை நான் என்ன சொல்லுறது"

நான் சிரித்த படியே,

"அதில்ல மாமி எங்க நேரம் கிடைக்குது" சொன்ன படியே திரும்பவும் நேரத்தைப் பார்த்தேன்.

"நான் தந்து விட்டதெண்டு சொல்லாதேம், துடக்கெண்டு பாலை அபிசேகத்துக்குச் சேக்காமல் விட்டாலும் விட்டுவார் ஐயா, எனக்கெதோ குறையாக் கிடக்குது அதுதான்"

"என்ன மாமி இது? எல்லாமே கடையில வாங்கிற பால்தானே பிரச்சனை இல்லை தாங்கோ" வாங்கிக் கொண்டேன். திரும்பவும் ஒருமுறை மாமியைக் கட்டிப்பிடித்து "யோசிக்காதேங்கோ மாமி எல்லாம் நல்லபடி நடக்கும்" சொன்ன படியே கதவடிக்கு வந்தேன். கதவைத் திறந்து விட்டவர்



படிப்பகம்

www.padippakam.com

“போட்டு வாரும்” என்றார்.

“சரி மாமி பிறகு கதைக்கிறன்” போக வெளிக்கிட்ட என்னிடம்

“நான் இப்பிடி நினைக்கக் கூடாதுதான், அவர் சரியாக் கஷ்டப்பட்டவர். இருந்தாலும், சும்மா ஒரு மரக்கட்டை மாதிரி மூலையில கிடந்தார் எண்டா நான் கோயிலுக்கு பூவும், பொட்டோடையும் போய் பூசையில கலந்திட்டு வந்திடுவன்.. இனி என்னைத் தட்டுத்தூக்க ஐயா விடமாட்டார் என்ன?” மாமி கண்கள் கலங்க கேட்டார்.

நான் கொஞ்ச நேரம் மாமியையே பார்த்தபடி நின்று விட்டு நடக்கத் துடங்கினேன்.



# உறையும் பனிப்பெண்

வீட்டின் முன் மரக்கதவைத் திறந்தவுடன் ஒரு சின்ன ஹோல். அதன் இடப்பக்கத்தில் சாப்பாத்துகளை அடுக்கி வைப்பதற்கான வேலைப்பாடுகளுடன் சேர்ந்த மரத்தாலான சிறிய அலுமாரி. வலப்பக்கம் விருந்தினர்கள் ஜக்கெட்டைக் கழற்றி வைப்பதற்காக நான்கு கண்ணாடிகளைக் கொண்ட க்ளோசட். இவற்றைக் கடந்து மரத்தாலான வளைந்து செல்லும் படிக்கட்டுக்கள் படுக்கை அறைக்கு எடுத்துச் செல்லும். சின்ன ஹோலை அடுத்து, ஒரு சிறிய அறை. அதை பார்த்த உடனேயே அம்மா சொல்லி விட்டாள் இது சாமி அறை என்று. அடுத்து நீள் சதுரத்தில் பெரிய சாப்பாட்டு அறை. அதை அடுத்த நவீன வசதிகளுடன் கூடிய குசினி, குசினிக்கு எதிர்ப்பக்கம் சின்னதாக ஒரு சாப்பாட்டு அறை, அதை அடுத்து சிட்டிங் ஹோல் செங்கல்லால் ஆன குளிரூட்டியால் அழகு படுத்தப்பட்டிருந்தது. அதனைக் கடந்து முன்பக்கத்தைப் பார்த்த படி ஒரு பெரிய சிட்டிங் ஹோல். மேல் தளத்தில் நான்கு அறைகள் விசாலமான யன்னல்களுடன் அடுக்கடுக்காய், அதற்கு எதிர்ப்பக்கத்தில் நீண்ட மாஸ்டர் பெட்ரூம். இதுதான் உமக்கும் எனக்கும் என்று ராஜன் தனது கையால் கலாவின் இடுப்பைக் கட்டிப்பிடித்துச் சொன்னான். கலா முழங்கையால் அவனை இடித்துத் தன்னை விடுவித்துக் கொண்டாள். இவற்றோடு நிலக்கீழ் அறை தடுப்புகள் இல்லாமல் விசாலமாக விரிந்து கிடந்தது. இந்தளவு பெரிய வீடு எமக்குத் தேவைதானா



படிப்பகம்

www.padippakam.com

என்ற கேள்வி கலாவிற்கு எழுந்தாலும் ஆறு அங்கத்தவரைக் கொண்ட குடும்பம் வசதியாக வாழ இப்படியான வீடு தேவைதான் என்றும் பட்டது.

முந்தைய வீடு சின்னதாக இருக்கிறதென்று ஐந்து பெரிய அறைகளையும், பெரிய பின் தோட்டத்தையும் கொண்ட வீடு ஒன்றை மார்க்கத்தில் வாங்கிப் போயாகி விட்டது. மார்க்கத்தில் வாங்கும் போது தமிழர்கள் அதிகமில்லாத சுற்றத்;தில் வீடு வாங்கி விட்டதான பெருமை

ராஜனுக்கு நிறையவே இருந்தது. காலபோக்கில் மார்க்கம் தமிழர்களின் முக்கிய குடியேற்றமானதில் அவனுக்கு வருத்தம் அதிகம். அயலவர்கள் தமிழர்களாக இல்லாத சுற்றத்தில் வாழ்வது தனி மதிப்பைக் கொடுப்பதாக நினைக்கும் தமிழர்களி;ல் அவனும் ஒருவன்.

சுஜா பகிடியாக ஒருநாள் கேட்டாள் "ராஜன், என்ன ஊரிலையும் சைனீசுக்குப் பக்கத்திலையோ இருந்தனீங்கள்" என்று.

சுஜாவின் நக்கல் அவனுக்கு ஒருபோதும் விளங்குவதில்லை. முக்கியமாக சுஜாவை அவனுக்குப் பிடிப்பதில்லை. கலாவின் அக்கா மகள். கலாவால் வளர்க்கப்பட்டவள். தனது சொந்த வீடு போல் அடிக்கடி வந்து போவாள். அதைத் தடுப்பதற்கான அதிகாரம் ராஜனிடம் இல்லை.

புது வீடு. பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்தார்கள் ராஜனும், கலாவும். தாம் அலங்காரம் செய்தாலும் முழுநாளும் அந்த வீட்டில் வாழ்ந்து அனுபவிப்பது தனது பெற்றோரும், தனது சகோதரி வனஜாவுந்தான் என்று வீட்டுக்கு வரும் சொந்தங்களுக்குப் பெருமையாகத் தனது பெருந்தன்மையை அவன் அடிக்கடி சொல்லிக்காட்டுவான். மகன் வாங்கி விட்டிருந்த பெரிய வீட்டில் வெளியில் நடக்கப் போக முடியாத கடும் குளிர் காலங்களில் தாம் நன்றாகவே நடந்து திரிவதாக அப்பாவும் அம்மாவும் பெருமைப்படுவார்கள்.

"அப்பா ஒண்டுக்குப் போனால் சிந்திப் போட்டு வாறார், மணக்குது ஒருநாளைக்கு ரெண்டு தரமாவது வோஷ் ரூமைத் துடைச்சு விடுங்கோ" ராஜன் அம்மாவிடம் கேட்டுக் கொண்டான்.

வனஜா துடைப்பாள். விடிய ராஜனின் மகன் சந்தோஷை பள்ளிக் கூடத்திற்கு கொண்டு போய் விட்டு வருவாள். குளிர் இல்லாவிட்டால் பின்னேரம் அப்பா அவனைக் கூட்டிக்கொண்டு வருவார். குளிர் காலங்களில் வனஜா போய் வருவாள். ஒவ்வொருநாளும் ஐந்து அறைகளுக்கும் வைக்கூம் பிடிப்பது, அம்மாவுக்குச் சமையலுக்கு உதவி செய்வது, பின்னேரங்களில் அப்பா, அம்மாவோட சேர்ந்து தமிழ் சீரியல்



பார்ப்பது என்று அவள் பொழுது போய் விடும். வனஜாவோடு எல்லோருமே மிகவும் அன்பாக இருந்தார்கள். "வேணுமெண்டா உங்கட வோஷ் ரூமைக் கழுவுங்கோ, எங்கட அறைக்குள்ள இருக்கிறதை நான் வேலையால வந்து கழுவுறன். ஒவ்வொருநாளும் வைகூம் பிடிக்கத் தேவையில்லை கிழமைக்கு ஒருக்காப் பிடிச்சாப் போதும்" கலா எத்தினையோ தரம் சொல்லிப் பார்த்துவிட்டாள் வனஜா கேட்பதாயில்லை. அவர்கள் வீடு வனஜாவின் கவனிப்பில் மிகவும் சுத்தமாக இருந்தது.

ஊரில் இருக்கும் போது விடுபட்டுப் போன அனைத்துச் சந்தோஷங்களையும் ஓடிப்பிடித்து அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் ராஜன் குடும்பத்;தினர். கோயில், கலியாணம், சாமத்தியச் சடங்கு, பிறந்தநாள் கொண்டாட்டம், தமிழ் திரைப்படம், ஊர்ச் சந்திப்பு அனைத்தையும் ஒன்று விடாமல் ஓடியோடி அனுபவித்தார்கள். வனஜா இழுபட்டாள். அனைத்திற்கும் குடும்பத்துடன் இழுபட்டாள்.

"ஏய் வனஜா, எவ்வளவு நாளாச்சுக் கண்டு, எங்க உம்மட அவர் வரேலையே?, எத்தினை பிள்ளைகள்? போகும் இடங்களில் கேள்விகள். வனஜா ஒற்றைச் சிரிப்போடு அவர்கள் பிள்ளைகளை இழுத்துக் கொஞ்சுவாள், சுகம் கேட்பாள். ராஜனும் அவன் பெற்றோரும் ஒன்றையும் புரிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்ளாமல் வாழப்பழகியிருந்தார்கள். கலாவைத் தவிர வனஜாவின் சங்கடத்தை யாரும் கண்டு கொண்டார்களா என்பது சந்தேகந்தான்.

கலா ராஜனைக் காதலித்துக் கலியாணம் செய்து கொண்டாளே தவிர, அவன் குடும்பம் கனடா வந்த பின்பு அவர்களின் வாழ்க்கை முறை கலாவிற்குப் புரியாத புதிராக இருந்தது. ராஜன் கூட மாறிவிட்டான். வனஜா பற்றிய அவர்களது அலட்சியம் கலாவை மிகவும் சித்திரவதை செய்தது. வனஜா அவளோடு அன்பாக இருந்தாலும், தான் ராஜனைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டது வனஜாவிற்கு ஒரு திருமணத்தை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு நிச்சயமாகத் தடையாக இருந்திருக்கும். வனஜா மனதுக்குள் தன்னை வெறுக்கக் கூடும் என்ற பயம் அவளை வனஜாவிடம் அதிகம் அன்பாக இருக்க வைத்தது.

• • •

ஒரு முழுமையான சேர்க்கைக்குப் பின்பு களைத்துப் போய் குறட்டை விடும் ராஜனை முழங்கையால் இடித்து எழுப்பி ஒருநாள் கலா கேட்டாள்

"வெட்கமாய் இல்லை உங்களுக்கு, ஒரு கிழமையில ரெண்டு மூண்டு தரம் தேவைப்படுது உங்களுக்கு, ஆனால் வனஜாக்கா பற்றி"



படிப்பகம்

www.padippakam.com

"ப்ச் திரும்பித் தொடங்காதேம் எனக்குக் களைப்பாய் இருக்கு நாளைக்கு வேலையெல்லே"

"வனஜான்ர வாழ்க்கைக்கு நீங்கள் ஒரு முடிவு காணமட்டும் நான் இனித் தனியத்தான் படுக்கப் போறன்" கலா போர்க் கொடி தூக்கினாள்.

கலங்கிப் போன ராஜன், வனஜாவைப் பட்டுச்சீலை உடுத்தி விதவிதமாகப் படம் எடுத்து, கல்யாண புரோக்கரிடம் கொடுத்தான். விவாகரத்துச் செய்தவர்கள், மனைவியை இழந்தவர்கள், ஏதோ ஒரு காரணத்திற்காகக் கலியாணமே செய்யாமல் இருந்தவர்கள். காலம் ஓடியதுதான் மிச்சம். அதன் பின்னர் அவளுக்கு வாய்த்தது அவ்வளவுதான் என்று ஒரேயடியாகக் கைவிட்டு விட்டார்கள்.

கலா கர்ப்பமாக இருந்த போது ஒருநாள் சாப்பாட்டு மேசையில் அவளுக்குப் பார்த்துப் பார்த்து சாப்பாடு போட்டாள் அம்மா. சுஜாவும் அன்று அங்கிருந்தாள். வனஜா உடம்பு சரியில்லை என்று சாப்பிடாமல் படுத்துவிட்டாள். ஒரு மருமகளை இப்பிடி அன்பாகப் பார்க்கும் மாமியை வேறு எங்கும் தான் பார்த்ததில்லை என்று அப்பா சொன்னார். "மருமகளைப் பார்க்கிற ஆர்வத்தில மகளைக் கை விட்டிட்டீங்கள்" என்று சாப்பிட்டவாறே சுஜா சொன்னாள். சுஜா அடக்கம் தெரியாதவள். பெரியவர்களிடம் எதைக் கதைக்க வேணும் என்ற பக்குவம் இல்லாதவள். இந்தக் காலத்துப் பிள்ளை. இவ்வளவு நாளும் அவள் சொன்னதற்கெல்லாம் அவர்கள் அர்த்தம் கண்டது இப்படித்தான். ஆனால் அவள் இன்று சொன்னது எல்லோரையும் ஒரேயடியாகத் தாக்கியதால் ஒரு பயங்கர மௌனம் அங்கே குடிகொண்டது. அப்பா அவள் அபிப்பிராயத்தால் தாக்கப்பட்டது போல் அவளைப் பார்த்தார். அம்மா அவசரமாக ராஜனுக்கு சோறு போட்டாள். கலா மௌனமாக ராஜனையும், அப்பாவையும் பார்த்தாள். அவள் பார்வை பதிலுக்காகக் காத்திருந்தது. ராஜனுடன் இது பற்றிக் கதைத்துச் சண்டை பிடித்துக் களைத்து விட்டாள். மாமா, மாமியிடம் இது பற்றிக்கதைக்கும் தைரியம் அவளுக்கு இருக்கவில்லை. அனேகமாக வனஜா அந்த வீட்டில் உலாவிக் கொண்டிருப்பது கலாவை அதைப் பற்றிய கதையைத் தொடக்குவதற்குத் தடுத்திருக்கலாம்.

அப்பா தொண்டையைச் செருமிக் கொண்டு கண்களை ஒடுக்கிக் குரூரமாக சுஜாவைப் பார்த்த படியே "அவளுக்கு ஒண்டும் பொருந்தி வரேல, அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது" என்றார். உவளுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லத் தேவையில்லை என்பது போல் ராஜன் கொடூரமாக சுஜாவைப் பார்த்தான்.



"நாங்கள் ஏறாத கோயிலில்லை" என்றாள் அம்மா. "அவளுக்குக் கொடுத்து வைச்சது அவ்வளவுதான், அந்த நேரம் எங்களிட்ட வசதியுமிருக்கேலை, ஒண்டும் சரியா வரேலை" என்றாள் மூக்கைச் சீறிய படியே. மௌனமாக இருந்த கலா "அது சரி மாமா இப்பதான் நல்ல வசதியா இருக்கிறமே" தொண்டையில் முள்ளுச் சிக்கிக் கொண்டது போல் அவள் வார்;த்தைகள் விக்கி விக்கி வந்தது. அப்பா ஏதோ பெரிய பகிடியைக் கேட்டு விட்டது போல் "இந்த வயசிலையோ" என்று விட்டுச் சிரித்தார். சுஜா கதிரையைத் தள்ளிக் கொண்டு எழுந்து போய் விட்டாள்.

• • •

ஒருநாள் மாமி தனியே வீட்டில் இருக்கும் போது, கலா மீண்டும் வனஜா பற்றிய கதையைத் தொடங்கினாள். "ஏன் மாமி வனஜாவை இப்பிடியே வைச்சிருக்கப் போறீங்களே?"

மாமியின் முகம் சினத்தால் சுருங்கியது. சந்தோஷமாக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் எங்களை இடையிடையே குற்ற உணர்வைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றாள் என்று கலா மேல் கோவம் வந்தது. "ஏன் தனக்குக் கலியாணம் வேணும் எண்டு வனஜா உன்னை எங்களோட கதைக்கச் சொன்னவளே" வெடுக்கென்று கேட்டாள் மாமி.

கலா திகைத்துப் போக, "எனக்கு முப்பத்தெட்டு வயசில சுகமில்லாமல் நிண்டிட்டுது, அவளுக்கு இப்ப நாப்பத்தைஞ்சு வயசாகுது, ஒழுங்கா வருகுதோ தெரியாது, இனிக் கலியாணம் கட்டி என்ன பிரியோசனம்? பிள்ளையும் தங்காது உடம்பும் வத்திப் போயிருக்கும் உணர்ச்சியும் இருக்காது" என்று விட்டு எழ முயன்ற மாமியைத் தடுத்து நின்ற கலா, "மாமி படுக்கிறதுக்கும், பிள்ளைப் பெறுறதுக்கும் மட்டுமே கலியாணம், அதுக்கு மேல எத்தினையோ இருக்கு, அதுக்கு வனஜாக்கு ஒரு நல்ல துணை தேவை" என்றாள்.

"அதுக்கு மேல என்ன இருக்கு? துணை வேணுமெண்டால் அதுக்குத்தான் நாங்கள் இருக்கிறமே, இதை விட நல்ல துணை எங்கையிருந்து வரப்போகுது" சொன்னபடியே கலாவைத் தள்ளாத குறையாக எழுந்து சென்றுவிட்டாள்.

உடம்பை அலட்சியமாக அசைத்து அசைத்துச் செல்லும் மாமியின் பின்புறத்தைப் பார்த்த படியே நின்ற கலா, அறுபது வயது கடந்த பிறகும் படுக்கையறைக்குள் அவள் அடிக்கும் கூத்தை அருவருப்போடு நினைத்துப் பார்த்தாள்.

• • •



படிப்பகம்

www.padippakam.com

ராஜனின் மாமா மகள் கவிதாவிற்குக் கலியாணம். சின்ன வயது. படிப்பு முடியு முன்பே நல்ல இடத்திலிருந்து கேட்டு வந்திருந்தார்கள். மாமா வசதியற்றவர். தொடர்மாடிக் கட்டிடத்தில் வசிப்பவர். எனவே ராஜனின் வீடு பொம்பிளை வீடாக மாறியது. சொந்தங்கள் அடிக்கடி வீட்டிற்கு வருவதால் வீடு கலியாணக் களை கட்டியது. கவிதாவின் அதிஸ்டம் முக்கிய தலைப்பாகப் பல முறை அலசப்பட்டது. கலியாணமான பெண்கள் தங்கள் காதல் கதைகள், தாங்கள் பொம்பிளைப் பார்க்கப்பட்ட நாள், எதிர்பார்ப்புக்கள், நிராகரிப்புக்கள் அங்கீகரிப்புக்கள் பிரவச வேதனை, உடல் மாற்றங்கள், மார்பகங்களில் பால் கட்டிக்கொண்டது, பால் வற்றிப் போனது என்று அங்கு தொட்டு இங்கு தொட்டுக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கவிதாவின் அம்மா

"வனஜா கெட்டிக்காறி இதுகளுக்க ஒண்டும் மாட்டுப்படாமல தப்பீட்டாள்" என்றாள்.

இன்னுமொருத்தி "உண்மைதான் அக்கா இந்த ஆம்பிளைகளோட இழுபடுகிறதெண்டாச் சும்மாவே எனக்கு காணும் எண்டு கிடக்குது" என்றாள் வெக்கத்தோடு.

"என்ன, மனுசன் இரவிரவாக் கரைச்சல் படுத்துதே" என்று விட்டுச் சிரித்தாள் இன்னுமொருத்தி

அதுவரை பொறுமையோடு இருந்த கலா "அக்கா இஞ்ச ஒருக்கா வாங்கோ" என்று வனஜாவை அந்த இடத்திலிருந்து அடுத்த அறைக்குக் கூட்டிக்கொண்டு போனாள். "எனக்குக் கொஞ்சச் சாமான்கள் வாங்க இருக்குது வாறீங்களே ஒருக்கா தமிழ் கடைக்குப் போயிட்டு வருவம்?"

வனஜாவிற்கு சிரிப்பாக வந்தது

பெண்ணே எத்தனை வருடங்கள்

எத்தனை கேள்விகள்

அவமானங்கள்

ஏமாற்றங்கள்

எள்ளல்கள்

உன்னால் எவ்வளவு காலம்தான் என்னைக் காக்கமுடியும்?

வனஜா கலாவைப் பார்த்துப் புன்னகைத்தாள். கலா தாக்குண்டவளாய் மறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஆண்கள் ஒரு கூட்டமாய் வேறு ஒரு மூலையில் தமக்குத் தெரிந்த ஒரே தலைப்பான இலங்கை அரசியல் பற்றி கதை அளந்து



கொண்டிருந்தார்கள். வனஜா வழமை போல் ஒருவரின் உரையாடலிலும் கலந்து கொள்ளாமல் அவர்களுக்குத் தேனீர் கொடுப்பது, சாப்பிட ஏதாவது கொடுப்பது என்று சுழன்று கொண்டிருந்தாள். இலங்கை அரசியல் பற்றி ஆண்களோடு சேர்ந்து கொண்டு அவளால் கதைக்கத்தான் முடியுமா? இல்லாவிட்டால் பெண்களோடு சேர்ந்து கொண்டு பெண் பார்க்கப்பட்ட நாள் பற்றியோ, பிள்ளைப்பேறு, போடப்பட்ட தையல் பற்றியோ அவளால் அலச முடியுமா? உரு அற்ற நிழல்போல் அவள் அலைந்து கொண்டிருந்தாள்.

• • •

ஒருநாள் உடம்பு சரியில்லாமல் போனதால் கலா வேலைக்குப் போகவில்லை. உடம்பு சரியில்லையோ இல்லாவிட்டால் மனம்தான் சரியில்லையோ என்ற சந்தேகம் வனஜாவிற்கு.

ராஜன் வேலைக்குப் போகும் வரை அனுங்கியபடியே கட்டிலில் கிடந்தவள், ராஜன் வேலைக்குப் போனதும் சந்தோஷைப் பள்ளிக்கூடம் கொண்டு போய் விட்டுவிட்டு, அப்பாவையும், அம்மாவையும் மாமா வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வந்தாள். வனஜா குசினிக்குள் போனபோது கலா அவளைப் பின்தொடர்ந்தாள். சமையல் தொடங்க இருந்த வனஜாவின் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு வந்து சோபாவில் இருக்கச் செய்து தானும் பக்கத்தில் இருந்தாள். வனஜா கேள்விக் குறியோடு அவளைப் பார்த்தாள். கலாவின் கண்கள் கலங்கியிருந்தது. தொண்டை அடைக்க அசட்டுச் சிரிப்பு சிரித்தவள் செருமியபடியே

வனஜாவின் முகத்தைப் பார்த்தாள் "அக்கா உங்களோட கொஞ்சம் மனம் விட்டுக் கதைக் வேணும். அதுதான் நான் இண்டைக்கு வேலைக்கு லீவு போட்டனான்"

"என்ன கலா ஏதும் பிரச்சனையே"

"வனஜா என்ன இது எவ்வளவு காலத்துக்கு இப்பிடியே"

வனஜா குழம்பிப் போனாள். நெருப்புச் சுட்டு விட்டது போல் திடுக்கிட்டது அவள் உடம்பு. சில விஷயங்கள் பற்றிக் கதைக்கக் கூடாது. ஏன் அது நடந்தது என்று ஒருவருக்குமே தெரியாது. அவள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று எல்லோரும் முடிவெடுத்துவிட்டார்கள். இனிக் கதைப்பதற்கு என்ன இருக்கிறது.

வனஜா மௌனமானாள். "அக்கா உங்களைப் பற்றி இஞ்ச ஒருத்தருக்கும் அக்கறையில்லை. எல்லாரும் சுயநலமா இயங்கிக் கொண்டிருக்கீனம்,



படிப்பகம்

www.padippakam.com

நீங்களும் ஒண்டிலையும் அக்கறையில்லாதமாதிரி இயங்கிக் கொண்டிருக்கிறீங்கள், நான் ராஜனோடை சண்டை பிடிச்சுப் பாத்திட்டன். வயசு போட்டுதெண்டு சாட்டுச் சொல்லுறார். அக்கா நாற்பத்தைந்து வயதில கலியாணம் கட்டுறது ஒண்டும் பிழையில்லை. நீங்களா யாரையாவது தேடிக்கொண்டால் தவிர இவேல் ஒண்டும் செய்யப் போறேலை, நீங்கள் ஏன் வீட்டுக்குள்ளேயே அடஞ்சு கிடக்கிறீங்கள், வேலைக்குப் போங்கோ,

இல்லாட்டி ஏதாவது படிக்கப் போங்கோ அப்பதான் நீங்கள் ஆரையாவது சந்திக்கலாம். இப்பிடியே இருந்தீங்களெண்டா இந்த வீட்டில இருந்து சமைச்சு, அப்பான்ர மூத்திரம் துடைக்கிறதோட உங்கட வாழ்க்கை முடிஞ்சிடும்

வனஜா மௌனமாக இருந்தாள். கலா எவ்வளவு முயன்றும் அவளிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. காதலிப்பது தவறென்ற மனநிலையில் ஊறி வளர்ந்தவள் அவள். இளம் வயதில் அவளை ஒருவரும் பெண் கேட்டு வரவில்லை. சீதனமாய் அள்ளிக் கொடுத்துக் கட்டி வைக்கும் அளவிற்கு அவர்களிடம் பணம் இருக்கவில்லை. இருந்ததையெல்லாம் கொடுத்து ராஜனை கனடா அனுப்பி வைத்தார்கள் அவன் எதையாவது செய்வான் என்ற நம்பிக்கையில். வந்த கடன் கொடுத்து முடித்தபோது ராஜனுக்கு முப்பது வயதாகி விட்டிருந்தது. கலாவோடு காதல் வேறு. வீட்டிற்குச் சொல்லாமல் கொள்ளாமல் கலியாணம் செய்து கொண்டான். குற்ற உணர்வு. வசதி வந்ததும் குடும்பத்தை கனடாவிற்குக் கொண்டு வந்து விட்டான். வனஜா கனடா வந்து இறங்கிய போது அவளுக்கு நாற்பது வயது. இனி அவளுக்கெதுக்குக் கலியாணம் என்று தாமே முடிவெடுத்து வாழ்ந்து வருகின்றார்கள்.

"வேண்டாம் கலா நான் இப்ப சந்தோஷமாத்தான் இருக்கிறன், நீங்கள் கவலைப் படாதேங்கோ" சொல்லி விட்டு குசினிக்குள் எழுந்து போய் விட்டாள்.

கலா அவளைத் தொடர்ந்து போனாள். "ஏன் நீங்கள் இப்பிடித்தனியா இருக்க வேணும், நான் யாரைவாவது பாக்கிறன் நீங்கள் ஓம் எண்டு மட்டும் சொல்லுங்கோ"

" நான் எங்கை தனியா இருக்கிறன்" சினந்தவள் "கலா ப்ளீஸ் நான் உங்களோட இருக்கிறது பிடிக்கேலை எண்டாச் சொல்லு நான் எங்கையாவது போறன்".



"போ போ வனஜா அப்பிடிப் போனாலாவது நீ உன்ர விருப்பத்துக்கு இருப்பாய்..நீ யாரையாவது சந்திப்பாய்.. இப்பிடியிருந்தாயெண்டா இதுக்குள்ளையே உன்ர வாழ்க்கை முடிஞ்சிடும்"

வனஜா கலாவை முறைத்துப் பார்த்தாள் பின்னர் தன் அறைக்குள் போய் கதவைப் பூட்டிக்கொண்டாள்.

அதன் பிறகு கலா வனஜாவிடம் எதுவும் கேட்கவில்லை.

கனடாவில் வருடங்கள் பாய்ந்து பாய்ந்து கடந்து கொண்டிருந்தன. சுஜா ஒரு வெள;ளைக்காறனைக் காதலித்து கலியாணம் செய்து கொண்டாள். தனக்கு இது முதலியேலே தெரியும் என்று நக்கலாகச் சிரித்தான் ராஜன். அவனது பகிடி கலாவிற்கு விளங்கவில்லை. பெண்கள் தாமாகவே துணையைத் தேடிக்கொள்வது தவறு என்பதில் இன்றும் உறுதியாக இருந்தான் ராஜன். கலா குடும்பம் பற்றி எப்போதுமே ஒரு இளக்காரம் அவனுக்கு. கலியாணம் செய்து கொண்டதும் முதலில் கணவனோடு கலாவைப் பார்க்க வந்த சுஜா, வனஜாவின் கையால் நூடில் செய்யச் சொல்லிச் சாப்பிட்டு விட்;டுப் போனாள். போகும் போது "கொஞ்சமாவது சுயநலமாக இருக்கப் பழகுங்கோ வனஜாக்கா" என்றாள். அதன் பிறகு சுஜா கலா வீட்டிற்கு வருவதை நிறுத்திக் கொண்டாள். ராஜனையும் அவனது பெற்றோரையும் தன்னால் இனிமேலும் சகித்துக் கொள்ள முடியவில்லை என்று அவள் கலாவிற்கு தொலைபேசியில் அழைத்துக் கூறியிருந்தாள்.

• • •

ராஜனின் சொந்தம் ஒன்று லண்டனிலிருந்து கனடா குடிபெயர்ந்து ராஜன் வீட்டில் தங்கியது.

ராஜனின் அப்பா அம்மாவின் வயதில் ஒரு தம்பதியும், ராஜனிலும் இரண்டு வயது குறைவில் சித்தார்தனும், இருபது வயதில் கௌரியும் வந்திருந்தார்கள். வந்த உடனேயே கௌரி

வனஜாவுடன் ஒட்டிக்கொண்டு விட்டாள். அவளின் நகைச்சுவையான கதை வனஜாவிற்குக் கலகலப்பாக இருந்தது. சித்தார்த்தன் எப்போதும் சிகரெட்டும் கையுமாக, குழம்பிய தலையுடன் இருந்தான். அவன் வாயிலிருந்து எப்போதுமே தத்துவங்கள் கொட்டியபடியிருக்கும். அவன் கலியாணம் பற்றிக் கேட்டால் பெரிதாக ஒரு லெக்ஷர் அடிப்பான். "கட்டுற பொம்பிளை பெரிய வீடு, கார் வேணுமெண்டு அதிகாரம் பண்ணினால் நான் இரவு பகலா வேலைதான் செய்ய வேணும், அது எனக்குச் சரி வராது, பிறகு டிவோசிலதான் போய் முடியும், அதோட



படிப்பகம்

www.padippakam.com

இப்பிடியான ஒரு உலகத்துக்கு இன்னுமொரு உயிரைக் கொண்டு வந்து சித்திரைவதைப் படுத்த நான் விரும்பேலை"

"ஏன் சித்தாத்தன் பிள்ளை வேண்டாம் எண்டு சொல்லுற ஒரு பொம்பிளையப் பாத்துக் கட்டலாம் தானே" கலா கேட்டாள்.

"அதென்ன பிள்ளை வேண்டாம் எண்டிற பொம்பிள, அப்பிடியும் ஒருத்தி இருப்பாளோ"

அம்மா அதிசயித்தாள்.

"அண்ணா புடு கள்ளன். ஊருக்கொரு கேர்ள் ப்ரெண்டா வைச்சுக் கொண்டு தத்துவம் கதைக்கிறார்" கௌரி கலாவின் காதுக்குள் குசுகுசுத்தாள்.

"கனடா வந்தாச்சு இனி நல்ல வடிவான பெட்டையா ஒண்டைப் பாத்துக் கட்டி வைப்பம்" ராஜன் சொல்ல, கலா முகத்தைச் சுழித்துக் கொண்டாள்.

"ஐயோ என்னை விட்டிடுங்கோ, முதல்ல வீடு எடுக்கிற அலுவலைப் பாப்பம், பிறகு நான் ட்ரவல் பண்ணிறதா இருக்கிறன், ரெண்டு மூண்டு மாசம் இஞ்ச நிக்க மாட்டன், போய் வந்துதான் வேலை ஏதாவது தேட வேணும்" என்றான் யன்னல் பக்கத்தில் போய் நின்று சிகரெட்டை ஒன்றைப் பற்றவைத்த படியே.

வனஜா எல்லோருக்கும் தேத்தண்ணி கொடுத்தாள். சாப்பாடு விதம் விதமாய்ச் சமைத்தாள்.

சனிக்கிழமைகளில் எல்லோருமான டொரொன்றோவைச் சுற்றிப் பார்க்கப் போனார்கள். சித்தார்தன் வனஜா சமையல் பற்றிப் புகழும் போது வெட்கப்பட்டாள். சித்தார்த்தன் கவிதை சொன்னான். கலியாணம் செயற்கையான பரிசோதனைக் கூடம் என்றான். கடவுள் இல்லை என்று வாதாடினான்.

சுஜாவின் இடத்திற்குப் புதிதாக ஒருத்தர் வந்துவிட்டார் என்று ராஜன் கலாவிடம் படுக்கையில் சொன்னான். வீடு கலகலப்பாக இருந்தது. வனஜாவில் சிறிது மாற்றம் ஏற்பட்டதை ஒருவரும் கவனிக்கவில்லை.

சாப்பாட்டுப் பட்டியலில் சித்தார்தனுக்குப் பிடித்த சாப்பாடு அதிகம் காணப்பட்டது. பகல் நேரத்தில் சிகரெட்டை ஊதியபடியே சித்தார்தன் வனஜாவிற்கு இறைச்சி வெட்டிக்கொடுத்தான். சிகரெட் மணம் வனஜாவைக் கிறங்கச் செய்தது. கௌரி அண்ணனின் காதல் லீலைகள் பற்றி, மரக்கறி வெட்டிய படியே வனஜாவிற்கு நகைச்சுவையோடு சொல்ல



வனஜா வாய் விட்டுச் சிரித்தாள். வனஜா உணர்வுகள் அற்றவள். ஒட்டு மொத்தமாகக் குடும்பமே முடிவெடுத்திருந்ததால் சந்தேகத்திற்கு அங்கே இடமிருக்கவில்லை. கலா இருக்கும் போது மட்டும் வனஜா சிரிப்பதைக் குறைத்துக் கொண்டாள். கலா கெட்டிக்காறி தனது தடுமாற்றத்தை அவளால் உடனேயே அடையாளம் காண முடியும். கலாவை முதல் முதலாக இடைஞ்சலாக உணர்ந்தாள் வனஜா. எனக்குக் கிடைத்திருக்கும் அற்ப சுகம் இது. இதைக் கூட முழுமையாக அனுபவிக்க முடியாமல் கலா குறுக்கே நிற்கின்றாள் என்று வனஜாவிற்குத் தோன்றியது.

• • •

கௌரியை தமிழ் உடுப்புக் கடைக்குக் கூட்டிக்கொண்டு போகும் போது சித்தார்தனும் வந்தான். கௌரிக்கு ஒரு சீலை வனஜாவிற்கு ஒரு சீலை வாங்கிக் கொடுத்தான். சாப்பிடப் போனார்கள். நடந்து இடம் பார்க்கப் போனார்கள். எல்லாமே ஒரு கனவு போலிருந்தது வனஜாவிற்கு.

ராஜனிலும் விட இரண்டு வயது குறைவு சித்தார்தனுக்கு. அவன் மேல் காதலை வளர்த்துக் கொள்வது கேவலமாக அவளுக்குப் பட்டது. இருந்தும் மனம் அவள் கட்டளையை கடந்து காத தூரம் போய் விட்டிருந்தது. என்ன கலியாணமா செய்யப் போகிறேன். எங்களுக்குள் ஒரு உறவு வளர்கிறது. அவனுக்கும் என்னை நிச்சயம் பிடித்துத்தான் இருக்கின்றது. ஒருநாள் நான் அறிந்திரா சுகத்தை அது எனக்குத் தரப்போகிறது. அந்த ஒருநாள் அதிக தூரத்தில் இல்லை. அந்த ஒருநாள் போதும் நான் என் வாழ்க்கையின் மீதியை சந்தோஷமாகக் கழிப்பதற்கு. சித்தார்தனி;ன் கண்களில் அவள் காதலோடு கலந்த காமத்தைக் கண்டாள். சரி தவறு என்பதற்கு மேலால் அவள் உணர்வுகள் வளர்ந்து விட்டிருந்தன. பல வருடங்களுக்குப் பின் தன் அழகு மேல் முதல் முதலில் அவள் அக்கறை கொள்ளத் தொடங்கினாள். கர்ப்பம் கொள்ளாமல் இறுகிப் போய் இருக்கும் வயிறு. சற்று உயர்ந்து தொங்கும் பால் சுரக்காத முலைகள், தொடைகளின் நடுவே நரைத்த ஈரமற்ற உதிரும் சுருள் மயிர். மாதவிடாய் நின்று விட்டது. வனஜா சுருங்கிக் கொண்டாள். இந்த சதைப் பிண்டத்தை ஒருவன் விரும்புவானா? விரும்புவான். விரும்புகின்றான்.

அலுமாரியில் அடியிலிருந்த புதிய உடைகள் வெளியே வந்தன. நரையை மறைத்தாள். சிரித்தாள். சிரித்தாள். அவன் எங்கு கேட்டாலும் செல்வதற்குத் தன்னைத் தயாராக்கிக் கொண்டிருந்தாள். யாருக்குத் தெரியப் போகிறது. தெரிந்தால்தான் என்ன? யாருக்கு என்மேல் என்ன அக்கறை? முதல் முதலாய்த் தன் குடும்பத்தின் மேல் அவளுக்கு வெறுப்பு வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

சித்தார்த்தனைத் தவிர்த்து அனைவரையும் வெறுத்தாள். எப்பிடி முடிந்தது என் குடும்பத்தால். சீதனம் இல்லை. ஒருவரும் கேட்டும் வரவில்லை. எனவே இப்பிடியே பேசாமல் இருக்க வேண்டும். வேலைக்குப் போகட்டும், ஏதாவது படிக்கட்டும் என்று கலா சொன்னபோது ஒரு பதிலில் ராஜன் அவளை அடக்கி விட்டான். "அக்காவை உயிருள்ள வரை வைச்சு நான் பாப்பன் ஆரும் அதில தலையிட வேண்டாம்". வெளியே விட்டால் நான் யாரோடாவது படுத்திட்டு வந்து விடுவேன் என்ற பயம் அவனுக்கு.

உன்னால சாப்பாடு போட முடியும், உடுப்பு வாங்கித் தர முடியும். அதுக்குக்கு மேலால் எனக்கொரு தேவை இருக்கின்றது என்பது எப்பிடி உனக்குத் தெரியாமல் போனது ராஜன்?

இரவில் உன் அறையில் கட்டிலின் சத்தம் என்னை ஒன்றும் செய்யாது என்று எப்பிடி நம்பினாய்? அப்பா அம்மா கூட இப்பவும். ச்சீ எதையெல்லாம் என் மனசு நினைக்கிறது. எதுக்காக சித்தாத்தன் இங்க வந்தான்.

• • •

அன்று பள்ளிக் கூட விஷயமாக கௌரி வெளியே போயிருந்தாள். ராஜனுக்கும் கலாவுக்கும் வேலை. அப்பா அம்மாவோடு சித்தார்தனின் அப்பா அம்மாவையும் யாரோ சொந்தக்காறரைப் பார்க்க வென்று சித்தார்த்தன் கூட்டிகொண்டு போயிருந்தான். வனஜா வீட்டில் வேலைகளைச் செய்து விட்டு ரிவி பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று கதவு திறக்கும் சத்தம் கேட்டது. சித்தார்தன். கையில் ஒரு சாப்பாட்டுப் பொட்டலம். சிரித்த படியே "சமைக்காதேங்கோ நான் நல்ல சாப்பாடு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறன்" என்றான்.

வனஜாவின் மனம் கனமானது. "நீங்கள் அங்க சாப்பிடப் போறீங்கள் எண்டு" வனஜா தொண்டை வறள உளறினாள்.

"அப்பிடியெண்டுதான் போனனான், அங்க அப்பா அம்மான்ர வயசில ரெண்டு பேர் இருக்கீனம், அங்க இருந்து நான் என்ன செய்யிறது. நான் மெல்லமா வெளிக்கிட்டு வந்திட்டன். சரி போறனான் ஏதாவது ஸ்பெஷலா வனஜாக்கு சாப்பிட வாங்கிக் கொண்டு போவம் எண்டு நல்ல சைனீஸ் சாப்பாடு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறன்". வனஜாவின் கண்களை நேரடியாகப் பார்த்து விட்டு நெடுகலும் நீங்கள்தானே சமைக்கிறீங்கள்" என்றான்.

வனஜாவின் கால்கள் நடுங்கத் தொடங்கியது. இதுதான் நான் எதிர்பார்த்த அந்த நாள். நெஞ்சம் கனத்து உடல் படபடத்தது.



வருத்தத்திற்குக் கூட' ஆண் மருத்துவரை அணுகாத வனஜாவின் ஐம்பது வயது உடம்பை இன்று இவன் தொடப்போகின்றான். நான் என்ன செய்ய வேண்டும். இந்த முத்திய உடம்பு அவனுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தால்? அவள் உடல் எதிர்பார்ப்போடு தன்னைத் தளர்த்திக் கொண்டது. மனம் அலறியது. "என்னால் இனிமேலும் பொறுக்க முடியாது. என்னை அணைத்து விடு சித்தார்த்தா" கால்கள் தளர "ரீ போடட்டே என்றாள்"

"இ;ல்லைச் சாப்பிடுவமே நேரமாகுது" என்றான்

அவன் சொன்னதின் அர்த்தம் விளங்காமல் அவனைப் பார்த்தாள் வனஜா. சித்தார்த்தன் குசினிக்குள் போய் இரண்டு பீங்கானை எடுத்து வந்தான். மேசை மேல் வைத்து சாப்பாட்டைப் பிரித்தான். கிளாசில் தண்ணீர் வைத்தான். வனஜாவைச் சாப்பிடச் சொன்னான். கதிரையில் இருந்து சாப்பிடத் தொடங்கினான் சித்தார்த்தன்.

மௌனமாகச் சாப்பி;ட்டாள் வனஜா. சாப்பாடு முடிந்து தண்ணீர் குடித்து இனி என்ன என்பது போல் சித்தார்தனை அவள் பார்த்தாள். அவள் உணர்வுகள் வடிந்து போயிருந்தன. நெஞ்சின் கொதிப்பு குளிர்காணத் தொடங்கியது.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்த படியே சித்தார்த்தன் சொன்னான் "நான் ஒரு கேர்ளைச் சந்திக்கப் போக வேணும், அதுதான் அம்மா அப்பாக்கும் சொல்லாமல் அவசரமா வெளிக்கிட்டு வந்தனான். வரேக்க உங்கட நினைப்பு வந்தது. தனிய இருப்பீங்கள். சமைச்சீங்களோ தெரியாது அதுதான். சாப்பாடு நல்லா இருந்தது என்ன? கேட்டு விட்டுத் தனக்கு நேரமாகி விட்டதென்று அவசரமாக வெளியேறினான். கதவைப் பூட்டும் போது "இரவைக்கு அனேகமா வரமாட்டன்" என்றான்.

பிரமாண்டமான அந்த வீட்டில் தனியே விடப்பட்ட வனஜா, தனது ஐம்பதாவது வயதில் வாய் விட்டழுததை அந்த வீட்டின் சுவர்கள் கூடக் கேட்காதது போல் முகம் திருப்பிக் கொண்டன.

இனிப் பின்நேரம் ஆகும், வனஜா வழமை போல் சதீஸை பாடசாலையில் இருந்து அழைத்து வருவாள்.



படிப்பகம்

www.padippakam.com




## பிற வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிறத்தியாள் | பானுபாரதி | ரூ.50/- |
| 2. | நான் சந்தித்த மரணங்கள் | கானா விஜி | ரூ.40/- |
| 3. | எம்.ஜி.ஆர். கொலை வழக்கு | ஷோபாசக்தி | ரூ.110/- |
| 4. | புலி பாய்ந்தபோது இரவுகள் கோடையில் அலைந்தன | மஜீத் | ரூ.35/- |
| 5. | சேதுக் கால்வாய்த் திட்டமும் இராமேஸ்வரம் மக்களும் | குமரன்தாஸ் | ரூ.50/- |
| 6. | உலகமயத்திற்குப் பின் இந்தியா | அ.மார்க்ஸ் | ரூ.60/- |
| 7. | உள் ஒதுக்கீடு : சில பார்வைகள் | ம.மதிவண்ணன் | ரூ.40/- |
| 8. | காந்தியின் உடலரசியல் | ராமாநுஜம் | ரூ.20/- |
| 9. | வேலைக்காரிகளின் புத்தகம் | ஷோபாசக்தி | ரூ.64.99/- |
| 10. | 'ம்' | ஷோபாசக்தி | ரூ. 80/- |
| 11. | நமக்கிடையிலான தொலைவு (கவிதை) | மதிவண்ணன் | ரூ.35/- |
| 12. | ஆகவே நீங்கள் என்னைக் கொலை செய்வதற்குக் காரணங்கள் உள்ளன (கவிதை) | வசுமித்ர | ரூ.55/- |
| 13. | சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்-I | முனைவர் வளர்மதி | ரூ.55/- |
| 14. | சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்-II | முனைவர் வளர்மதி | ரூ.90/- |
| 15. | பெரியார் தலித்துகள் முஸ்லிம்கள் | அ.மார்க்ஸ் | ரூ.55/- |
| 16. | இந்துத்துவத்தின் இருள்வெளிகள் | அ.மார்க்ஸ் | ரூ.55/- |
| 17. | கடமை அறியோம் தொழிலறியோம் | அ.மார்க்ஸ் | ரூ.55/- |
| 18. | சொல்வதால் வாழ்கிறேன் | அ.மார்க்ஸ் | ரூ.50/- |
| 19. | கற்பிதங்களின் தேசம் | குமரன்தாஸ் | ரூ.55/- |
| 20. | வெளிச்சங்களைப் புதைத்த குழிகள் | மதிவண்ணன் | ரூ.35/- |
| 21. | அதிகாரத்தை நோக்கி உண்மைகளைப் பேசுவோம் | அ.மார்க்ஸ் | ரூ.45/- |
| 22. | புத்தம் சரணம் | அ.மார்க்ஸ் | ரூ.50/- |
| 23. | விலகி நடந்த வெளிகள் | அ.மார்க்ஸ் | ரூ.65/- |
| 24. | உள் ஒதுக்கீட்டை விழுங்க ஊர்ந்து வரும் பாம்புகள் | மதிவண்ணன் | ரூ.8/- |
| 25. | மீள்கோணம் | அழகியபெரியவன் | அச்சில் |
| 26. | ஜாதியற்றவளின் குரல் | ஜெயராணி | அச்சில் |
| 27. | அம்பேத்கர் வெளியிட்ட தேர்தல் அறிக்கை | | அச்சில் |








படிப்பகம்